வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959

Reg. No. : P. 1632

விலை ரூ. 30/=

ஈழநாடு
Eelanadu
வீர மலர்

Email : news@eelanadu.lk மலர் : 06 27.07.2025 ஞாயிற்றுக்கிழமை இதழ் : 207 பக்கங்கள் : 16



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
MoneyGram. money transfer — மனிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

# மாகாண சபைத் தேர்தலை நடத்தி தமிழருக்கு அதிகாரம் வழங்குங்கள்!

## அரசுக்கு எதிரணியினர் சவால்

கொழும்பு, ஜூலை 27

**"மாகாணசபை முறைமையென்பது வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கப்பட்ட வாய்ப்பாகும். எனவே, அத்தேர்தலை நடத்தி மக்களுக்கு அதிகாரத்தை வழங்கவேண்டும்." _ என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.**

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-


மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள் ஜனாதிபதி செலயகத்துக்கு அழைக்கப்பட்டுள்ளனர். தொடர்ந்து பணியை முன்னெடுக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் மாகாணசபைத் தேர்தலை நடத்தாமல் இருப்பதற்கு அரசு முயற்சிக்கின்றதா என்ற சந்தேகம் எழுகின்றது.

மக்கள் பிரதிநிதிகளின் வேலையை அரசாங்க அதிகாரிகளுக்கு செய்ய முடியாது. எனவே, மக்கள் பிரதிநிதித்துவம் அவசியம்.

உள்ளாட்சிசபைத் தேர்தல் முடிவுகளுக்கு அஞ்சியா மாகாணசபைத் தேர்தலை நடத்துவதில் அரசாங்கம் பின்வாங்குகின்றது என்ற சந்தேகம் எழுகின்றது. முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை நடத்துமாறு அரசாங்கத்தக்கு சவால் விடுகின்றோம்.

குறிப்பாக வடக்கு, கிழக்கு மக்களுக்கு வழங்கிய ஒரு வாய்ப்பு தான் மாகாண சபை முறைமை

15



## தமிழ்த் தேசிய வீரர்கள் தினம் யாழ்ப்பாணத்தில் அனுஷ்டிப்பு!

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 27

1983 ஆம் ஆண்டு வெலிக்கடை சிறைச்சாலையில் படுகொலை செய்யப்பட்ட தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) முக்கியஸ்தர்களின் 42 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நேற்று இடம்பெற்றது.

நேற்று பிற்பகல் யாழ்ப்பாணத்தில் உள்ள தந்தை செல்வா அரங்கில் குறித்த நிகழ்வு இடம் பெற்றது.

15

## இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரி வடக்கு-கிழக்கில் நேற்று போராட்டம்

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம்,ஜூலை 27

நீண்ட காலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரி நேற்றுக் காலை வடக்கு, கிழக்கின் அனைத்து மாவட்டங்களிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

15




## சர்வதேச விமான நிலையங்களில் பனை உற்பத்தி வகைகள் காட்சிக்கு!

### அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர்

யாழ்ப்பாணம்,ஜூலை 27

"இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களில் பனை உற்பத்திப்பொருட்களை காட்சிப்படுத்துவதற்குரிய காட்சி அறைகளைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." - என்று கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்தார்.

அத்துடன், ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க எளிமையானவர். மக்களால் அதிகம் விரும்பப்படும் தலைவர். எனவே, மக்கள் எதிர்பார்க்கும் எதிர்காலத்தை அவர் நிச்சயம் வழங்குவார் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்

15

## தையிட்டி விகாரையை அகற்றுவதுதான் தீர்வு!

### கஜேந்திரகுமார் திட்டவட்டம்

கொழும்பு, ஜூலை 27

யாழ்ப்பாணம், தையிட்டி விகாரை அகற்றப்படுவதே அங்கு நிலவும் பிரச்னைக்குத் தீர்வு என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.

சட்டவிரோதமாக இராணுவத்தினர் இந்த விகாரையை நிர்மாணித்தமை இன நல்லிணக்கத்துக்கு பாதகமா அல்லது விகாரை இல்லாத

15

## உள்ளக விசாரணை கோரவில்லை!

### கூறுகின்றார் சீ.வீ.கே. சிவஞானம்

கொழும்பு, ஜூலை 27

தங்களது தரப்பு உள்ளக விசாரணையை கோரவில்லை என்றும் போர் குற்றங்கள் தொடர்பாகவும் இனப்படுகொலை தொடர்பாகவும் ஜனாதிபதியிடம் சுட்டிக்காட்டி உள்ளதாகவும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

செம்மணி தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தை

15

## 11 எலும்புக்கூடுகள் நேற்று அடையாளம்

- த.பிரதீபன் -

யாழ்ப்பாணம், ஜூலை 27

அரியாலை செம்மணி சித்துப்பாத்தி பகுதியில் உள்ள இரண்டு மனித புதைகுழிகளில் இருந்தும் நேற்று 11 மனித எலும்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 09 மனித எலும்புக்கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பாக நேற்று ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த

15

## 3,100 பாடசாலைகளை மூட அரசாங்கம் முயற்சி!

கொழும்பு, ஜூலை 27

கல்வி சீர்திருத்தம் என்ற பெயரில் உலக வங்கியின் நிகழ்ச்சித் திட்டத்துக்கு அமைவாக 3100 பாடசாலைகளை மூடுவதற்குத் தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் முயற்சிப்பதாக மக்கள் போராட்ட முன்னணியின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர் துமிந்த நாகமுவ தெரிவித்துள்ளார்.

தற்போதைய ஜனாதிபதி படித்த தம்புத்தேகம பாடசாலையும் இதன் கீழ் மூடப்பட உள்ளதாக தமது கட்சிக்குத் தகவல் கிடைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கல்விச் சீர்திருத்தங்கள் தொடர்பான விளக்கங்களை மட்டுமே அரசாங்கம் தற்போது வழங்கியுள்ளது.

இன்னும் அறிக்கை எதுவும்

02

## 82 மருந்தகங்களின் உரிமம் இடைநிறுத்தம்

கொழும்பு, ஜூலை 27

நாடு முழுவதும் 82 மருந்தகங்களின் உரிமங்கள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த மருந்தகங்கள் தேவையான தரநிலைகளைப் பேணாத காரணத்தின் அடிப்படையிலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டின் கடந்த ஜனவரி முதல் கடந்த 18 ஆம்திகதி வரை, தேசிய ஔடதங்கள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபைக்கு 2,039 உரிமப் புதுப்பிப்பு விண்ணப்பங்கள் கிடைத்துள்ளன.

இவற்றில் 1,820 மருந்தகங்களுக்கு புதிய உரிமங்கள் வழங்கப்பட்டுள்ளன.

15

## கிணற்றடியில் ஆடை கழுவியவர் திடீரென மயங்கி வீழ்ந்து மரணம்!

யாழ்ப்பாணம், ஜூலை 27

யாழில் கிணற்றடியில் ஆடைகளைக் கழுவிக்கொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்துள்ளார். சுன்னாகம் - சுப்பிரமணியம் வீதியைச் சேர்ந்த சிவஞானம் சிவகுமார் (வயது 58) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

அவர் நேற்று மதியம் கிணற்றடியில் ஆடைகளை கழுவிக்கொண்டிருந்தார். இதன்போது திடீரென மயங்கி நிலத்தில் சரிந்துள்ளார்.

இதனை அவதானித்த அவரது மகன் அவரை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றார். இருப்பினும் அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்தனர்.

பின்னர் உடற்கூற்று பரிசோதனைகளுக்காக

15



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட்டோர் கொன்று புதைப்பு

## சர்வதேச விசாரணை நடத்த வேண்டும்: முன்னாள் எம். பி. கஜேந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 27

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோர், கடத்தப்பட்டோர் எல்லோரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்தார்.

அரசாங்கமானது தொடர்ச்சியாக கட்டமைக்கப்பட்ட இன அழிப்புகளை மேற்கொண்டு வந்து, 2009இல் அதன் உச்சக்கட்ட செயல்பாடாக சுமார் ஓர் இலட்சத்து 46 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் ஆயுதப்படையினராலே மிகக் கொடூரமாக கொன்றொழிக்கப்பட்டனர் எனவும் அவர் கூறினார்.

செம்மணியில் நேற்று நடைபெற்ற போராட்டத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"உணவுத்தடை மற்றும் மருந்துத் தடை என்பனவற்றை ஆயுதமாக பயன்படுத்தி இன அழிப்பு அரங்கேற்றப்பட்டது. இதன் பின்னர் கிட்டத்தட்ட 1980ஆம் ஆண்டுகளின் பிற்பாடு பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல இளைஞர்களும் யுவதிகளும் இராணுவத்தினராலும் அவர்களுடன் இணைந்து இயங்கிய துணை இராணுவக் குழுக்களினாலும் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் காணாமல் ஆக்கப்பட்டிருந்தனர்.

குறிப்பாக 1995 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்கு பிற்பாடு சந்திரிகா அரசாங்கத்தால் சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் மூலம் யாழ்ப்பாணம் ஆக்கிரமிப்புக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் 96ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் - யுவதிகளும் காணாமல் ஆக்கப்பட்டிருக்கின்றனர். இவ்வாறு காணாமல் ஆக்கப்பட்டோர் எல்லோரும் கொன்று புதைக்கப்பட்டிருக்கின்றார்கள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

இப்போது செம்மணியில் 100இற்கும் அதிகமான எலும்புக்கூடுகள் வெளி வந்திருக்கின்றன. இந்த புதைகுழியில் புதைக்கப்பட்டவர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டும் கடத்தப்பட்டும் சித்திரவதைகளுக்கும் பாலியல் வன்புணர்வுக்கும் உட்படுத்தப்பட்டு கொன்று புதைக்கப்பட்டவர்கள் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை.

இந்த இனப்படுகொலைக்கும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கும் உள்ளகப் பொறிமுறை மூலம் எந்த விதமான நீதியும் கிடைக்காது என்பது தமிழ் மக்களுடைய உறுதியான நிலைப்பாடு. எனவே எமக்கு எதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும். அது தொடர்பான தீர்மானமானது ஐ.நாவின் பொதுச்சபையில் நிறைவேற்றப்பட வேண்டும் என்பது எமது கோரிக்கையாக உள்ளது"- என்றார்.

(எ-05)



# சமுர்த்தி திட்டங்கள் குறித்து யாழில் முன்னேற்றக்கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

சமுர்த்தி வங்கி முகாமையாளர்களுடனான சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றக் கூட்டம் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எவ். சி. சத்தியசோதி தலைமையில் நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் கலந்து கொண்டு சமுர்த்தி அபிவிருத்தி வேலைத் திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்கள் குறித்து ஆராய்ந்தார்.

மேலும், சமுர்த்தி முகாமையாளர்களால் நிர்வாக ரீதியான செயல்பாட்டுக்கான கணினி மற்றும் இதர தேவைப்பாடுகள் தொடர்பான கோரிக்கைகள் அரசாங்க அதிபரிடம் முன் வைக்கப்பட்டன. இது குறித்து அரசாங்க அதிபர், சமுர்த்திப் பணிப்பாளர் நாயகத்துடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு முகாமையாளர்களின் கோரிக்கைகளை எடுத்துக் கூறி கலந்துரையாடினார். இந்தக் கோரிக்கைகளை இவ்வாண்டுக்குள் கட்டம் கட்டமாக நிவர்த்தி செய்வதாக பணிப்பாளர் நாயகம் தெரிவித்ததாக அரசாங்க அதிபரால் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் மாவட்டச் செயலக சமுர்த்தி முகாமையாளர்கள், மாவட்ட கண்காணிப்பு சமுர்த்தி முகாமையாளர், வங்கி முகாமையாளர்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

(எ)

# இனவழிப்புக்கு சர்வதேச நீதி கோரி முல்லைத்தீவில் நேற்று போராட்டம்




முல்லைத்தீவு, ஜூலை 27

நீண்ட காலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்புக்கு சர்வதேச நீதி கோரிய போராட்டமானது நேற்று முல்லைத்தீவில் நடைபெற்றது.

வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட செயலகம் முன்பாக இந்த போராட்டம் நடைபெற்றது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தபிசாளர் லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் ஜூட்சன், வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் கண்டுமணி லவகுசராசா, மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், சமூக செயல்பாட்டாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ)

# வெளிநாட்டவர்கள் கையூட்டல் வழங்காது முதலீடு செய்யலாம்

## அமைச்சர் விஜித ஹேரத்

கொழும்பு, ஜூலை 27

ஊழலற்ற அரசாங்கமே தற்போது உள்ளதாகவும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு இது சிறந்த சந்தரப்பம் என்றும், வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

இலங்கை வணிக சபையின் வருடாந்த மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

முதலீட்டாளர்கள் தற்போது அரசியல்வாதிகளுக்கு பணம் அல்லது கையூட்டல் செலுத்தாமல் தமது முதலீடுகளை ஆரம்பிக்க முடியும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, முதலீட்டாளர்களுக்கு உடனடியாக வரிச் சலுகை வழங்க முடியாது என்றும், அதற்கு சிறிது காலம் தேவைப்படுவதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கம் பொறுப்பேற்றதிலிருந்து, இலங்கையில் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமை ஸ்திரமடைந்து வருவதாகவும் அமைச்சர் விஜித ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார்.

(அ)

# கிளிநொச்சி வலயத்தில் ஆசிரியர் பற்றாக்குறை

கிளிநொச்சி, ஜூலை 27

கிளிநொச்சி வலய கல்விப் பணிமனை மற்றும் துணுக்காய் கல்வி வலயங்களில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுவதாகவும் விசேடமாக விஞ்ஞானம், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பவியல் போன்ற பாடங்களுக்கு அதிகமாக ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாக ஆசிரியர் சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

ஜோசப் ஸ்ராலின் நேற்று முன்தினம் கிளிநொச்சி தெற்கு வலய கல்வி பணிமனைக்கு பயணம் ஒன்றை மேற்கொண்டிருந்த நிலையிலேயே அவர் ஊடகங்களுக்கு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சில பாடசாலைகளை நடத்த முடியாத அளவில் ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதற்கு ஒரு தீர்வும் வழங்கப்படாத நிலைமை காணப்படுகின்றது. கிளிநொச்சி வலயத்தில் மாத்திரம் 75 பேர் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ளனர்.

ஆனால், 35 புதிய ஆசிரியர்களே இங்கு கடமைக்குத் திரும்பி வந்துள்ளனர். இதே போன்று முல்லைத்தீவு துணுக்காய் வலயம் போன்ற பகுதிகளில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்கள் பற்றாக்குறை காணப்படுகின்றது. அது மட்டுமின்றி கல்வியை முன்னோக்கிக் கொண்டு செல்வதற்கான வளங்களும் பற்றாக்குறையாக காணப்படுகின்றன"- என்றார். (எ)

## 3,100 பாடசாலைகளை...

வெளியாகவில்லை.

இலங்கை வரலாற்றில் ஒரு அரசாங்கம் ஒரு விளக்கக்காட்சியைப் பயன்படுத்தி நாட்டின் முழு கல்வி முறையிலும் முழுமையான சீர்திருத்தத்தை முன்மொழிந்திருப்பது இதுவே முதல் முறை.

கடந்த காலம் முழுவதும், இந்த நாட்டின் அரசாங்கங்கள் உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்தின் தேவைகளுக்கு ஏற்ப இந்த நாட்டில் கல்வியைச் சீர்திருத்தத் தயாராகி வருவதை நாங்கள் அறிவோம்.

ரணில் - மைத்திரி நல்லாட்சி அரசாங்கத்தின் போது கல்வி அமைச்சராக இருந்த அகிலவிராஜ், கல்வி சீர்திருத்தச் செயல்முறைக்குத் தயாரானார்.

அதன் பிறகு கோட்டாபய அரசாங்கம், உபாலி சேதார அறிக்கை மற்றும் கொத்தலாவல பட்டப் படிப்பு சட்டத்தைக் கொண்டு வந்தது.

அதன் பிறகு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வின் அரசாங்கம், கல்வி அறிக்கையைக் கொண்டு வந்தது.

இந்தத் திட்டங்கள் அனைத்தும் புதிய தாராள வாத சந்தைக்குத் தேவையான பணியாளர்களை உருவாக்குவதற்கும் கல்வியைப் பண்டமாக்குவ தற்கும் குறைந்த விருப்பத்தையே கொண்டிருந்தன. தற்போது, அதே திட்டத்தைத்தான் தற்போதைய கல்வி அமைச்சர் ஹரிணி அமரசூரிய, உலக ளாவிய கருத்து என்ற அழகான வார்த்தையுடன் முன்வைத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தனது உரையில், அனுர குமார திசாநாயக்க இலங்கையில் குறைந்த எண் ணிக்கையிலான பிள்ளைகளைக் கொண்ட பாடசாலைகள் குறித்து மிகுந்த உணர்ச்சியுடன் பேசினார். 100 இற்கும் குறைவான பிள்ளைகளைக் கொண்ட 3141 பாடசாலைகள் இருப்பதாக அவர் கூறினார். சில பாடசாலைகளை மூடவும், சில பாடசாலைகளை இணைக்கவும், தேவையான இடங்களில் புதிய பாடசாலைகளை நிறுவவும் அவர்கள் தயாராக உள்ளனர். முதல் பார்வையில், இந்த அறிக்கையின் ஆபத்தை யாரும் புரிந்து கொள்ளவில்லை.

கருணாசேன கொடிதுவக்கு முன்னர் பாராளு மன்றத்தில் அநுர திசாநாயக்கவின் உரையைப் போன்ற ஒரு உரையை நிகழ்த்தியுள்ளார். இலங்கை யில் 3000 பாடசாலைகளை மூடுவதற்கான திட்டத்தை முதன்முதலில் கொண்டு வந்தவர் அவர்தான்.

அந்த நேரத்தில், மக்கள் விடுதலை முன்னணியும் அந்தத் திட்டத்திற்கு எதிராகப் போராடியது. அப்போது பாடசாலைகளை பாதுகாப்பதற் காக, பாடசாலை பாதுகாப்பு இயக்கம் உருவாக்கப் பட்டது. அவர்கள் அனைவரும் இப்போது பாட சாலை களை மூடுவதற்கான உலக வங்கியின் திட் டத்தைச் செயல் படுத்தத் தயாராகி வருகின்றனர்-என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைப்புக்கான முதற்கட்ட பணி ஆரம்பம்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 27

புதிய அரசமைப்புக்கான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எமது ஆட்சி காலத்துக்குள் புதிய அரசமைப்பு திருத்தங்களை மேற்கொள்வோமென பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் வெள்ளிக்கிழமை வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில், புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர் அஜித் பி பெரேரா எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே பிரதமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

"புதிய அரசமைப்பு ஒன்று நாட்டுக்குத் தேவையாகும். அது இந்த நாட்டின் அடிப் படை சட்டமாகும். இதனால் அதில் திருத்தம் மேற்கொள்ளும் போது அது தொடர்பில் ஆராயாமல், விசேட நிபுணர்களுடன் கலந்துரையாடாமல், பிரஜைகள் குழுக்களின் கருத்துக்களுக்கு செவிசாய்க்காமல் குறுகிய காலத்தில் மேற்கொள்வது சாத்தியப்படாத ஒன்றாகும்.

விசேடமாக தற்போது இருக்கும் சில கட்டளைகள், சட்டங்கள், ஒழுங்குவிதிகளில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டி இருக்கின்றன. அதனால் எமது அரசாங்கம் அது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன் பிரகாரம் புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பான ஆரம்பகட்ட வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அரசாங்கம் புதிய அரசமைப்பு திருத்தம் மேற்கொள்ளும்போது அனைத்துத் தரப்பினருடன் கலந்துரையாடி, அனைத்து தரப்பினருக்கும் செவிசாய்க்க நடவடிக்கை எடுத்துள்ளது. விசேடமாக மக்கள் மயமான அரசமைப்பாக புதிய அரசமைப்பு திருத்தப்பட வேண்டும் என்பதே எமது அரசாங்கத்தின் நோக்கமாகும். அதனால் புதிய அரசமைப்பு திருத்தம் தொடர்பில் சமூக கருத்தாடல் ஒன்றுக்கு திறந்துவிடப்பட வேண்டும், அதேபோன்று பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் கட்சிகள் மற்றும் பிரதிநிதித்துவப்படுத்தாத ஏனைய அரசியல் கட்சிகளின் கருத்துக்களுக்கும் செவிசாய்க்கப்படும்.

இதன் பிரகாரம் அரசாங்கம் வரைபு செய்யப்படும் புதிய அரசமைப்பு சமூகத்தில் அனைத்து தரப்பினரின் கருத்துக்களை மதித்து, வரைபு செய்யப்படுகின்ற, இதுவரை காலமும் உருவாகாத மக்கள் மயமான அரசமைப்பாக அமையும்"- என்றார். (எ)



## றேக் ஓட்டோ கண்காட்சி

யாழ்ப்பாணம், ஜூலை 27

றேக் ஓட்டோ கண்காட்சியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் நேற்று முன்தினம் காலை மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்தக் கண்காட்சியில் சிறப்பு விருந்தினர்களாக சினமன் குளோபல் பி. வி. ரி. லிமிடெட் முகாமைத்துவ பணிப்பாளர் திருமதி சோனல் வீரக்கொடி, டிமோ லங்கா சந்தைப்படுத்தல் பிரதி பொது முகாமையாளர் சாலக்கா போகோடா ஆகியோர் கலந்து கொண்டனர். (எ)

## முதல் காலாண்டில் 4. 8 சதவீத பொருளாதார வளர்ச்சி வேகம்

கொழும்பு, ஜூலை 27

நாட்டில் முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் 4.8 சதவீதமாகப் பதிவாகியுள்ளது. உற்பத்தி பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால் இவ்வாண்டு 5 சதவீத பொருளாதார வளர்ச்சி வேக இலக்கை அடைய முடியும். அவ்வாறு ஏற்பட்டால் 2028இல் கடனை மீளச் செலுத்தக் கூடிய வகையில் பொருளாதாரம் ஸ்திரமடையும் என பேராதனை பல்கலைக்கழக பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இவ்வாண்டு முதல் காலாண்டில் பொருளாதார வளர்ச்சி வேகம் 4. 8 சதவீதமாகும். எவ்வாறிருப்பினும் இவ்வாண்டு 5 சதவீத பொருளாதார வளர்ச்சியை அடைவதே அரசாங்கத்தின் இலக்காகும்.

முதலாம் காலாண்டில் கிடைக்கப் பெற்றுள்ள பொருளாதார வளர்ச்சி வேகத்தை அடிப்படையாக கொண்டு நோக்கும் போது இவ்வாண்டு அரசாங்கம் எதிர்பார்த்த இலக்கை அடைய முடியும் என்று நம்புகின்றோம்.

எவ்வாறிருப்பினும் இந்த இலக்கை அடைவதற்கு விவசாயம் உள்ளிட்ட சகல துறைகளும் உற்பத்தி பொருளாதாரத்தில் வளர்ச்சியடைய வேண்டும்.

அவ்வாறு உற்பத்தி பொருளாதாரம் வளர்ச்சியடைந்தால் 5 - 10 சதவீத பொருளாதார வளர்ச்சி வீதத்தை அடைய முடியும். இந்த இலக்கை அடைய முடியுமாக இருந்தால் 2028இல் கடனை மீளச் செலுத்தக்கூடியளவு சிறந்த பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும்" - என்றார். (எ)

## மாந்தை கிழக்கு செயலகத்தில் பிரதேச செயலாளர் மாநாடு



முல்லைத்தீவு, ஜூலை 27

முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் அதனோடு இணைந்த ஆறு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்களின் பங்குபற்றுதலோடு ஏழாவது பிரதேச செயலாளர் மாநாடு மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தின் ஒழுங்குபடுத்தலில் அரசாங்க அதிபர் அ. உமா மகேஸ்வரன் தலைமையில் தேசியக்கொடி ஏற்றலுடன் இந்த மாநாடு ஆரம்பமானது.

குறித்த பிரதேச செயலாளர் மாநாடானது மாதந்தோறும் சுழற்சி முறையில் பிரதேச செயலகங்களில் நடைபெற்று வருகின்றதோடு இந்த தடவை மாந்தை கிழக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

பிரதேச செயலக உத்தியோகத்தர்களால் தயாரிக்கப்பட்ட, பிரதேசங்களில் காணப்படும் தீர்க்கப்படாத மக்களின் பிரச்னைகளை கொண்ட விவரண காணொலி காட்சிப்படுத்தப்பட்டது.

பிரதேச செயலகங்களில் காணப்படும் குறை நிறைகளை கேட்டறிவதுடன் பிரதேச செயலகங்களில் காணப்படும் ஆளணி பற்றாக்குறைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டன.

இதில், முல்லைத்தீவு மாவட்ட செயலகம் மற்றும் ஆறு பிரதேச செயலகங்களைச் சேர்ந்த பதவி நிலை உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். (எ)

## நல்லூர் பிரதேச பண்பாட்டு விழா





யாழ்ப்பாணம், ஜூலை 27

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் நல்லூர் பிரதேச செயலகம் கொண்டாடிய 2025 ஆம் ஆண்டுக்கான பண்பாட்டுப் பெருவிழா நேற்று முன் தினம் கொக்குவில் செல்வ மஹால் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. உதயகுமார் யசோதா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் சிறப்பு விருந்தினர் களாக சிவபூமி அறக்கட்டளை நிறுவனத்தின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகனும் இராஜேஸ்வரி அறக்கட்டளை நிறுவுநர் செல்லத்துரை திருமாறனும் கௌரவ விருந்தினராக யாழ். மாவட்ட சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் திருமதி. சுகுணலினி விஜயரத்தினமும் கலந்து சிறப்பித்தனர்.

அமரர் குழந்தை ம. சண்முகலிங்கம் ஞாபகார்த்த அரங்கில் நடைபெற்ற இந்த ஆண்டுக்கான பண்பாட்டு விழா, பல்வேறுபட்ட கலை இலக்கிய விழுமியங்களையும் உள்ளடக்கியிருந்தன.

நாச்சிமார் கோவிலிருந்து பண்பாட்டுப் பேரணியுடன் ஆரம்பமான இந்த நிகழ்வில் தமிழ்த் தாய் வாழ்த்து, வரவேற்பு நடனம், மங்கல இசை, இசைச்சங்கமம், நாடகம் (மாருதப்புரவீகவல்லி) நடனம் (தமிழ் வணக்கம் - நல்லைக் கலாமந்தீர் நடனாலயம் ) இசை நாடகம் (சத்தியவான் சாவித்திரி) என்பன சிறப்பாக நடைபெற்றன.

மூத்த கலைஞர்களுக்கான "கலை ஞானச்சுடர் விருது" மற்றும் இளங்கலைஞர் விருதுகள் என்பன அரசாங்க அதிபரால் வழங்கப்பட்டன. (எ)

## 21 யானைகள் மீது துப்பாக்கிச் சூடு

### பிரதி அமைச்சர் தகவல்

பொலநறுவை, ஜூலை 27

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதிக்குள் 21 காட்டு யானைகள் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகியுள்ளதாக சுற்றாடல் பிரதி அமைச்சர் அன்டன் ஜயகொடி தெரிவித்தார்.

பொலநறுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"பலவித காரணங்களால் காட்டு யானைகள் உயிரிழக்கும் சம்பவங்கள் நாட்டில் அதிகரித்துள்ளன.

துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி காயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்த "பாததிய" காட்டு யானை உயிரிழந்த சம்பவம் நாட்டு மக்களை திரும்பி பார்க்க வைத்தது.

இதனால் காட்டு யானைகள் மீதான கவனம் அதிகரித்துள்ளது"- என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருந்தாளர் பற்றாக்குறையை நிரப்பாமல் மருந்தகங்கள் குறித்து கடும் நடவடிக்கை

## அரசு மீது எதிர்க்கட்சி தலைவர் சஜித் சாடல்

கொழும்பு, ஜூலை 27

நாடு முழுவதும் நிலவும் மருந்தாளர்களின் பற்றாக் குறையை நிரப்பாமல் மருந்த கங்கள் தொடர்பில் கடுமை யான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டுள்ளன என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற் றஞ்சாட்டினார்.

பாராளுமன்றத்தில் வெள் ளிக்கிழமை நிலையியல் கட டளை 27/2இன் கீழ் உரை யாற்றுகையிலேயே அவர் இவ் வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்,

"இலங்கையின் சுகாதாரத் துறையில் மருந்துச் சேவைகள் அத்தியாவசியமானதொரு அடித்தளமாக கருதி முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது நடைமுறையில் உள்ள 2015ஆம் ஆண்டின் 05ஆம் இலக்க புதிய மருந்து களை ஒழுங்குபடுத்தும் அதி கார சபைச் சட்டத்தின் மூலம் மருந்தகங்களுக்கு கடுமையான விதிமுறைகள் அறிமுகப்படுத் தப்பட்டாலும், மருந்தக உரி மையாளர்கள் மற்றும் மருந் தாளர்களின் வேண்டுகோளின் பேரில் சட்டத்தின் சில பிரிவு களை அமுல்படுத்துவது அப் போது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டதாகத் தெரி விக்கப்படுகிறது.

இருப்பினும், தற்போதைய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவு டன், மருந்தகங்கள் தொடர் பாக மீண்டும் கடுமையான விதிமுறைகளை பின்பற்ற தேசிய மருந்துகள் ஒழுங்கு முறைப்படுத்தும் அதிகார சபை நடவடிக்கை எடுத்துள்ளது. இதனால் பல மருந்தக உரிமை யாளர்களின் உரிமப் பத்திரங்க ளைப் புதுப்பிக்கும் நடவடிக் கைக்கு மறுப்பு தெரிவிக்கப்பட் டுள்ளதான தகவல்களும் முன் வைக்கப்படுகின்றன.

நாடு முழுவதும் மருந்தா ளுநர்கள் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்காமல், மருந்தகங்கள் மீது கடுமையான விதிமுறைகள் தொடர்ந்து விதிக்கப்படுவது குறித்து மருந்தக உரிமையாளர் கள் தங்கள் கவலையை வெளிப் படுத்துகின்றனர். எனவே, இந்த விடயத்தில் அரசாங்கத்தின் விசேட கவ னத்தை திருப்பும் நோக்கில் பின்வரும் கேள்வி களை நான் எழுப்புகிறேன்.

இலங்கையில் பதிவுசெய்யப் பட்ட மருந்தாளுநர்கள், பயிற்சி பெற்ற மருந்தாளுநர்கள் மற் றும் தற்போதைய மருந்தாளுநர் வெற்றிடங்களின் எண்ணிக்கை யாவை?

நாட்டில் காணப்படும் ஒட் டுமொத்த மருந்தக உரிமையா ளர்கள் தொடர்பான தகவல்க ளைக் கொண்ட அறிக்கையை இந்த சபையில் சமர்ப்பிக்க முடியுமா?

தற்போது பல்கலைக்கழக கட்டமைப்பில் இருந்து வரு டத்துக்கு வெளியேறும் மருந் தாளுநர்களின் எண்ணிக்கை யாது? இதன் பிரகாரம், தற் போது எத்தனை பட்டதாரி மருந்தாளுநர்கள் உள்ளனர்? வெளிவாரி மருந்தாளுநர்கள் பரீட்சையை எதிர்கொள்பவர்க ளில் எத்தனை மருந்தாளுநர்கள் ஒரே தடவையில் பரீட்சையில் தேர்ச்சி பெறுகிறார்கள்?

பயிலுநர் மருந்தாளுநர்க ளின் பயிற்சி நடவடிக்கைகளை வலுப்படுத்த அரசாங்கத்தால் எத்தகைய திட்டங்களை ஆரம் பிக்க எதிர்பார்க்கப்படுகி றது? இதுவரை நடைமுறையில் இருந்த பயிலுநர் மருந்தாளுநர் பயிற்சி முறையை அரசாங்கம் மாற்ற விரும்புகிறதா? அதற் கான காரணங்கள் யாவை?

வெளிவாரி மருந்தாளுநர் பரீட்சையை இல்லாதொழிக்க அரசாங்கம் திட்டமிட்டுள் ளதா? அப்படியானால், தனி யார் துறையில் மருந்தாளுநர்க ளின் தேவையை அரசாங்கம் எவ்வாறு நிவர்த்தி செய்யும்?

2025ஆம் ஆண்டில் தேசிய மருந்துகள் ஒழுங்குமுறைப்படுத் தும் அதிகார சபையால் எத்தனை மருந்தக உரிமையா ளர்களின் உரிமப் பத்திரங்களை புதுப்பித்தல் நடவடிக்கை மறுக் கப்பட்டுள்ளன? இதற்கான காரணங்கள் யாவை? - என அவர் கேள்வி எழுப்பினார். (எ)

# கழுத்து நெரித்து கொலை 4 சந்தேக நபர்கள் கைது

கொழும்பு, ஜூலை 27

ஹோமாகம பொலிஸ் பிரி வில் ஒருவரை கழுத்து நெரித்து கொலை செய்து வீதியில் வீசிய குற்றத்தில் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 10ஆம் திகதி இடம் பெற்ற இந்தக் குற்றத்தைத் தொடர்ந்து, நேற்று முன்தினம் இரவு மாதம்பிட்டிய மற்றும் கிராண்ட்பாஸ் பொலிஸ் பிரிவு களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது, நுகே கொட குற்றப்புலனாய்வுப் பிரிவு அதிகாரிகள் சந்தேக நபர் களைக் கைது செய்தனர்.

18 முதல் 24 வயதுடைய வர்களே இவ்வாறு கைது செய் யப்பட்டனர்.

இவர்கள் தற்போது ஹோமாகம பொலிஸ் நிலையத் தில் முற்படுத்தப்பட்டுள்ளனர்.

கொலை செய்யப்பட்ட நபர் பயணித்த கார் கேகாலை-மாவனெல்ல வீதியில் கண்டு பிடிக்கப்பட்டது.

நீண்ட விசாரணைகளுக்குப் பின்னர், கொலையுடன் தொடர்புடைய சந்தேக நபர் களை பொலிஸார் அடையா ளம் கண்டு கைது செய்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக ஹோமாகம பொலிஸார் மேல திக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.(எ)

# பேருந்து - கப் மோதிய விபத்தில் மாணவர்கள் உட்பட ஐவர் காயம்



அநுராதபுரம், ஜூலை 27

அநுராதபுரம் - குருநாகல் பிரதான வீதியில் 2ஆவது மைல்கல் பிரதேசத்தில் இடம் பெற்ற விபத்தில் இரு பாட சாலை மாணவர்கள் ஐந்து பேர் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பேருந்து மற்றும் கப் வாக னம் ஒன்றுடன் ஒன்று மோதிய தில் இந்த விபத்து இடம் பெற்றதாக பொலிஸார் தெரி வித்தனர்.

விபத்தின் போது கப் ரக வாகனத்தின் சாரதியும் பேருந் தில் பயணித்த நால்வரும் காயமடைந்தனர்.

பாடசாலை மாணவர்கள் இருவரும் ஆசிரியை ஒருவரும் காயமடைந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் மருத் துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர்.

விபத்து தொடர்பில் பொலி ஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

# சிங்கள கிராமத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை


பொலநறுவை, ஜூலை 27

பொலநறுவை மாவட்டத்தில் சிங்கள கிராமத்தில் சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பொலநறுவையில் அமைந் துள்ள நாமல் போக்குல பெரும் பான்மையாக சிங்கள மக்கள் வசிக்கும் ஒரு கிராமமாகும். இங்கு சில தமிழ்க் குடும்பங்களும் வாழ்ந்து வருகின்றன.

இந்தக் கிராமத்தில் காளி யம்மன் ஆலயம் ஒன்றுள்ளது. இது அப்பகுதியினரால் பக்தி பூர்வமாக வழிபாட்டுத் தொன் மையுடன் பராமரிக்கப் படும் ஒரு முக்கியமான தலம்.

இவ்வாலயத்தில் நேற்று முன் தினம் ஒரு பிரத்தியேக நிகழ்வாக சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப் பட்டது. (எ-08)



# தேன் எடுக்க சென்றவர் யானை தாக்கி மரணம்

திருகோணமலை, ஜூலை 27

திருகோணமலை, மொரா வெவ பொலிஸ் பிரிவுக்குட் பட்ட கந்தளாய் காட்டுப் பகுதியில் தேன் எடுக்கச் சென்ற வர் யானை தாக்கி உயிரிழந் தார்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது என்று மொரவெவ பொலிஸார் தெரி வித்தனர்.

கந்தளாய் காட்டுப் பகு திக்குத் தேன் எடுப்பதற்காக மூன்று பேர் சென்றனர் எனவும், இதன்போது யானை ஒன்று குறித்த நபர்களைத் தாக்க முற் பட்டபோது மூவரும் வெவ் வேறாகப் பிரிந்து ஓடினர் என வும், அவ்வேளை ஒருவரை யானை தாக்கியது எனவும் ஆரம்பகட்ட விசாரணையின் மூலம் தெரியவந்துள்ளது.

யானையின் தாக்குதலில் ஹெல்லெனை - மித்தெனிய பகுதியைச் சேர்ந்த எம். ரஞ்சித் ... உயிரிழந் ... (எ)

# லலித் கன்னங்கரவின் உதவியாளர்கள் கைது

கொழும்பு, ஜூலை 27

டுபாயில் தங்கியிருந்து இலங்கையில் ஒழுங்கமைக்கப் பட்ட குற்றவியல் வலைய மைப்பை நடத்தும் "பஸ் லலியா" எனப்படும் லலித் கன்னங்கரவின் போதைப் பொருள் கடத்தலுடன் தொடர்புடையதாக சந்தேகிக் கப்படும் நால்வர் ஐஸ் போதைப்பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட அதிரடிப் படை ஹங்வெல்ல மோட்டார் சைக்கிள் பிரிவின் உப பொலிஸ் பரிசோதகரான நுவன் திலக ரத்ன உள்ளிட்ட குழுவினரால் இந்த சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொலிஸ் அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலின் அடிப் படையில் சோதனைகளை மேற்கொண்ட போது, பொலி ஸாரின் வீதித் தடைகளை தவிர்த்து தப்பிச் செல்ல முயன்றபோது சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர்.

இதன்போது, சந்தேக நபர் களிடமிருந்து 7 கிராம் 500 மில்லி கிராம் ஐஸ் போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (எ)

பெண்களை குறிவைத்து கொள்ளை:

# கோடீஸ்வர வர்த்தகரின் மகனும் நண்பனும் கைது

கொழும்பு, ஜூலை 27

பெண்களின் கைப்பைகள் மற்றும் கையடக்கத் தொலை பேசிகளைத் திருடிய சம்பவம் தொடர்பில் இரண்டு இளை ஞர்கள் பிலியந்தலை பொலிஸா ரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவ ரில் ஒருவர் சுமார் 2 மாதங்க ளுக்கு முன்பு அவுஸ்திரேலியா விலிருந்து விடுமுறையில் இலங் கைக்கு வந்தவர், மற்றைய இளைஞன் பாணந்துறை பகுதி யைச் சேர்ந்த கோடீஸ்வர வர்த் தகரின் மகன் என்று தெரிய வருகிறது.

சந்தேகநபர்களிடமிருந்து சம்பவத்துக்கு பயன்படுத்தப் பட்ட கையடக்க தொலை பேசி, 5 நவீன கையடக்க தொலைபேசிகள், 15 ஸ்மார்ட் தொலைபேசிகளும் கண்டு பிடிக்கப்பட்டன.

இந்த சாதனங்களின் பெறு மதி சுமார் 25 இலட்சம் ரூபாய் என்று பொலிஸார் தெரிவித்த னர்.

கொள்ளைக்குப் பயன்படுத் தப்பட்ட போலி எண் தகடுக ளைக் கொண்ட மோட்டார் சைக்கிள், முகத்தை முழுமை யாக மறைக்கும் இரண்டு முகக் கவசங்கள், 10,900 மில்லிகிராம் ஹெரோயின் போதைப் பொருள், கைப்பை என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட் டுள்ளன.

இந்த சந்தேக நபர்கள் போதைப்பொருளுக்கு அடிமை யானவர்கள் எனவும், நாள் ஒன்றுக்கு 20 பைக்கற் போதைப் பொருட்களை உட்கொள்வதும் விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

பல்வேறு குற்றச் செயல்க ளில் ஈடுபட்டு தப்பிச் செல்லும் நபர்களை இலக்கு வைத்து, முகத்தை மறைக்கும் தலைக் கவசம் அணிந்து மோட்டார் சைக்கிள்களில் செல்வோரை சோதனை செய்யும் விசேட நடவடிக்கையின் போதே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
27.07.2025 ஞாயிற்றுக்கிழமை
குரோதி வருடம், ஆடி 11
"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.
E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## காஸா ஒரு குறியீடு

உலக அரசியல் என்பது அடிப்படையில் அதிகார சக்திகளின் சூதாட்டம். இந்த ஆட்டத்தில் நீதி எது - நியாயங்கள் எது என்பதை அவர்களே தீர்மானிக்கின்றனர். அவர்கள் மீது கட்டுப்பாடுகளை விதிக்கும் திறன் எவருக்கும் இல்லை. அப்படியிருக்க அவர்கள் அனுமதிக்கப் போவதுமில்லை. காஸாவில் நடந்து கொண்டிருப்பது இதற்கான மிகவும் சிறந்த உதாரணமாகும். காஸாவில் நடப்பவற்றை உலகம் பார்த்துக் கொண்டிருக்கின்றது.

முள்ளிவாய்க்காலில் இடம்பெற்றதை உலகம் பார்க்கவில்லை - அதனால் அதனைச் சொல்ல வேண்டும் - சொன்னால் உலகம் நமக்கான நீதியை தருமென்னும் நம்பிக்கை நமது பக்கத்தில் இருந்தது. ஆனால், உலக அரசியலில் அவ்வாறான நம்பிக்கைகள் பரிதாபமாகத் தோற்றுப் போகுமென்பதே, கடந்த பதினாறு வருடகால அனுபவங்கள் நமக்குச் சொல்லியிருக்கும் செய்தி. அதிலிருந்து கற்றுக் கொள்வதும், கற்றுகொள்ளாமல் கற்பனையில் காலத்தை கரைப்பதும், நம்மவர்களது பிரச்னை. கற்றுக் கொண்டால் உண்மைகளை அறியலாம், இல்லையென்றால் கற்பனையில் வாழலாம்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப், காஸாவில் திட்டமிட்டவாறு பணியை முடிக்குமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபை யுத்தத்தை நிறுத்துமாறு கோரும்போது, அமெரிக்க அதிபரோ ஹமாஸை முடிக்குமாறு கோரிக்கை விடுத்திருக்கின்றார். ஐக்கிய நாடுகள் சபையினால் உலகை கட்டுப்படுத்த முடியாது. ஆனால், பரிந்துரைகளை மட்டுமே முன்வைக்கலாம். உலக அரசியல் கட்டமைப்புக்கள் பலம் பொருந்திய நாடுகளின் நலன்சார் ஆட்டத்திற்குள்ளும் அகப்பட்டிருக்கின்றது. அந்த ஆட்டத்திற்கான தீர்மானங்களே நீதி எது - அநீதி எது என்பதை தீர்மானிக்கின்றது.

இது ஒரு வகையில் புத்தரின் பாவ புண்ணியக் கோட்பாடு போன்றது. ஒருவருக்கு பாவமாக இருப்பது இன்னொருவருக்கு புண்ணியமாக இருக்கின்றது என்கின்றார் புத்தர். இலங்கையின் இறுதி யுத்தம் பற்றிய பார்வை சிங்களவர்களைப் பொறுத்தவரையில் அப்படித்தான் இருக்கின்றது. தங்களுக்கு எதிரான விடுதலைப் புலிகள் அமைப்பை அழித்ததாக அவர்கள் கருதுகின்றனர். ஆனால், மறுபுறமோ தமிழ் மக்களை திட்டமிட்டு கொலை செய்ததாக, காணாமலாக்கியதாக பாதிக்கப்பட்ட மக்கள் கருதுகின்றனர். இந்த இரண்டும் ஒரு புள்ளியில் சந்திக்க வேண்டுமாயின், இருவரும் மனித நேயத்தை அடிப்படையாகக் கொண்டு சிந்தித்தால் மட்டுமே அது சாத்தியப்படும். ஆனால், அதிகார அரசியல் அதற்கான வாய்ப்பை வழங்காது. இதற்கான சிறந்த குறியீடுதான் காஸா.

ஹமாஸ் பலஸ்தீனியர்களுக்காக போராடுவதாகக் கூறினால் உண்மையில் அப்பாவி பலஸ்தீன மக்களின் உயிர்கள் தொடர்பில் கவலைப்பட வேண்டும் - அவர்களை பாதுகாக்கும் உபாயங்கள் தொடர்பில் சிந்திக்க வேண்டும். ஆனால், பிரச்னை அவர்களும் அதிகார அரசியலால் வழிநடத்தப்படுகின்றனர் - அவர்களுக்கு இஸ்ரேலின் தோல்வி தேவைப்படுகின்றது. ஆனால், இஸ்ரேலுக்கோ ஹமாஸின் அழிவு தேவைப்படுகின்றது.

இந்தப் பின்புலத்தில் காஸாவில் அமைதி எப்படி ஏற்படும்? இஸ்ரேலை தடுத்து நிறுத்தும் ஆற்றல், ஒரு நாட்டிற்கு இருக்கின்றது என்றால் அது அமெரிக்கா மட்டும்தான். ஆனால், அமெரிக்கா அதனைச் செய்யப் போவதில்லை - அவ்வாறாயின் அமைதிக்காக, மனித உயிர்களுக்காக சீன இராணுவம் தலையீட்டைச் செய்ய முடியும் - ஆனால், அது நடக்காது. ஏனெனில் அதில் சீனாவிற்கு ஆதாயம் இல்லை.

ஈரானுடன் உறவுகளை ஏற்படுத்திக் கொள்ள முயற்சித்த சீனா, ஈரான் தாக்கப்பட்டபோது, நண்பரை பாதுகாக்க வரவில்லை - ஏன்? ஏனெனில் தன்னை ஒரு போருக்குள் அகப்படுத்திக்கொள்ள சீனா விரும்பவில்லை. இவ்வாறானதொரு பின்னணியில் காஸாவின் யுத்தத்தை இஸ்ரேலும் ஹமாஸும் நினைத்தால் மட்டும்தான் நிறுத்த முடியும்.

ஹமாஸ் பலஸ்தீன மக்களை பாதுகாக்க விரும்பினால் நிபந்தனையற்ற சரணடைவிற்கு செல்லலாம். ஆனால், அதனை அவர்கள் செய்யப் போவதில்லை. இதுதான் அதிகார அரசியலின் சதுரங்க ஆட்டம். இந்த ஆட்டத்தை ஆடுபவர்களே நிறுத்தினால் ஒழிய, வேறு எவரும் நிறுத்த முடியாது. ஆனால், இந்த அதிகார ஆட்டத்தில் எப்போதும் பலியாடுகள் சாதாரண மக்கள்தான். சாதாரண மக்களின் உடல்கள் சிதறிக் கொண்டிருக்கும் போது, சாதாரணமாக ஒரு மூலையில் இருந்தவாறு சிலர் கவிதை எழுதலாம், சிலர் தங்களுக்குள் முணுமுணுத்துக் கொள்ளலாம் - மற்றும்படி எதனையும் செய்ய முடியாது.

# சர்வதேச நீதிப்பொறிமுறை கோரி திருகோணமலையில் போராட்டம்



திருகோணமலை, ஜூலை 27

வடக்கு - கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச நீதிப் பொறி முறையை வலியுறுத்தி நேற்று சனிக்கிழமை திருகோணமலை சிவன் கோவில் முன்பாக போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இலங்கையில் மனித குலத்துக்கு எதிராக இடம் பெற்ற வன்முறைகள் மற்றும் போர்க் குற்றங்கள் தொடர்பில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் எடுக்கப்படும் தீர்மானத்தை வலுப்படுத்தும் நோக்கில் இந்த கவனவீர்ப்புப் போராட்டம் நடத்தப்பட்டது.

வடக்கு - கிழக்கு பகுதியில் எட்டு மாவட்டங்களில் குறித்த போராட்டம் இடம் பெற்றதுடன் திருகோணமலையில் இடம்பெற்ற போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தமிழின அழிப்புக்கு நீதி வேண்டும், சர்வதேச விசாரணை பொறிமுறை தேவை என பல பதாகைகளை ஏந்தியிருந்தனர். (எ)

## வர்த்தக சபைக் கூட்டத்தில் ஜனாதிபதி அநுர பங்கேற்பு




கொழும்பு, ஜூலை 27

கொழும்பு ஷங்கிரிலா ஹோட்டலில் நேற்று முன்தினம் காலை நடைபெற்ற இலங்கை வர்த்தக சபையின் உலகளாவிய சம்மேளனத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தின் ஆரம்ப விழாவில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க கலந்து கொண்டார்.

உலகம் முழுவதிலுமுள்ள இலங்கை வர்த்தகர்களை ஓர் இடத்தில் இணைக்கும் மேடையாக வர்த்தக சபையின் உலகளாவிய சம்மேளனம் செயல்படுகிறது.

"உலகளாவிய இலங்கை வர்த்தகங்களை ஒன்றிணைத்து - முன்னோக்கி " என்ற தொனிப்பொருளில் நேற்று முன்தினமும், நேற்றும் நடைபெறும் இந்த மாநாட்டில், அமெரிக்கா, இங்கிலாந்து, ஜப்பான், அவுஸ்திரேலியா, கனடா மற்றும் இந்தியா உள்ளிட்ட 15 நாடுகளைச் சேர்ந்த தொழில்முயற்சியாளர்கள் கலந்து கொண்டனர். (எ)

# மருத்துவர்கள் இடமாற்றத்தில் சீர்கேடு பல மருத்துவமனைகள் முடங்க வாய்ப்பு

### அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஜூலை 27

தரப்படுத்தப்பட்ட மருத்துவர்களுக்கான பணியிடமாற்ற நடவடிக்கையில் நிலவிவரும் சீர்கேடு காரணமாக பல மருத்துவமனைகள் நெருக்கடிக்குள்ளாகியுள்ளதுடன், இந்த நிலைமை நீடிக்கும் பட்சத்தில் எதிர்வரும் நாட்களில் பல மருத்துவமனைகள் முடங்க வாய்ப்புள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் சமில் விஜேசிங்க எச்சரித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

23 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தரப்படுத்தப்பட்ட மருத்துவர்கள் இந்த நாட்டில் உள்ளனர். அவர்கள் தற்போது கடும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்தே பணியாற்றி வருகின்றனர். இதனால் நெருக்கடிக்குள்ளாகியுள்ள பல அரச மருத்துவமனைகளின் சேவைகள் எதிர்வரும் நாட்களில் முடங்க வாய்ப்புள்ளது.

வரையறுக்கப்பட்ட பயிற்சியை நிறைவு செய்த 1977 மருத்துவர்களை உள்ளடக்கிய இரு குழு பணியிடமாற்றத்தை எதிர்பார்த்துள்ளதுடன், மேலும் 1494 மருத்துவர்கள் பயிற்சியை நிறைவு செய்து சுமார் 9 மாதங்களாக பணியிடமாற்றத்துக்காக காத்துள்ளனர். 2025 ஆம் ஆண்டுக்கான இடமாற்ற பட்டியல் (9 மாதங்கள் பிறகு) 2025 ஜூலை 11இல் தாமதமாகவே வெளியிடப்பட்டது. இதில் தவறுகள் உள்ளதுடன், பலருக்கும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சின் பின்புல அதிகாரம் மற்றும் கட்டுப்பாடுகளற்ற செயல்பாடுகள் காரணமாக சுகாதார சேவை நாளுக்கு நாள் நெருக்கடிக்குள் தள்ளப்படுகிறது - என்றார். (எ)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆதித் தமிழ்க்குடியின் தொன்மை முருகன்!

வைகைச்செல்வன்

உலகில் தொண்மையான செம்மையுறத்தக்க மொழியா இரண்டு மொழிகள் திகழ்கின்றன. அவை தமிழ் மொழி, மற்றொன்று வடமொழியான சமஸ்கிருதம். வடமொழி பேச்சு வழக்கில் இல்லை. இலக்கிய வழக்கு மட்டுமே உண்டு. ஆனால், தமிழ் மொழியில் பேச்சும், இலக்கிய வழக்கும் ஒன்றாகச் சேர்ந்து செழிப்பான மொழியாக திகழ்கிறது.

தமிழில் கிடைத்திருக்கும் ஆகச் சிறந்த நூல்களில் சங்க இலக்கியங்கள் தலையாயது ஆகும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென்கீழ்க்கணக்கு நூல்களில், பத்துப்பாட்டு முதல் பகுதியாக வைக்கப்பட்டுள்ளது. அதில் முதலாவதாக திருமுருகாற்றுப்படை திகழ்கிறது. முருக பக்தனை ஆற்றுப்படுத்துதலே திருமுருகாற்றுப்படை என்று அழைக்கப்படுகிறது.

சங்க இலக்கியங்களில் முருகன் குறித்து வழங்கும் பெயர்கள் மிகுதியாக இருக்கின்றன. இந்தப் பெயர்கள் அனைத்தும் அவற்றின் சூழல்களின் அடிப்படையில் வெவ்வேறாக அமைந்திருக்கின்றன. சேவற் கொடியோன், சேய், முதிர்கடவுள், நெடுவேள், தெய்வம், முருகு, அனங்கு, கடவுள், மலைவாழ், விரல்வேல், மலை உரைகடவுள், முருகன், சூர்செல்வன், நெடியோன், மால்முருகன் போன்றவை இடம்பெற்றிருக்கின்றன.

ஒரு வறியவன் தன் இன்னல்களில் இருந்து விடுபட முருகனைச் சென்று பார்த்துப் பாடுவது போல் அமைக்கப்பட்டதுதான் திருமுருகாற்றுப்படை. உண்மையில் ஆற்றுப்படை என்பதுதான் மருவி ஆறுபடை என்றாகி விட்டது.

அதே சமயம், முருகனுக்கு ஆறு என்பது உகந்தது. அவரை பக்திப்பூர்வமாகப் பூசிக்கிற போது ஆறு இதழ்களைக் கொண்ட மலர்களைக் கொண்டு மலர்மாலை சூடுகிறார்கள்.

முருகனிடம் இருக்கும் வேல் வெறுமனே கீழ்ப்பகுதி அகன்றும், மேல் பகுதி முனை கூர்மையாக இருப்பது மட்டுமல்ல, வேலின் இரண்டு பக்கங்களும் மேடு தட்டி இருக்கும். அதைக் கணக்கிட்டால் கூட ஆறுமுனைகள் கொண்டதாக இருக்கும். ஆறு முகங்களை உடையதாக நாம் முருகனை வணங்கியும் வருகிறோம். இதனால், ஆற்றுப்படை என்பது ஆறு படையாக மருவி இருக்கிறது.



மாயோன் என்னும் திருமாலும், சேயோன் என்னும் முருகனும், வேந்தன் என்னும் இந்திரனும், வருணனும் பண்டைய தமிழர்களின் கடவுளர்களாக தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படுகின்றனர். கொற்றவை பாலை நிலத் தெய்வமாக குறிக்கப்படுகிறார். தமிழர் தத்துவம் சைவ சித்தாந்தம். சிவனையே முழுமுதற் கடவுளாகக் கொண்டாடப்படுகிறது. ஆயினும், முருகன் மட்டுமே தமிழ்க் கடவுள் என்று சிறப்புக்குரியவராகிறார். ஏன்?

சைவத்தின் முழுமுதற் கடவுளாகிய சிவன் தமிழோடு நெருங்கிய தொடர்புடையவர். மதுரையில் முதலாம் தமிழ்ச்சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த கடவுள் சிவன். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளும், குன்றெறிந்த முருகவேளும் முதலாம் தமிழ்ச்சங்கத்தில் புலவர்களாக இருந்து தமிழ் வளர்த்ததாக இறையனார் அகப்பொருள் என்னும் காதல் இலக்கண நூலுக்கு நக்கீரரின் உரை சான்றாக அமைகிறது. மூன்றாம் தமிழ்ச்சங்கத்தில் புலவரான நக்கீரனுக்கு தமிழின் இலக்கண நுட்பங்களைக் கற்பித்ததாக திருவிளையாடற் புராணம் கூறுகிறது. அகத்தியருக்கு தமிழ் கற்பித்தவன் சிவன்.

காதலைக் கொண்டாடும் மொழி தமிழ். அதைக் கொண்டாடும் பண்பாடு தமிழர் பண்பாடு. இத்தகைய காதலுக்கு கற்பியல், களவியல் என்று இலக்கணம் வகுத்து நூல் தந்தவன் சிவன். தமிழர் வாழ்விலும், மரபிலும் இரண்டறக் கலந்திட்ட காதலுக்கு இலக்கணம் வகுத்து 60 சூத்திரங்கள் தந்தவன் சிவன்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சங்கத் தமிழர்கள் வாழ்வியலுடன் காதல் சார்ந்த அகத் துறையைத் தந்தது தமிழ். எட்டுத்தொகை நூல்களில் ஆறு நூல்களும், பத்துப்பாட்டு நூல்களில் ஐந்து நூல்களும், சங்க இலக்கியப் பாடல்களில் பாதிக்கு மேல் காதலுக்கென்று பாடப்பட்ட பழந்தமிழ் மரபுகள்.

செந்தமிழ் நாடாகிய தென்னாட்டையே தன் நாடாகக் கொண்டவன் சிவன். சங்கம் அமைத்து தமிழ் வளர்த்த கடவுள். பார்வதிக்கும், அகத்தியருக்கும், நக்கீரருக்கும் தமிழ் கற்பித்தவன் சிவன். பன்னிரு திருமுறைகளை 11ஆயிரம் பாடல்களால் தமிழிலே பாடப்பட்ட கடவுள் சிவன். தமிழர் சமயமாம் சைவத்தின் முழுமுதற் கடவுள் சிவன். தமிழர் தத்துவ நெறியாம் சைவ சித்தாந்தத்தில் தோன்றுவார் சிவன்.

இவ்வாறிருக்க முருகன் மட்டும் எப்படி தமிழ்க்

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்தவார ராசிபலன் 27.07.2025 - 02.08.2025

ஞாயிற்றுக்கிழமை
விசுவாவசு வருடம் - ஆடி 11
நல்ல நேரம்: 7.31 - 09.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : திருதியை

### மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

இந்த வாரம் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும். நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசுப் பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகள் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். வீட்டில் சுப மங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள்.

### ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

இந்த வாரம் பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். உயர்ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். மக்கள் சேவையில் ஈடுபட்டதன் காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். குழந்தைகளின் சீரான முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. சிலருக்கு வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும்.

### மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம்.

### கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

இந்த வாரம் சீரான பொருளாதார நிலையில், மனதிற்குப் பிடித்தபடி மனை, வண்டி வாகனம் என அனைத்தும் கிடைக்கும். எந்த ஒரு காரியத்தையும் ஒத்திப் போடாமல் உடனுக்குடன் செயல்பட்டால் உன்னத நிலையை அடையலாம். அரசுப் பணிக்கான தேர்வுகளில் வெற்றி பெற்று, புதிய பதவிக்கான பணி உத்தரவை பெறுவர். புதிய வீடு போன்ற அசையாச் சொத்துக்களை வாங்குவதற்கு முன் ஆவணங்களை ஆராய்ந்து வாங்குவது நல்லது.

### சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

இந்த வாரம் உங்களுக்கு தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். தொலைதூர செய்திகள் இல்லத்தில் மகிழ்ச்சி பெருகும். ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது

### கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர் களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் மூலம் அதிக இலாபம் அடைவீர்கள்.

### துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

இந்த வாரம் சுப காரியங்களுக்கு வீடே விழாக் கோலம் பூணும். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு. மனதில் அமைதியும் நிலவும். புத்திர பாக்கியம் ஏற்படும். திடீரென ஏற்படும். பயணங் களால் ஆதாயம், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும்.

### விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

இந்த வாரம் விருந்துகளில் கலந்து கொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதை கழிப்பீர்கள். சிறப்பான பலன்களை எதிர்பார்க்கலாம். அரசியல்வாதிகளிடம் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றி திக்கை நோக்கிச் செல்லும். வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர்.

### தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

இந்த வாரம் பெண்களால் இலாபம். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும்.ஆயினும். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்பட வாய்ப்பு இருப்பதால் சமாதானமாகப் போவது பொருளாதார நிலையைப் பொறுத்தவரை சிரமமான காலம். அதன் காரணமாக சேமிப்புக்களில் இருக்கும் பணத்தில் கை வைக்க வேண்டிய நிலை ஏற்படும். உயர் பதவிகள் கிடைக்கும்.

### மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

இந்த வாரம் வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். பெரியவர்கள் ஆசியால் நீங் கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். . நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணியத்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும்.

### கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

இந்த வாரம் திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். அன்னையின் அன்பு அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். சுற்றுலாப் பயணங்களின் மனதில் மகிழ்ச்சி பொங்கும். சிலருக்கு அவசியமற்ற. அலைச் சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும்.

### மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணிய திருத்தல யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமானதாக கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும். பூமி. வீடு மூலம் இலாபம் ஏற்படும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கறுப்பு ஜூலையை தொடர்ந்து வந்த இந்திய தலையீடு, மாகாண சபைகளின் இன்றைய நிலை!



வீரகத்தி தனபாலசிங்கம்

கிறீஸ்துவுக்கு முன்னர், கிறீஸ்துவுக்கு பின்னர் என்பதை போன்று இலங்கையின் அரசியலையும் இனங்களுக்கு இடையிலான உறவுகளையும் பொறுத்தவரை, ஒரு எல்லைக்கோடாக அமைந்த 1983 'கறுப்பு ஜூலை' இனவன்செயல்களுக்கு பிறகு 42 வருடங்கள் கடந்தோடிவிட்டன.

அரச இயந்திரத்தின் ஒத்துழைப்புடன் நாடு பூராவும் தமிழர்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட அந்த வன்செயல்களின்போது அனுபவித்தவற்றை விடவும் விபரிக்க முடியாத அளவுக்கு மோசமான அவலங்கள், உயிரிழப்புகள் மற்றும் சொத்து அழிவுகளை மூன்று தசாப்தகால போரில் தமிழ் மக்கள் அனுபவித்த போதிலும், அவர்கள் மத்தியில் ஆயுதப் போராட்ட இயக்கங்கள் வளருவதற்கும் உள்நாட்டுப்போர் மூளுவதற்கும் வழி வகுத்த காரணத்தினால் கறுப்பு ஜூலைக்கு இலங்கையின் அரசியல் வரலாற்றில் மறையாத பிரத்தியேகமான எதிர்மறைக் குறியீடு ஒன்று இருக்கிறது.

உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பிறகு கறுப்பு ஜூலையை நாம் 16வது வருடமாக நினைவு கூருகின்றோம். கறுப்பு ஜூலையினதும் உள்நாட்டுப் போரினதும் அவல அனுபவங்களின் நினைவுகளின் தொந்தரவுக்கு உள்ளாகாமல் இலங்கையர்கள் வாழமுடியாது. இன்று வாழ்பவர்களில் அதிகமானவர்களுக்கு குறிப்பாக இளைய தலைமுறையினருக்கு அந்த ஜூலையின் நேரடி அனுபவங்களும் அறிவும் கிடையாது.

பதினாறு வருடங்களுக்கு முன்னர் முடிவுக்கு வந்த உள்நாட்டுப் போரின் இறுதிக்கட்டங்களில் மனித உரிமை மீறல்களுக்கும் போர்க் குற்றங்களுக்கும் பொறுப்புக்கூற வைக்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகள் கடந்த பல வருடங்களாக முன்வைக்கப்பட்டு வருகின்ற அதே வேளை, நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலத்துக்கு முன்னர் இடம்பெற்ற கறுப்பு ஜூலை பற்றிய உண்மை இன்னமும் வெளிக்கொணரப்படவில்லை என்பதையும் அதற்காக எவருமே பொறுப்புக்கூற வைக்கப்படவில்லை என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. எல்லாவற்றுக்கும் மேலாக, மீண்டும் ஒரு கறுப்பு ஜூலை நிகழாது என்பதற்கு எந்த உத்தரவாதமும் கிடையாது.

சகல சமூகங்களையும் சேர்ந்த இன்றைய இளைய தலைமுறையினர் கடந்த காலத்தை முழுமையாக அறிந்து, கறுப்பு ஜூலைக்கும் உள்நாட்டுப் போருக்கும் காரணமாக அமைந்த தேசிய இனப்பிரச்சினையின் அரசியல் மூலக் காரணிகள் குறித்து தெளிவைப் பெறாத பட்சத்தில் அமைதியான எதிர்காலத்துக்கான வாய்ப்பு குறித்து நம்பிக்கை வைக்க முடியாது.

கறுப்பு ஜூலை இலங்கையை நாகரிக உலகத்தின் முன்னால் வெட்கித்தலை குனிய வைத்தது. ஆனால், 42 வருடங்கள் கடந்தும் கூட இன்னமும் இனப் பிரச்சினைக்கு சிறுபான்மைச் சமூகங்களின் நியாயபூர்வமான அரசியல் அபிலாசைகளை குறைந்த பட்சமாகவேனும் நிறைவு செய்யக்கூடிய அரசியல் இணக்கத் தீர்வொன்றை காணமுடியாமல் இருப்பது கறுப்பு ஜூலையை விடவும் பெரிய வெட்கக்கேடு.


கறுப்பு ஜூலைக்கு பின்னரும் உள்நாட்டுப் போரின் முடிவுக்கு பின்னரும் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான வாய்ப்புக்கள் இருந்த போதிலும், அவற்றை தென்னிலங்கை அரசியல் சமுதாயம் வேண்டுமென்றே தவறவிட்டது. சிறுபான்மைச் சமூகங்களின் அரசியல் உரிமைகளுக்கு எதிராக பெரும்பான்மையினவாத அணி திரட்டல்களை செய்வதில் மாத்திரமே முன்னைய ஆட்சியாளர்கள் அக்கறையுடன் செயற்பட்டார்கள்.

ஆனால், தேசிய மக்கள் சக்தியின் புதிய அரசாங்கம் அதிகாரத்துக்கு வந்த பின்னரும் கூட, இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வொன்றை காண்பதற்கு உகந்த சூழ்நிலையை உருவாக்குவதில் அக்கறை காண்பிக்கப்படுவதாக இல்லை. மாறாக, இனப்பிரச்சினையை தீர்த்துவைப்பதற்கு காலங்காலமாக தடையாக இருந்துவரும் தேசியவாத சக்திகளை சாந்தப்படுத்துகின்ற அணுகுமுறைகளையே புதிய ஆட்சியாளர்களும் கடைப்பிடித்து வருகிறார்கள்.


சகல சமூகங்களையும் சமத்துவமாக நடத்துவதே தங்களின் கொள்கை என்று ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர்களும் கூறுவது மேலோட்டமாக நோக்கும்போது மேன்மையானதாக தோன்றும். ஆனால், காலங்காலமாக அரசாங்கங்களினால் இனப்பாகுபாட்டுக்கும் அடக்குமுறைக்கும் உள்ளாக்கப்பட்டு வந்திருக்கும் சிறுபான்மைச் சமூகங்களை அதுவும் குறிப்பாக, உள்நாட்டுப் போரில் பெரும் அவலங்களை அனுபவித்த தமிழ் மக்களைப் பொறுத்தவரை, அவர்களுக்கென்று பிரத்தியேகமானவையாக இருக்கும் பல்வேறு பிரச்சினைகளுக்கு தீர்வைக் காண்பதில் மானசீகமான அக்கறை காண்பிக்காத பட்சத்தில், அரசாங்க தலைவர்கள் இடையறாது கூறுகின்ற 'சமத்துவத்தின்' மீது அந்த மக்களுக்கு நம்பிக்கை ஏற்படப் போவதில்லை.

இத்தகைய பின்புலத்தில், கறுப்பு ஜூலைக்கு பிறகு இலங்கை அரசியலில் ஏற்பட்ட இரு முக்கியமான நிகழ்வுப் போக்குகள் குறித்து கவனத்தை குவிக்க வேண்டியிருக்கிறது.

இனப்பிரச்சினையில் இந்தியாவின் நேரடித் தலையீடும் அரசியல் தீர்வைக் காணும் நோக்கில் 1987 ஜூலை இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையை தொடர்ந்து இலங்கையின் அரசியலமைப்புக்கு கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தத்தின் மூலமாக அறிமுகப்படுத் தப்பட்ட மாகாணசபை முறையுமே அவையாகும். சமாதான



மாகாணசபை தேர்தல்கள் கடந்த எட்டு வருடங்களாக நடத்தப்படவில்லை என்ற போதிலும், தமிழ்க் கட்சிகள் அது குறித்து பிரச்சினை கிளப்புவதில்லை. ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்டால், அதில் போட்டியிடுவதற்கு அவை தயங்கப்போவதுமில்லை.



உடன்படிக்கைக்கு பிறகு இந்தியாவிலும் இலங்கையிலும் அரசியலில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டுவிட்ட போதிலும், இலங்கை அரசியலமைப்பில் இருக்கின்ற அதிகாரப் பரவலாக்கம் தொடர்பிலான ஒரேயொரு ஏற்பாடு தொடர்ந்தும் பேசுபொருளாகவே இருக்கிறது.

மாகாணசபை முறையில் இருக்கின்ற பல்வேறு போதாமைகளுக்கு மத்தியிலும், அதை ஒழுங்காக நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்ட இடையூறுகளுக்கு அரசாங்கங்களும் தென்னிலங்கை அரசியல் சமுதாயமுமே பெருமளவுக்கு பொறுப்பு என்றாலும், தமிழ் அரசியல் சமுதாயமும் நிலைவரங்கள் வேண்டி நின்ற நிதானத்துடனும் பொறுப்புணர்வுடனும் நடந்துகொள்ளவில்லை என்பது உண்மையே.

சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஜனாதிபதி பதவியில் இருந்து இறங்கிய பிறகு புதுடில்லிக்கு சென்ற ஒரு சந்தர்ப்பத்தில் 13 வது திருத்தம் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதை இலங்கையின் சகல அரசாங்கங்களுமே உறுதி செய்து கொண்டன என்று வெளிப்படையாகவே ஒத்துக்கொண்டார். தென்னிலங்கையை பொறுத்தவரை, அதே நிலைவரமே இன்றும் தொடருகிறது.

சமாதான உடன்படிக்கைக்கு பின்னரான இதுவரையான காலப்பகுதியில் இந்தியாவில் எந்த கட்சியின் அரசாங்கம் பதவியில் இருந்தாலும், 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கொழும்பு அரசாங்கங்களை தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டே வந்திருக்கின்றன. ஆனால், மாறிவிட்ட புவிசார் அரசியல் நிலைவரத்துக்கு மத்தியில், இலங்கை அரசாங்கங்களுக்கு அசௌகரியத்தை கொடுக்கக்கூடிய முறையில் இனப் பிரச்சினை விவகாரத்தில் நெருக்குதலை கொடுக்கக்கூடிய நிலையில் புதுடில்லி இன்று இல்லை.

இலங்கையின் புதிய ஜனாதிபதி திசநாயக்கவை ஆறு மாத காலத்திற்குள் இரு தடவைகள் சந்தித்த இந்திய பிரதமர் நரேந்திர மோடி 'மாகாணசபை தேர்தல்களை நடத்தி 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்" என்று கேட்பதற்கு பதிலாக 'மாகாணசபை தேர்தல்களை நடத்துவதுடன் அரசியலமைப்பை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும்' என்றே வேண்டுகோள் விடுத்தார். இலங்கையின் அரசியலமைப்பில் 13 வது திருத்தத்தை தவிர, வேறு எந்த சரத்தின் அல்லது திருத்தத்தின் மீது இந்திய பிரதமருக்கு அக்கறை இருக்கிறது என்று எவருக்கும் தெரியவில்லை.

13 வது திருத்தத்தை முழுமையாக அல்ல கணிசமான அளவுக்கு பகுதியாகவேனும் நடைமுறைப்படுத்துவதை தென்னிலங்கையின் பெரும்பாலான அரசியல் சக்திகள் குறிப்பாக சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் விரும்பவில்லை. அதனால், ஜனாதிபதி திசநாயக்கவுக்கு அரசியல் அசௌகரியத்தை கொடுக்கக்கூடாது என்பதற்காகவே 13 வது திருத்தத்தைப் பற்றி அவரிடம் பகிரங்கமாக கூறுவதை மோடி தவிர்க்கிறார் என்பதில் சந்தேகமில்லை. அதனால், கறுப்பு ஜூலையை தொடர்ந்து இனப்பிரச்சினையில் இந்தியா செய்த தலையீடு இன்று 42 வருடங்களுக்கு பிறகு எத்தகைய இலட்சணத்தில் இருக்கிறது என்பதை புரிந்துகொள்வதில் எவருக்கும் சிரமமில்லை.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தை பொறுத்தவரை, புதிய அரசியலமைப்பு ஒன்று கொண்டுவரப்படும் வரை மாகாணசபைகள் முறை தொடர்ந்து இருக்கும் என்பதே நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், புதிய அரசியலமைப்பில் அதிகாரப்பரவலாக்கல் ஏற்பாடு எந்த வடிவில் அமையும் என்பது எவருக்கும் தெரியாது. தென்னிலங்கையில் 13 வது திருத்தத்துக்கு காணப்படுகின்ற எதிர்ப்பை அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அந்த திருத்தம் முழுமையாக புதிய அரசியலமைப்பில் உள்வாங்கப்படும் என்பதே சந்தேகமாக இருக்கிறது. 13 வது திருத்தத்தில் உள்ள ஏற்பாடுகளை விடவும் குறைவான அதிகாரப் பரவலாக்கத்தை புதிய அரசியலமைப்பில் தேசிய மக்கள் சக்தி புகுத்தினால் தற்போதைய சூழ்நிலையில் இந்தியா எத்தகையை பிரதிபலிப்பை வெளியிடும் என்பது முக்கியமான ஒரு கேள்வி.

இந்தியாவின் தலையீட்டின் காரணமாக கொண்டுவரப்பட்ட காரணத்தினாலேயே 13 வது திருத்தம் இலங்கையின் அரசியலமைப்பில் இன்றுவரை தொடர்ந்து இருக்கிறது. இலங்கை அரசாங்கம் ஒன்று அந்த திருத்தத்தை இல்லாமல் செய்தால், அதில் உள்ளதை விடவும் குறைந்த ஒரு அதிகாரப் பரவலாக்கல் ஏற்பாட்டையாவது கொண்டுவருவதற்கு அரசாங்கத்துக்கு நெருக்குதலை கொடுக்கக்கூடிய அரசியல் வல்லமையும் துணிவாற்றலும் இன்று தமிழ்க் கட்சிகளிடம் இருக்கிறதா?

அதனால், தமிழ் அரசியல் சமுதாயம் மாகாண சபைகள் குறித்தும் 13 வது திருத்தம் குறித்தும் ஒரு தெளிவான தீர்மானத்துக்கு வரவேண்டியிருக்கிறது. 13 வது திருத்தம் இனப்பிரச்சினைக்கான முழுமையான தீர்வாகவோ அல்லது இறுதியான தீர்வாகவோ இருக்க முடியாது என்பதே பெரும்பாலான தமிழ்க்கட்சிகளின் நிலைப்பாடாக இருக்கிறது. ஆனால், இடைக்கால ஏற்பாடாக 13 வது திருத்தத்தை பயன்படுத்துவது குறித்து அவற்றில் சில கட்சிகள் அவ்வப்போது பேசுவதுண்டு.

மாகாணசபை தேர்தல்கள் கடந்த எட்டு வருடங்களாக நடத்தப்படவில்லை என்ற போதிலும், தமிழ்க் கட்சிகள் அது குறித்து பிரச்சினை கிளப்புவதில்லை. ஆனால், தேர்தல் அறிவிக்கப்பட்டால், அதில் போட்டியிடுவதற்கு அவை தயங்கப்போவதுமில்லை. மாகாணங்கள் ஜனாதிபதியின் பிரதிநிதிகளான ஆளுநர்களினால் நீண்டகாலமாக நிருவகிக்கப்படுவது குறித்து தென்னிலங்கையில் இருந்து சில சிவில் சமூக அமைப்புக்களிடமிருந்து ஆட்சேபம் கிளம்புகின்ற அதேவேளை வடக்கு, கிழக்கில் அது தொடர்பில் எந்த பேச்சுமில்லை.

இந்திய பிரதமரையும் இராஜதந்திரிகளையும் சந்திக்கின்ற சந்தர்ப்பங்களில் 13 வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்குதல் கொடுக்க வேண்டும் என்று கேட்கும் தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் தமிழ் மக்கள் மத்தியில் அல்லது அரசாங்கத்துடன் அது குறித்து பேசுவதில்லை.

இறுதியாக கடந்த ஏப்ரில் முற்பகுதியில் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய பிரதமர் மோடியை தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் சந்தித்து பேசினர். அந்த சந்திப்புக்கு பின்னர் வெளியில் வந்து இலங்கை தமிழரசு கட்சியின் பொதுச் செயலாளர் எம்.ஏ. சுமந்திரனும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் தனித்தனியாக ஊடகங்களுக்கு கூறியவற்றை இங்கு நினைவுபடுத்துவது சமகால நிலைவரங்களுக்கு பொருத்தமான முறையில் எந்தளவுக்கு அவர்கள் சிந்திக்கிறார்கள் என்பதை விளங்கிக் கொள்ள உதவும்.

'இனப்பிரச்சினைக்கு இந்திய - இலங்கை சமாதான உடன்படிக்கையின் அடிப்படையிலேயே தீர்வு இருக்க

(15ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 ஆம் ஆண்டிலும் கூட கறுப்பு ஜூலை ஏன் கவனத்தில் எடுக்க வேண்டியதாக இருக்கிறது?





**கலாநிதி ஜெகான் பெரேரா**

தலைநகர் கொழும்பிலும் நாடு பூராவும் நூற்றுக்கணக்கான தமிழர்கள் கொல்லப்படவும் பல்லாயிரக்கக்கானவர்கள் இடம்பெயரவும் வழிவகுத்த தமிழர் விரோத இனவன்செயலின் 42 வது வருடாந்தத்தை இவ்வாரம் குறித்து நிற்கிறது. யாழ்ப்பாணத்தில் 1983 ஜூலை 23 ஆம் திகதி இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலை புலிகள் மறைந்திருந்து நடத்திய தாக்குதலில் 13 படைவீரர்கள் பலியான சம்பவமே கொழும்பில் முதலில் தமிழர்களுக்கு எதிரான வன்முறையை மூளவைத்தது. அதைத் தொடர்ந்து வந்த ஒருவாரத்தைப் பற்றிய உண்மையை கண்டறிவது இன்னமும் கூட கஷ்டமானதாகவே இருக்கிறது. சட்டம், ஒழுங்கு சீர்குலைந்து அரசாங்கமே முடங்கிப்போனபோது அந்த வாரத்தில் காடையர்களின் வன்முறையில் எத்தனை தமிழர்கள் இறந்தார்கள் என்பது தீர்வு காணப்படாத பிரச்சினைகளில் ஒன்றாகும்.

தங்களது தமிழ் அயலவர்களுக்கு சிங்கள மற்றும் தமிழ்க் குடும்பங்கள் பாதுகாப்பு கொடுத்ததன் விளைவாக பெருமளவு வன்செயல்கள் தவிர்க்கப்பட்டது. 1983 ஜூலையில் இழைக்கப்பட்ட குற்றச் செயல்களுக்கு பொறுப்புக்கூற வேண்டியது தொடர்பான கேள்வியும் தடுக்கக் கூடியதாக இருந்த போதிலும், அந்த வன்செயல் ஏன் தடுக்கப்படவில்லை என்ற கேள்வியும் 2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் மற்றும் 1990 களின் பிற்பகுதியில் கொல்லப்பட்டவர்கள் புதைக்கப்பட்ட செம்மணி புதைகுழிகள் தொடர்பான இன்றைய அக்கறைகளில் எதிரொலித்துக் கொண்டிருக்கின்றன.

சனத்தொகை மத்தியில் பிளவை ஏற்படுத்துகின்றதும் வழமையான சட்ட முறைமையினால் கையாளமுடியாமல் இருக்கின்றதுமான பாரிய குற்றச் செயல்களை கையாளுவதில் நெருக்கடியை நாடுகள் மத்தியில் இலங்கை ஒன்றும் தனித்துவமானது அல்ல. இதன் காரணத்தினால் தான் மோதல்களுக்கு பின்னரான சமூகங்கள் உண்மையை நிறுவவும் பொறுப்புக்கூறும் கடப்பாட்டை மேம்படுத்தவும் நிறுவன ரீதியான பொறிமுறைகள் தேவை என்ற அடிப்படையிலும் அரசியல் வாழ்வு என்பது பின்னிப்பிணைந்த ஒன்று என்பதை அங்கீகரிக்கும் அடிப்படையிலும் நிலைமாறுகால நீதி என்ற கோட்பாடு வகுக்கப்பட்டது.

உண்மையில் நடந்தது என்ன என்பதை அறிந்து உறுதிப்படுத்துவதே இந்த செயன்முறையின் முதலாவது படியாக இருக்கவேண்டும். ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் மற்றும் செம்மணி மனிதப் புதைகுழிகளின் உண்மையைக் கையாளுவதில் சவால்களை எதிர்நோக்க வேண்டிய தேவை அரசாங்கத்துக்கு இருப்பதைப் போன்றே 1983 கறுப்பு ஜூலை பற்றிய உண்மையையும் கண்டறிந்து நிறுவவேண்டியதும் அவசியமானதாகும். பொதுமக்களினதும் சர்வதேச சமூகத்தினதும் கண்முன்னால் பாரிய அட்டூழியங்கள் இடம்பெறுவதை இலங்கை அரசு தடுக்கத்தவறிய காரணங்களை அடையாளம் காணவேண்டியது முக்கியமானதாகும். அந்த அட்டூழியங்களினால் பொதுவில் இலங்கைக்கும் குறிப்பாக சிங்களச் சமூகத்துக்கும் பல வருடங்களாக களங்கத்தை ஏற்படுத்தியிருந்தன.

ஐரோப்பாவில் இதே போன்ற சவால்களுக்கு முகங்கொடுத்திருக்கும் ஸ்பெயின் மற்றும் சைப்பிரஸ் போன்ற நாடுகளில் ஐம்பதுக்கும் தொண்ணூறுக்கும் இடைப்பட்ட வருடங்களுக்கு முன்னதாக இடம்பெற்ற அட்டூழியங்கள் பற்றிய நேரடி நினைவுகளை நடுத்தர வயதுக்கும் அதிகமானவர்களே கொண்டிருக்கிறார்கள். இலங்கையில் ஐம்பதுக்கும் குறைவான வயதுகளில் உள்ளவர்களில் பெரும்பாலானவர்களுக்கு கறுப்பு ஜூலை பற்றிய நினைவு அல்லது அறிவு கிடையாது. அதன் விளைவாக, கறுப்பு ஜூலை பற்றிய உண்மையைக் கண்டறியவேண்டும் என்று அரசியல் கோரிக்கை பெரிதாக இல்லை. ஆனால், இலங்கை ஐக்கியப்பட்ட ஒரு நாடாக முன்னேற்றம் காணவேண்டுமானால், அரசியல் இணக்கப்பாடுகளை விடவும் கூடுதலான அளவுக்கு நல்லிணக்கமே அவசியமாகிறது.

> **மாகாணசபை முறையை மீண்டும் செயற்படவைத்து அதற்கு நிதி மற்றும் நிருவாக சுயாட்சியை வழங்கினால் மக்களை ஆட்சிமுறைக்கு நெருக்கமாக கொண்டு வரமுடியும். இலங்கை அதன் குடிமக்களிடம் இருந்து முறைமை மாற்றத்துக்கான கோரிக்கையையும் அரசியல் வாழ்வில் பயனுறுதியுடைய முறையில் பங்கேற்புக்கான கோரிக்கையை சிறுபான்மைச் சமூகங்களிடம் இருந்தும் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் நிலையில், பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை இன்று மிகவும் அவசியமாகிறது.**

இனம், மதம், சாதி மற்றும் வர்க்கம் ஆகியவற்றுக்கு அப்பால் சகல சமூகங்களையும் பாதுகாத்து, மதித்து சமத்துவமானவர்களாக நடத்தக்கூடிய அரசு ஒன்றை தற்போதைய தலைமுறை கட்டியெழுப்புவதிலேயே அமைதியான - ஐக்கியமான எதிர்காலம் தங்கியிருக்கிறது. "முறைமை மாற்றத்தை" கொண்டுவருவதாக உறுதியளித்தமைக்காக மக்கள் அமோகமாக வாக்களித்து அதிகாரத்துக்கு கொண்டுவந்த தற்போதைய அரசாங்கத்துக்கு இது விடயத்தில், பிரத்தியேகமான கடப்பாடு இருக்கிறது. போட்டி அரசியல் கட்சிகளின் நிறைவேற்றத் தவறிய வாக்குறுதிகளை நிராகரித்த சகல சமூகங்களையும் சேர்ந்த வாக்காளர்களின் ஆதரவை இந்த அரசாங்கம் வென்றெடுத்தது.

உண்மையுடன் ஊடாடுவதற்கும் மீண்டும் அத்தகைய வன்செயல் இடம்பெறுவதற்கு அனுமதிப்பதில்லை என்ற கூட்டு உறுதிப்பாட்டைப் பலப்படுத்துவதற்குமான ஒரு தருணமாக கறுப்பு ஜூலையை நினைவுகூர வேண்டியது அவசியமாகும். இந்த பின்புலத்தில், அரசாங்கத்தின் உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு 1983 ஜூலை நிகழ்வுகளை ஆராயவேண்டிய தேவை இருக்கிறது. ஆணைக்குழு தொடர்பான சட்டமூல வரைவு அந்த விடயங்களை கூறுகிறது.

"1983 ஜூலை 24 ஆம் திகதி தொடக்கம் 2009 மே 18 ஆம் திகதி வரை வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இடம்பெற்ற மோதல்களின்போது இடம்பெற்ற, அவற்றுடன் தொடர்புபட்ட அல்லது அவற்றைத் தொடர்ந்து இடம் பெற்றதாகக் கூறப்படுகின்ற உயிரிழப்புகள் அல்லது சொத்துச் சேதங்கள் அல்லது மனித உரிமை மீறல்களை ஆராய்வதை வீச்செல்லையாக ஆணைக்குழு கொண்டிருக்கும் " என்று சட்டமூலத்தின் 12 வது பிரிவு கூறுகிறது.

உண்மையிலேயே, கறுப்பு ஜூலை உண்மையைத் தேடும் உத்தியோகபூர்வ செயன்முறையில் இருந்து விலக்கி வைக்கப்படக்கூடாது. நீதி மற்றும் சமத்துவமான குடியுரிமையின் அடிப்படையிலான நாடொன்றை இளைய தலைமுறையினர் பொறுப்பேற்க வேண்டுமாக இருந்தால், கடந்த காலத்தில் என்ன நடந்தது என்பதையும் ஏன் நடந்தது என்பதையும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும்.

ஆனால், இலங்கை கடந்த காலத்தை வெற்றிகொண்டு சகல சமூகங்களையும் அரவணைக்கின்ற ஐக்கியப்பட்ட ஒரு நாடாக வரவேண்டுமாக இருந்தால், அது கடந்த காலத்தை ஆராய்வதை விடவும் கூடுதலான காரியங்களையும் செய்தாக வேண்டும். மோதலுக்கும் பாகுபாட்டுக்கும் அடிப்படையாக இருக்கும் காரணிகளுக்கு தீர்வு காணக்கூடிய அரசியல் கட்டமைப்பு ஒன்றை உருவாக்க வேண்டியது நல்லிணக்கத்துக்கு அவசியமாகிறது. இனம், மதம், சாதி மற்றும் வர்க்கம் எல்லாவற்றுக்கும் அப்பால் சகல சமூகங்களையும் பாதுகாக்கக்கூடிய ஆட்சிமுறைமை ஒன்றை கட்டியெழுப்புவதிலேயே அமைதியான எதிர்காலம் தங்கியிருக்கிறது.

கடந்த பத்து மாதங்களாக முக்கியமான மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன. புதிய அரசாங்கம் வீணான பொதுச் செலவினங்களைக் குறைத்திருப்பதுடன் அரசியல் தலைவர்களின் சிறப்புரிமைப் கொடுப்பனவுகளையும் கட்டுப்படுத்தியிருக்கிறது. அரச நிறுவனங்கள் பூராவும் செலவினங்களை கடுமையாகக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதை காணக்கூடியதாக இருக்கிறது. ஊழலைச் சகித்துக்கொண்ட அரசியல் கலாசாரம் மாறிவருகின்றது. நாம் முன்னென்றுமே கண்டிராத வகையில் முன்னாள் அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் எதிராக வழக்குத் தொடுநர்களாலும் நீதிமன்றங்களினாலும் சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஆனால், முறைமை மாற்றத்தை கொண்டுவருவதாக வாக்குறுதியளித்து மக்களின் அமோக ஆதரவைப் பெற்று அதிகாரத்துக்கு வந்த அரசாங்கம் அது விடயத்தில் முக்கியமாக நிறைவேற்ற வேண்டிய ஒரு பணியை இன்னமும் செய்யவில்லை. தேசிய தீர்மானங்களை மேற்கொள்வதில் பல்லின, பல மத பங்கேற்புக்கு வகைசெய்யக்கூடிய அதிகாரப்பரவலாக்கமே அதுவாகும். சுதந்திரத்துக்கு முன்னரான காலப்பகுதியில் இருந்தே பிரிட்டிஷ் காலனித்துவ ஆட்சியில் அத்தகைய பங்கேற்புக்கான கோரிக்கை தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களிடம் இருந்து வந்தது.

பெரும்பான்மைச் சமூகத்துக்கும் சிறுபான்மைச் சமூகங்களுக்கும் இடையில் ஒப்புரவான முறையில் அரசியல் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு தவறியதே மூன்று தசாப்தகால உள்நாட்டுப் போருக்கும் கறுப்பு ஜூலை போன்ற பாரிய வன்குறைகளுக்கும் வழிவகுத்த இனமுரண்நிலையின் மூலக்காரணியாகும். தமிழ் அரசியல் தலைவர்களின் சமாதான முறையிலான முயற்சிகள் அலட்சியம் செய்யப்பட்டதன் விளைவே விடுதலை புலிகளினதும் பரந்தளவில் தமிழ்த் தீவிரவாத இயக்கத்தினதும் ஆயுதப் போராட்டமாகும். அந்த போராட்டத்தின் இலக்கு பெரும்பான்மைச் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் மத்தியமயப்பட்ட அரச கட்டமைப்பு சிறுபான்மைச் சமூகங்கள் மீது செலுத்தும் மேலாதிக்கத்தை முடிவுக்கு கொண்டு வருவதாகவே இருந்தது.

சமூகங்களுக்கு இடையில் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்ள வேண்டிய தேவையை நிறைவேற்றுவதற்காகவே 1987 ஆம் ஆண்டில் மாகாணசபைகள் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. ஆனால், 2018 ஆம் ஆண்டுக்கு பிறகு மாகாணசபை தேர்தல்கள் நடத்தப்படவில்லை. அரசாங்கத்தின் இரண்டாவது அடுக்கு இயங்காமல் இருக்கிறது என்பதே இதன் அர்த்தமாகும். மாகாணங்கள் நடைமுறையில் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஆளுநர்களின் நிருவாகத்தின் கீழ் இருந்து வருகின்றன.

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் விஞ்ஞாபனத்தின்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜே.ஆர். அன்று சுமத்திய குற்றச்சாட்டை ஜே.வி.பி. இன்று ஏற்றுக்கொண்டுள்ளதா?

பனங்காட்டான்

கூசினியிலிருந்து குத்தாட்டம் வரை, வரி வசூலிலிருந்து வான் வழிப் பயணம் வரையான அனைத்துமே இன்று அரசியலாகி விட்டது என்று ஐரோப்பிய நாட்டு அரசியல் விமர்சகர் ஒருவர் சில மாதங்களுக்கு முன்னர் கூறியிருந்தார்.

உலக நாடுகளில் இலங்கை ஒரு குட்டித் தீவாக இருந்தாலும் மேற்கூறிய கருத்து நூற்றுக்கு நூறு இதற்கும் முற்றிலும் பொருத்தமானது. இதற்கு உதாரணமாக நிகழ்கால மூன்று விடயங்களை நோக்கலாம்.

அநுர குமரவின் தேசிய மக்கள் அரசாங்கம் முன்மொழிந்துள்ள புதிய கல்வித்திட்டம், தொடரும் செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழிகள், கறுப்புயூலை நினைவு நிகழ்வுகள் என அனைத்தும் அரசியலுடன் இணைந்தவைகளாக காணப்படுகின்றன.


ஆட்சிக்கு வந்து ஒரு வருடத்துக்குள் அமசடக்கமாக புதிய கல்வித்திட்டம் ஒன்றை கல்வியமைச்சராகிய பிரதமர் ஹரிணி அமரசூரிய தயாரித்துள்ளார். இதனை நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியத்தை விளக்கி அருமையானதொரு உரையை ஜனாதிபதி அநுர குமர நாடாளுமன்றத்தில் நிகழ்த்தியுள்ளார்.

இளைய பரம்பரையினரின் கல்வியோடுட சம்பந்தப்பட்ட ஒரு திட்டத்தை தயாரிப்பதற்கு திறந்தவெளி ஆலோசனை பெற்றிருக்க வேண்டும். ஒரு பாடப்புத்தகத்தை தயாரிப்பதற்கே துறைசார் கல்வியாளர் குழுவை நியமிப்பது வழமை. ஆனால் இப்போது தயாரிக்கப்பட்டுள்ள கல்வித்திட்டத்தை உருவாக்கியவர்கள் யார்? ஆசிரிய சங்கங்கள், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் என்று எவரது ஆலோசனையும் பெறாது கல்வி அமைச்சர் இதனை தயாரித்துள்ளதாகத் தெரிகிறது. இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் விரிவுரையாளராக இருந்தவர் என்ற தகைமை மட்டும் உள்ள இவரால் எவ்வாறு மாணவர்களின் எதிர்காலத்தை தீர்மானிக்க முடியும்?

1931ல் இலங்கை சட்டசபையில் கல்வி அமைச்சராகவிருந்த சி. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா அறிமுகம் செய்த இலவச கல்வித் திட்டமும், 1956ல் கல்வி அமைச்சராகவிருந்த டபிள்யு. தகநாயக்க (பணிஸ் மாமா) அறிமுகம் செய்த இலவச மதிய உணவு திட்டமுமே இதுவரை மாற்றமில்லாது இருப்பவை. பதியுதீன் மஹ்முத் கல்வி அமைச்சராக இருந்தபோது அறிமுகம் செய்த என்.சி.ஜி.இ., எச்.என்.சி.இ. கல்வித் திட்டங்களை பின்னர் அமைச்சராக வந்த ரணில் விக்கிரமசிங்க இல்லாமற் செய்தார். இப்படித்தான் சகல கல்வி அமைச்சர்களும் முன்னைய அமைச்சர்கள் அறிமுகம் செய்த திட்டங்களை மாற்றியமைத்தனர்.

இது, மாணவர்களின் கல்வியோடு அரசியல்வாதிகள் நடத்தும் விளையாட்டு. இப்போது ஹரிணி அமரசூரிய தயாரித்துள்ள கல்வித் திட்டத்தை அடுத்துவரும் அரசாங்கம் இல்லாமற் செய்யும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? மாணவர் கல்வி என்பது சிறுகதையோ குறுங்கதையோ அல்ல. தொடர்கதை போன்றது. ஒவ்வொரு ஆட்சியாளரும் மாணவர்களோடு தங்கள் வித்தையை காட்ட முனையக் கூடாது.

கிருசாந்தி என்ற சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவியின் படுகொலையுடன் ஆரம்பமான மனிதப் புதைகுழி நெடுங்கதையாகி, இப்போது சித்துப்பாத்தி இந்து மயானத்தில் பல எலும்புக்கூடுகளை வெளியே கொண்டு வருகிறது. யூலை 25 வரையான காலப்பகுதிக்குள் 90 எலும்புக்கூடுகள் இவ்வாறு மீட்கப்பட்டுள்ளன. குழந்தை ஒன்றுடன் அதன் பால் போச்சியும் காணப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் பல சிறார்களின் எலும்புக்கூடுகளும் எச்சங்களும் அவர்களின் உடைகளும் பாடசாலை பைகளும் மீட்கப்பட்டுள்ளன.



முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பு நாளை போர் வெற்றி நாளாக மகிந்த அரசு கொண்டாடியதற்கும், 1983 கறுப்பு யூலை தமிழின அழிப்பு நாளை ஜே.வி.பி.யின் தேசிய மக்கள் சக்தி அரசு நட்புறவு நாளாக கொண்டாடுவதிலும் என்ன வித்தியாசம்?

செம்மணி சித்துப்பாத்தி மயானம் நல்லூர் பிரதேச சபையின் நிர்வாகத்திலானது. இந்த வருட ஆரம்பத்தில் இங்கு எரியூட்டும் மயான மேடை அமைக்க நல்லூர் பிரதேச சபை 55 லட்சம் ரூபாவை ஒதுக்கியது. இதற்கான ஆரம்ப வேலையாக நிலத்தை தோண்டும்போதுதான் மனித எலும்புகள் காணப்பட்டன. இதனை மூடி மறைத்து எரியூட்டும் மேடையைக் கட்டுமாறு மயான சபைக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டது. எனினும், துணிச்சலான இரண்டு உறுப்பினர்கள் பொலிசில் முறைப்பாடு செய்ததால் விவகாரம் நீதிமன்றம் சென்றது. இனவெறி படையினரின் அராஜகத்தை வெளிக்கொணர வழிவகுத்த அந்த இருவருக்கும் தமிழர் சமூகம் நன்றிக் கடப்பாடு உடையது.

மனிதப் புதைகுழிக்கு நீதி விசாரணை நடைபெறுமென்று சில அமைச்சர்கள் கூறுகின்றனர். கடந்த வாரம் யாழ்ப்பாணம் சென்று பல நிகழ்ச்சிகளில் பங்கேற்ற சபாநாயகர் மற்றும் அமைச்சர்கள் எவரும் புதைகுழிப் பக்கம் எட்டியும் பார்க்கவில்லை. 1971 முதல் 1989 வரையில் ஆயிரக்கணக்கான இவர்களின் தோழர்கள் படுகொலை செய்யப்பட்டவர்கள். அவர்களின் எலும்புக்கூடுகளின் மேல் நின்று தேர்தலை நடத்தி ஆட்சிக்கு வந்தவர்களுக்கு படுகொலைகளின் வலி தெரியாதிருக்க முடியாது. ஜனாதிபதி அநுர குமர இது தொடர்பாக அசாத்திய மௌனம் சாதிப்பது ஏனென்று புரியவில்லை.

நீதியான விசாரணையையும் நியாயமான நீதியையும் இவரது தலைமையிலான அரசாங்கம் வழங்க வேண்டுமென பாதிக்கப்பட்டவர்கள் எதிர்பார்க்கிறார்கள். வசதி கருதிய மறதியாக இதனை ஆட்சித்தரப்பு எடுத்துக் கொள்ளக்கூடாது.



கறுப்பு யூலை வாரம் 42வது ஆண்டாக நினைவு கூரப்படுகிறது. 1983 யூலையில் இனப்படுகொலைக்கு ஆளானவர்களுக்கு எந்த விசாரணையும் நடத்தப்படவில்லை. அகதிகளாக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமும் கிடைக்கவில்லை. தமிழர்களின் வணிக நிறுவனங்கள், சொத்துகள் கொள்ளையடிக்கப்பட்டன. இதன் உரிமையாளர்கள் வெட்டியும் கொத்தியும் எரிக்கப்பட்டனர்.

தர்மிகஷ்டர் என்று கூறப்பட்ட அன்றைய ஜனாதிபதி ஜே.ஆரின் ஆசிர்வாதத்துடன் மேற்கொள்ளப்பட்ட மோசமான இனஅழிப்பு இது. அப்போதைய பிரதமர் ரணசிங்க பிரேமதாச புத்தம் தர்மம் கூறிக்கொண்டு குண்டர்களுக்கு உதவி வழங்கினார் என்ற குற்றச்சாட்டுக்கு உள்ளானவர். 1983 யூலை 23 நள்ளிரவுக்கு பின்னர் ஜே.ஆர். அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட ஊழித்தாண்டவம் சுமார் ஒரு வாரத்துக்கு மேலாக நீடித்தது.

இது ஆரம்பமாவதற்கு பன்னிரண்டு நாட்களுக்கு முன்னர், யுலை 11ம் திகதி லண்டன் ரெலிகிராப் பத்திரிகையின் செய்தியாளர் இயன் மார்ட் அவர்களுக்கு அளித்த செவ்வியில் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன குறிப்பிட்ட வாசகம் சர்வதேச அளவில் பிரபல்யமானது.

'The more you put the pressure in the North, the happier the Sinhala people will be here. Really, if I starve the Tamils out, the Sinhala people will be happy'. (வடக்குக்கு நான் மேலும் அழுத்தம் கொடுத்தால் இங்குள்ள சிங்கள மக்கள் மிகவும் மகிழ்ச்சி அடைவர். உண்மை யாக, தமிழர்களை நான் பட்டினி போட் டால் சிங்கள மக்கள் மேலும் மகிழ்வடை வர்) என்று கூறிய இவரது எதிர்பார்ப்பை இவரது அரசிலிருந்த அமைச்சர் சிறில் மத்தியு பொறுப்பேற்று நிறைவேற்றினார்.

ஆனால், 1983 இனஅழிப்புக்கு தாம் அவ்வாறு தெரிவித்ததோ அல்லது தமது ஐக்கிய தேசிய கட்சி அரசோ ஒருபோதும் காரணமில்லை என்றே ஜே.ஆர். தொடர்ந்து கூறி வந்தார். இதனை நிரூபிக்கும் வகையில் நாட்டு மக்களுக்கான தமது உரையையும் அவர் தயாரித்திருந்தார்ட தமிழ் மக்கள் மீதான தாக்குதல், படுகொலைகள், சொத்தழிப்புகளுக்கு இடதுசாரி கட்சிகளும் (சமசமாஜ கட்சி, கம்யுனிஸ்ட் கட்சி), ஜே.வி.பி.யினருமே காரணம் எனக்கூறி அவைகளைத் தடை செய்தார். இந்த வரலாறு ஜே.ஆரின் இனவாத பக்கங்களுக்கு முக்கிய பகுதி.

இது இடம்பெற்று 41 வருடங்களின் பின்னர் ஜே.வி.பி.யின் மறுவடிவமான தேசிய மக்கள் சக்தி ஆட்சிக்கு வந்தது. இவர்கள் தமது ஆட்சிக் காலத்தில் சந்தித்த முதலாவது கறுப்பு யூலை இந்த வாரத்திலானது. உண்மையாகவே தங்கள் அரசு இன மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது என்று தேர்தல் காலத்தில் கூறியதை நிரூபிப்பதற்கு இவர்களுக்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். குறிப்பாகச் சொல்வதானால், கறுப்பு யூலையை இவர்களும் சேர்ந்தே அனுஷ்டித்திருக்க வேண்டும். இதனை முன்னிட்டு ஜனாதிபதி அநுர குமர விசேட அறிக்கையைக் கூட வெளியிட்டிருக்கலாம்.

மாறாக, கறுப்பு யூலை நாளை நட்புறவு நாள் என்று நகைப்புக்கு இடமாகப் பிரகடனப்படுத்தி, தமது தோழர்களை ரயிலில் யாழ்ப்பாணம் அனுப்பி குத்தாட்டம் நடத்தி, வலி சுமந்த மக்களை புண்படுத்தியிருக்கிறார் அநுர குமர. சிங்கள பௌத்த இனவாத வரலாற்றை மறைக்க எடுக்கப்படும் முயற்சிகளில் இதுவும் ஒன்று.

முள்ளிவாய்க்கால் தமிழினப் படுகொலை நாளை போர் வெற்றி நாள் என்று மகிந்த அரசு பிரகடனம் செய்து கொண்டாடியதற்கும், கறுப்பு யூலை இனப்படுகொலை நாளை நட்புறவு நாளென்று அறிவித்து தமிழர்களின் உணர்வை மலினப்படுத்தியதற்கும் என்ன வித்தியாசம்?

கறுப்பு யூலை தமிழின அழிப்புக்கு ஜே.வி.பி.யை குற்றஞ்சாட்டி அவர்களைத் தடை செய்ததை, நட்புறவு நாள் கொண்டாட்டத்தின் வாயிலாக ஜே.வி.பி.யின் ஆட்சி ஏற்றுக்கொண்டுள்ளதாக எடுத்துக் கொள்ளலாமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு



# யாழ்ப்பாண மனிதப்புதைகுழி, திசநாயக்க அரசாங்கத்துக்கு ஒரு சோதனை!

மீரா சிறினிவாசன்

உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் பெரும் கவனத்தைப் பெற்றிருக்கும் இலங்கையின் வடக்கு யாழ்ப்பாண மாவட்டத்தின் மனிதப் புதைகுழி பகுதி தமிழ் மக்களின் மனக்குறைகளை தீர்த்துவைப்பதாக உறுதியளித்த ஜனாதிபதி அநுர குமார திசநாயக்கவின் அரசாங்கத்தை ஒரு சோதனைக்கு உள்ளாக்கியிருக்கிறது.

முன்னாள் போர் வலயங்களில் ஒன்றான யாழ்ப்பாணத்தின் புறநகர்ப் பகுதியான செம்மணியில் இந்த வருடம் பெப்ரவரியில் இந்து தகனசாலை ஒன்றை நிர்மாணிப்பதற்காக நிலத்தை தயார்ப்படுத்திக் கொண்டிருந்த போது மனித எலும்புகளைக் கண்டெடுத்ததை அடுத்து மனிதப்புதை குழிப் பகுதி கண்டுபிடிக்கப்பட்டது. அவர்கள் உடனடியாக அதிகாரிகளுக்கு அறிவித்ததை அடுத்து அந்த நிலப்பகுதியை தோண்டி மேற்கொண்டு விசாரணை நடத்துமாறு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிமன்றம் உத்தரவிட்டது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர்களின் உதவியுடன் சிரேஷ்ட தொல்லியல் நிபுணர், தடயவியலிலும் மானிடவியலிலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் உட்பட சட்ட மருத்துவ அதிகாரிகள் உள்ளடங்கிய நிபுணர்கள் குழுவொன்று, தற்போது மக்கள் செல்ல முடியாதவாறு தடைவிதிக்கப்பட்டிருக்கும் புதைகுழி பகுதியை அகழும் பணிகளில் ஈடுபட்டு வருகிறார்கள். அகழ்வுப் பணிகளுடன் பரிச்சயம் கொண்ட உத்தியோகபூர்வ வட்டாரங்களிடமிருந்து பெறக்கூடியதாக இருக்கும் தகவல்களின் பிரகாரம் இதுவரையில் 75 மனித எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் சிறுவர்களின் எலும்புக்கூடுகளும் இருப்தாகவும் நம்பப்படுகிறது. பாடசாலைப் பைகள் மற்றும் தனிப்பட்ட உடைமைகளும கண்டெடுக்கப்பட்டிருக்கின்றன.

தினமும் கண்டெடுக்கப்படும் பல எலும்புக்கூடுகள் பற்றிய தகவல்கள் தலைப்புச் செய்திகளாக ஊடகங்களில் வெளியாகிக் கொண்டிருப்பதற்கு மத்தியில், அதிகரிக்கும் எலும்புக்கூடுகளின் எண்ணிக்கை உள்ளூர் மக்களுக்கு குறிப்பாக காணாமல்போன தங்களது அன்புக்குரியவர்கள் பற்றிய உண்மையை அறிவதற்காக வருடக்கணக்காக போராடிக் கொண்டிருக்கும் உறவினர்களை பெரும் வேதனைக்கு உள்ளாக்கியிருக்கிறது. விடுதலை புலிகளை தோற்கடித்து அரச ஆயுதப்படைகள் கொடிய உள்நாட்டுப்போரை முடிவுக்கு கொண்டு வந்து 16 வருடங்கள் கடந்துவிட்ட போதிலும், காணமல்போனவர்கள் பற்றிய உண்மையைக் கண்டறிவதில் மக்கள் தொடர்ந்தும் உறுதியாக இருக்கிறார்கள். போரில் பல்லாயிரக்கணக்கான மக்கள் படுகொலை செய்யப்பட்டார்கள்.


தனது 21 வயது சகோதரன் 1996 ஆம் ஆண்டில் இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட நேரத்தில் இருந்து பொன்னம்பலம் ஆறுமுகசாமி அவரை கண்டறிவதற்கான முயற்சியிலேயே தனது பெருமளவு நேரத்தையும் சக்தியையும் செலவிட்டு வருகிறார். 'காணாமல் போன உறவினர்களுக்காக ஏக்கிக்கொண்டிருக்கும் நாம் ஒவ்வொருவரும் எமது சகோதரனுக்கு அல்லது மகனுக்கு அல்லது மகளுக்கு நேர்ந்த கதி என்னவென்று தெரியாமல் சொல்லொணா வேதனைக்கு உள்ளாகியிருக்கிறோம்' என்று யாழ்நகருக்கு அண்மையாக வசிக்கும் 75 வயதான ஆறுமுகசாமி கூறுகிறார்.

காணாமல்போனோர் பற்றிய தகவல்கள் இன்னமும் தெரியாமல் இருக்கும் அதேவேளை, யாழ்நகருக்கு வெளியே மண்ணுக்குள் தாறுமாறாக புதைந்துகிடக்கும் மனித எச்சங்கள் பற்றிய செய்திகள் மனக்குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. காணாமல்போன தங்களது அன்புக்குரியவர்கள் எங்காவது உயிருடன் இருக்கக்கூடும் என்ற நம்பிக்கை உணர்வுக்கும் அல்லது அவர்களுக்கு மோசமான கதி ஏற்பட்டிருக்கக்கூடும் என்ற பீதிக்கும் இடையில் குடும்பங்கள் அவலப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

செம்மணி கவனத்தை ஈர்த்திருப்பது இதுதான் முதற்தடவை அல்ல. 1990 களின் பிற்பகுதியில் கிரிசாந்தி குமாரசுவாமி என்ற 18 வயதான தமிழ் மாணவி பாலியல் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடூர சம்பவம் தொடர்பான வழக்கில் குற்றவாளிகளாக காணப்பட்டவர்களில் ஒருவரான படைவீரர் சோமரத்ன ராஜபக்ச தனது சாட்சியத்தில் செம்மணியில் 300 - 400 சடலங்கள் புதைக்கப்பட்டதாக அதிர்ச்சிதரும் தகவலை வெளியிட்டார்.

அவரின் தகவலையடுத்து அதிகாரிகள் அந்த இடத்தில் சுமார் 15 கண்டெடுத்தார்கள். ஆனால், அதற்கு பிறகு அது சம்பந்தமான வழக்கு கைவிடப்பட்டது. அதனால், குழப்பகரமான கடந்த காலத்துக்கு முகங்கொடுக்கின்ற அதேவேளை விசாரணைகளை முன்னெடுப்பதில் திசநாயக்கவின் நிருவாகம் எந்தளவுக்கு முன்வரும் என்பதிலேயே தற்போது இடம் பெற்றுவரும் செம்மணி அகழ்வுகளின் திசை தங்கியிருக்கிறது.





### அரசியல் துணிவாற்றல்

தமிழ்பேசும் மக்கள் பெரும்பான்மையாக வாழும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் கடந்த வருடத்தைய பாராளுமன்ற தேர்தலில் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு கிடைத்த பாரிய ஆணையைச் சுட்டிக்காட்டி 'இந்த அரசாங்கம் தனித்துவமானது' என்று இலங்கையின் நீதியமைச்சர் ஹர்ஷன நாணயக்கார கூறினார். 'அதன் அர்த்தம் சிங்களவர்களை பெரும்பான்மையாகக் கொண்ட தெற்கையும் தமிழ்பேசும் மக்களை பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கையும் பிளவுபடுத்திய இனவாத அரசியல் பெரும்பாலும் முடிவுக்கு வந்துவிட்டது என்பதேயாகும். எம்மைத் தெரிவுசெய்வதில் வடக்கையும் தெற்கையும் சேர்ந்த மக்கள் ஒன்றிணைந்திருக்கிறார்கள் என்றே தெரிகிறது. அதனால், முன்னைய அரசாங்கங்களைப் போலன்றி, அவர்களின் அபிலாசைகளை நிறைவு செய்வதிலும் நல்வாழ்வை கவனிப்பதிலும் எமக்கு மிகவும் பெரிய பொறுப்பு ஒன்று இருக்கிறது' என்று நாணயக்கார தனது அமைச்சில் வைத்து 'தி இந்து' வுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் கூறினார்.

பெருங்கேடான மரணங்களை, ஆட்கள் காணாமல் போன சம்பவங்களை மற்றும் இழப்புக்களினால் அவலப்பட்டவர்களின் மனக்குறைகளை தீர்த்துவைப்பதில் திசநாயக்க அரசாங்கத்துக்கு 'முற்றுமுழுதான அரசியல் துணிவாற்றல்" இருக்கிறது என்று கூறிய நாணயக்கார, (ஜனாதிபதி தலைமையிலான ஆளும் கூட்டணியின் பிரதான அங்கத்துவ கட்சியான) ஜனதா விமுக்தி பெரமுனவும் (ஜே.வி.பி.) 1980 களின் பிறபகுதியில் அதே அவலங்களைச் சந்தித்ததால் இந்த பிரச்சினையை நாம் மிகுந்த அக்கறையுடன் கையாளுவோம் என்று குறிப்பிட்டார்.

உலகில் காணாமல் போனோரின் எண்ணிக்கையை மிகவும் உயர்வாகக் கொண்ட நாடுகளில் இலங்கை ஒன்று என்று சர்வதேச மன்னிப்புச்சபை மதிப்பிட்டிருக்கிறது. 1970 களின் முற்பகுதியிலும் 1980களின் பிற்பகுதியிலும் இடதுசாரி ஜே.வி.பி. முன்னெடுத்த ஆயுதக் கிளர்ச்சிகளில் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் காணாமல்போன சிங்களப் பெரும்பான்மை தென்னிலங்கை உட்பட நாடுபூராவும் இருந்து 60 ஆயிரத்துக்கும் ஒரு இலட்சத்துக்கும் இடைப்பட்ட எண்ணிக்கையான காணாமல்போனோர் தொடர்பான முறைப்பாடுகள் விசாரணை செய்யப்படாமல் இருக்கின்றன. மனித புதைகுழிகள் கண்டு பிடிக்கப்படுகின்ற ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் (மிகவும் அண்மையில் வடமாகாணத்தில் மன்னார் நகரிலும் முல்லைத்தீவின் கொக்குத் தொடுவாயிலும் அடையாளம் காணப்பட்ட மற்றைய இரு மனிதப் புதைகுழி பகுதிகளில் காணப்பட்டதைப் போன்று) காணாமல் போனோரின் குடும்பங்கள் இன்னொரு சுற்று மன அழுத்தத்துக்கும் நம்பாக்கைக்கும் நம்பிக்கையின்மைக்கும் உள்ளாகிறார்கள்.

காணாமல் போனவர்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்காக 2016 ஆம் ஆண்டில் மைத்திரிபால சிறிசேன - ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் அமைக்கப்பட்ட காணாமல்போனோர் விவகார அலுவலகத்தின் [illegible] அரசாங்கம் தற்போது நாடுபூராவும் 14 மனிதப்புதைகுழி பகுதிகளை கவனித்து வருகிறது என்று அதிகாரிகள் கூறினார்கள். 'பணம் ஒரு பிரச்சினை இல்லை' என்று கூறிய நீதியமைச்சர் நாணயக்கார, 2025 ஜூன் 25 வரை செம்மணி அகழ்வுப் பணிகளுக்காக ஒரு கோடியே 17 இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டி ருந்ததாக குறிப்பிட்டார்.

இலங்கையின் காணாமல்போனோர் விவகார அலுவலகச் சட்டத்தின் பிரகாரம் (அரசிடமிருந்து நிதி ஒழுங்காக கிடைப்பதை உறுதிசெய்தல், ஊடகங்களுக்கு வசதி செய்துகொடுக்கும் பிரச்சினைகளில் தலையீடுசெய்தல், சாத்தியமாகும் சந்தர்ப்பங்களில் பலியானவர்களை அல்லது பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கு உதவுவது போன்ற) நிருவாகப் பணிகளுக்கு ஆதரவாகச் செயற்படுகின்ற அதேவேளை, மனிதப்புதைகுழி விவகாரங்களில் ஒரு அவதானியாகச் செயற்படுவதற்கான காணாமல் போனோர் விவகார அலவலகத்துக்கு அதிகாரம் இருக்கிறது.

மனிதப்புதைகுழிகள் குறித்து விசாரணை செய்வது என்பது 'மிகவும் சிக்கலான ஒரு செயற்பாடு' என்று காணாமல் போனோர் விவகார அலுவலகத்தைச் சேர்ந்த ஒரு ஆணையாளர் மிராக் றஹீம் கூறினார். முதலில், புதைகுழிகளை தோண்டுவதே அழிவுத்தமான ஒரு செயலாகும். சம்பந்தப்பட்ட பகுதிகள், எலும்புக்கூடுகளை கண்டெடுப்பதற்காக நாசப்படுத்தப்பட வேண்டும். பிறகு அவற்றை ஒருபோதும் புனர்நிர்மாணம் செய்யமுடியாது. மனித எச்சங்களை கண்டெடுப்பதில் மாத்திரமல்ல, அந்த இடங்களில் இருந்து சாத்தியமானளவு கூடுதலான தகவல்களை சேகரிப்பதிலும் கவனம் செலுத்தப்படுகிறது. உதாரணமாக உடல்களின் திசையமைவு, இடங்களின் புவியியல், புதைகுழிகளின் எல்லைகள் போன்ற விபரங்கள் அந்த இடங்கள் எவ்வாறு தோண்டப்பட்டிருக்கக்கூடும் என்பதை அறிவதற்கான பயனுடைய குறிகாட்டிகளாக அமையும் என்று அவர் கூறினார்.

உலகளாவிய அனுபவங்களின் அடிப்படையில் நோக்கும்போது புதைகுழிகளை அகழ்வதற்கான அத்தகைய முயற்சிகளுக்கு தடய மானிடவியலாளர்கள், தடய அகழ்வாய்வாளர்கள், வரலாற்றியலாளர்கள், குற்றவியலாளர்கள், மரபணுவியலாளர்கள் மற்றும் ஏனையோரைக் கொண்ட பல்துறை நிபுணத்துவ குழு ஒன்று தேவைப்படுகிறது என்று றஹீம் சுட்டிக்காட்டினார். புதைகுழி பகுதிகளில் கண்டெடுக்கப்படுபவற்றுடன் சேர்த்து சாட்சிகளின் வாக்குமூலங்களையும் பகுதிகளைச் சூழ இடம் பெற்றிருக்கக்கூடிய நிகழ்வுகளையும் விசாரணையாளர்கள் பரிசீலிக்கிறார்கள். ஏனென்றால், மனிதப்புதைகுழிகள் தனியொரு சம்பவத்தின் விளைவானவை அல்லாமல் இருக்கக் கூடும். அதனால் உண்மையை நிறுவுவதற்கு விசாரணைகளுக்கும் ஆய்வுகளுக்கும் ஒருங்கிணக்கப்பட்ட ஒரு அணுகுமுறை அவசியம். அல்லது முரண்பாடுகள் நிறைந்ததும் முடிவுகளை எடுப்பதற்கும் பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் காண்பதற்கும் உதவாததுமான அறிக்கைகளையே நாம் இறுதியில் பெறவேண்டியிருக்கும் என்று அவர் விளக்கமளித்தார்.

### தொழில்நுட்ப நிபுணத்துவம்

புதைகுழிகளை தோண்டுவதற்கும் அதையடுத்து நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் அரசியல் துணிவான்றல் முக்கியமானது என்றாகிற அதேவேளை, தொழில்நுட்ப நிபுணத்துவமும் அவசியமானது என்று நிபுணர்கள் கூறுகிறார்கள். காணாமல்போனோரின் குடும்பங்கள், செயற்பாட்டாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள் புதைகுழி அகழ்வு விவகாரம் தொடர்பாக முன்னர் அறிந்திருக்கவில்லை. ஆனால், இப்போது குவாட்டமாலா, ஆர்ஜண்டீனா மற்றும் ருவாண்டா போன்ற நாடுகளின் புதைகுழிகள் கையாளப்பட்டதன் பின்புலம் உட்பட பெருமளவுக்கு விடயங்களை நாம் தெரிந்து வைத்திருக்கிறோம் என்று காணாமல் போனோரின் குடும்பங்களுடன் பணியாற்றி அவர்களுக்காக முன்னிலையாகின்ற சட்டத்தரணியான றனிதா குணராஜா கூறுகிறார்.

மனிதப்புதை குழிகளை கண்டறிவதிலும் அகழ்வுப் பணிகளிலும் மூலோபாயங்கள், முறைமைகள், சட்ட ரீதியான செயன்முறை மற்றும் சவால்களையும் பல்வேறுபட்ட அணுகு முறைகளையும் நாம்இப்போது கூடுதலான அளவுக்கு அறிந்து வைத்திருக்கிறோம் என்றும் அவர் கூறினார். மரபணு தரவுத்தளம் ஒன்று இல்லாமல் இருப்பது போன்ற சில சவால்கள் தொடர்ந்து இருக்கின்ற போதிலும் கூட, மனிதப்புதை குழிகளை கையாளுவதற்கான சிறந்த வசதிகளை இலங்கை கொண்டிருக்கிறது என்பதை அவரின் கருத்துக்கள் எடுத்துக்காட்டுகின்றன.

நன்கு பழுதடைந்த மனித எச்சங்களை கையாளுவதற்கான மரபணு வங்கியும் விசேடமான மரபணு ஆய்வு கூடங்களும் எம்மிடம் இல்லை. மனிதப் புதைகுழிகளில்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கௌரவ உறுப்பினர்களும் அகௌரவ செயல்பாடுகளும்

கந்தையா அருந்தவபாலன்

இலங்கையின் எழுத்தறிவு வீதம் சராசரி 93. அதாவது சனத்தொகையில் ஒவ்வொரு நூறுபேரிலும் தொண்ணூறு பேர் எழுத வாசிக்கத் தெரிந்தவர்கள். சராசரியை விட உயர்வான எழுத்தறிவு வீதத்தைக் கொண்ட மாவட்டங்களுள் யாழ்பபாணமும் உள்ளடங்கும். இதற்கு மேலாக யாழ்ப்பாணத்தவர்கள் அறிவாளிகள். பண்பாடு மிக்கவர்கள். தமிழ்ப் பண்பாட்டின் இருப்பிடமே யாழ்ப்பாணந்தான் என்றெல்லாம் நாமே நமக்கு மகுடங்களையும் சூட்டிக்கொள்வோம். ஆனால் 'பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை' என்பது போல யாழ்ப்பாணத்து மக்களால் தெரிவு செய்யப்பட்ட பல கௌரவ பிரதிநிதிகள் சபைகளிலும், கூட்டங்களிலும், பொதுவிடங்களிலும் பண்பற்ற முறைகளில் நடந்து கொள்வதை அந்தப்பிரதிநிதிகளைத் தெரிவு செய்த மக்கள் மட்டுமல்ல உலகமே நேரலையில் கண்டு முகஞ்சுளித்து நிற்கிறது. கடந்த வாரம் சில உள்ளூராட்சி சபைகளிலும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலும் இவ்வாறான காட்சிகளை கண்ட மக்களில் பலர் எப்படியிருந்த நாங்கள் இப்படியாகிவிட்டோமே என்று மனம் வருந்தியதையும் காணமுடிந்தது.

தமிழ் மொழியில் இடக்கரடக்கல் என்றொரு சொற்றொகுதி உண்டு. அதற்கு சபையில் நேரடியாகச் சொல்லக்கூடாத விடயங்களை பண்பான வேறு சொற்களில் கூறுவது என விளக்கம் தரப்படுகிறது. எடுத்துக் காட்டாக 'செத்தான்' என்று சொல்வது முறையன்று. உயிர் நீத்தான், இயற்கை எய்தினான் எனபது போன்ற சொற்றொடர்களும் அதேபோல மலம் கழித்து வருவதற்கு கால் கழுவுதல், காலைக்கடன் முடித்தல் என்பது போன்ற சொற்றொடர்களும் பயன்படுத்துவதே பண்பான முறையென்றும் நம்முன்னோர் வழிகாட்டிச் சென்றுள்ளனர். அந்தகைய உயர் பண்பாட்டு மக்களினத்தின் வழித்தோன்றலாகிய நாம், அவர்களைவிட பலவழிகளிலும் பலமடங்கு நாகரீக வளர்ச்சிபெற்ற நாம் இன்று மதிப்பார்ந்த சபைகளில் பயன்படுத்தும் சொற்கள், அவற்றை வெளிப்படுத்தும் முறைகள் எந்தவகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாதவையாகவே உள்ளன. பண்புடையோர் ஒருபோதும் இவற்றை வரவேற்கமாட்டார்கள். கவலைப்படவும் கண்டிக்கவுமே செய்வர். இதில் இன்னும் கவலைப்படவேண்டிய விடயம் இவ்வாறான பண்பற்ற செயற்பாடுகளை இரசிக்கவும், கைகொட்டி வரவேற்கவும், ஊக்கப்படுத்தவும் ஒரு கூட்டத்தினர் முன்னிற்கிறார்களே என்பது.

அண்மையில் பிரதேச சபைக் கூட்டமொன்றில் தவிசாளருக்கும் உறுப்பினர்களுக்கிடையில் மிகமோசமான சொல்லாடல் இடம்பெற்றதைக் கண்டோம். இதுபோன்ற நிகழ்வுகள் அந்தச் சபையில் மட்டுமல்ல பல சபைகளிலும் கடந்த காலத்தில் நிகழ்ந்துள்ளன. மோசமான சொல்லாடல்களுக்கப்பால் தண்ணீரப் போத்தல்கள் மற்றும் காகிதக்கட்டுகள் வீசப்பட்டதுடன் கைகலப்பு நிலைக்குச் சென்றதையும் கடந்தகாலத்தில் கண்டோம். இவை இப்போதும் நிகழ்கின்றன. எதிர்காலத்திலும் நிகழும். அவை மட்டுமன்றி சபையின் நோக்கங்கள் எல்லைகள் பற்றிய விளக்கமின்மையால் பயனற்ற முன்மொழிவுகள், தீர்மானங்கள் போன்றவற்றை மேற்கொண்டு காலத்தையும் வளத்தையும் விரயமாக்கும் செயற்பாடுகளும் தொடர்கின்றன. சபைகளைப் பல உறுப்பினர்கள் அரசியல் மேடையாகவும், கதாநாயக சாகசம் காட்டுவதற்கும் பயன்படுத்த முனைகின்றனர். குளிக்கப்போய் சேறுபூசும் வேலைகள் பல அரங்கேற்றப்படுவதைக் காணமுடிகிறது. உண்மையில் பல உறுப்பினர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்களின் நோக்கங்கள், அதிகார வரம்புகள், கடமைகள், ஒழுங்குவிதிகள், உறுப்பினர்கள் மற்றும் தவிசாளர்களின் கடமைக்கூறுகள் பற்றிய போதிய விளக்கம் இருப்பதாகத் தெரியவில்லை. தெரிந்த சிலரும் வெவ்வேறு தேவைகளுக்காக அவற்றிற்கப்பால் கால்வைக்க விழைவதையும் காணமுடிகிறது.

உள்ளூராட்சி மன்றங்களுக்கான சபைகள் ஜனநாயக முறையில் மக்கள் பிரதிநிதிகளைக் கொண்ட ஒரு முகாமைத்துவக்குழுவாகும். இங்கு வெவ்வேறு கட்சிகளிலிருந்து வந்த பிரதிநிதிகள் இருந்தாலும் ஆளுங்கட்சி எதிர்க்கட்சி என்ற பேதம் கிடையாது. சபை உறுப்பினர்கள், தரப்பட்டுள்ள உள்ளூராட்சி அதிகாரசபை சட்ட, ஒழுங்குவிதிகளுக்கமைய தமது பிரதேசத்துக்கான நிகழ்கால, எதிர்கால மக்கள் நலன்பேணும் திட்டங்களை வகுத்தல், தேவையான வளங்களைத்திரட்டல், தீர்மானங்கள், அமுலாக்கல், மேற்பார்வை, சீராக்கல் போன்ற பணிகளை ஜனநாயக வழிமுறைகளில் மேற்கொள்ளவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது. எல்லா உறுப்பினர்களின் நோக்கமும் மக்கள் நலன், பிரதேச விருத்தி சார்ந்ததாக இருக்குமிடத்து சபையில் ஒற்றையிரட்டை பிடிக்கவேண்டிய தேவையேற்படாது. அதைவிடுத்து ஒவ்வொருவரும் வெவ்வேறு நிகழ்ச்சி நிரலில் சபையில் செயற்பட முனைந்தால் சபை சண்டைக்களமாகவே மாறும்.

உள்ளூராட்சித் தேர்தலின்போது மக்களுக்காகத் தம்மை முழுமையாக அர்ப்பணிப்போம் என்ற யாழ் மாநகர சமூகச் செயற்பாட்டாளர்கள் சபையின் உறுப்பினர்களான பின்னர் தமக்கான வசதிகளைக் கோரி ஏகமனதாக நிறைவேற்றிக்கொள்வதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மக்கள் பணிக்கான தீர்மானத்தில் ஒத்துப்போகாது முரண்பட்டு நிற்பவர்கள் தமக்கான சலுகைகளைப் பெறுவதற்கு மட்டும் எப்படி ஒத்துப்போக முடிகிறது? அண்மையில் யாழ் மாநகரசபையில் உறுப்பினர்க்கான வழமையான படிகளுக்கு மேலதிகமாக வேறு தேவைகளுக்காக தலா 16000 ரூபாவை வழங்குவதற்கான தீர்மானம் கட்சி வேறுபாடின்றி, கருத்து வேறுபாடின்றி ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மக்களின் வரிப்பணத்தில் தமக்கான சலுகைகளைப் பெறுவதற்கு உறுப்பினர்கள் ஒன்றுபட முடியுமென்றால் அம்மக்களுக்கான பணிகளைச் செய்வதற்கு அவர்களால் ஏன் ஒற்றுமைப்பட முடியாமல் போகிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது இயல்பானதே.



**அண்மையில் யாழ் மாநகரசபையில் உறுப்பினர்க்கான வழமையான படிகளுக்கு மேலதிகமாக வேறு தேவைகளுக்காக தலா 16000 ரூபாவை வழங்குவதற்கான தீர்மானம் கட்சி வேறுபாடின்றி, கருத்து வேறுபாடின்றி ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. மக்களின் வரிப்பணத்தில் தமக்கான சலுகைகளைப் பெறுவதற்கு உறுப்பினர்கள் ஒன்றுபட முடியுமென்றால் அம்மக்களுக்கான பணிகளைச் செய்வதற்கு அவர்களால் ஏன் ஒற்றுமைப்பட முடியாமல் போகிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுவது இயல்பானதே.**

மறுபுறத்தில் உயர்ந்த நிலையில் இருக்கவேண்டிய மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டங்களும் மிக மோசமான அரட்டை அரங்கங்களாக மாற்றப்பட்டு வருகின்றன. நோக்கம், அதில் பங்குபற்றுவோர் தகைமை என்ற வகையில் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் என்பது ஓர் உயர்சபை. ஒருபுறத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் போன்ற மக்கள் பிரதிநிதிகள் மறுபுறத்தில் திணைக்களத் தலைவர்கள், சிவில் நிர்வாக நிறைவேற்று அதிகாரிகள், நிறைவேற்று அதிகாரம் கொண்ட மாகாண ஆளுனர், அமைச்சர் என உயர்நிலை உறுப்பினர்கள் பங்கேற்கும் ஒரு சபை. இச்சபை ஏனைய நிறுவனக் கூட்டங்களுக்கு முன்மாதிரியாக இருந்து ஆக்கபூர்வமான தீர்மானங்கள் எடுப்பதற்குப் பதிலாக தனிப்பட்ட குரோதங்களை வெளிப்படுத்தல், துறைத்தலைவர்களை இழிவுபடுத்தல், பிழைபிடித்தல், குற்றங்காணல், கீழ்த்தரமான சொல்லாடல்கள் என மிகமோசமான விடயங்களால் நிரம்பிவழிகிறது. எப்படி ஒரு கூட்டம் நடக்கக்கூடாது என்பதற்கு அது சிறந்த எடுத்துக்காட்டாக உள்ளது.

புதிய அரசு பதவியேற்றபின்னரான ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டங்களில் திணைக்களத் தலைவர்களையும் நிறைவேற்று அதிகாரிகளையும் இழிவுபடுத்தும் போக்கு அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. இது சிலரால் திட்டமிட்டு செய்யப்படுகிறதா என்ற ஐயமும் உண்டு. ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டமென்பது திணைக்களத் தலைவர்களைக் கேள்விகேட்டு வறுத்தெடுப்பதற்கான கூட்டமென்று அர்ச்சுனா போன்ற சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் நினைக்கிறார்கள் போலும். திணைக்களத் தலைவர்கள் எல்லோரும் கள்வர்கள், ஊழல்வாதிகள், வினைத்திறனற்றவர்கள் என்ற பிம்பம் உருவாக்கப்படுவது போலத் தெரிகிறது. இதில் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களும் இணைந்து கொள்வதுதான். இவர்கள் இதன்மூலம் தங்கள் அரசாங்கத்தின் கையாலாகாத் தன்மையையே வெளிப்படுத்துகிறார்கள் என்பதை அவர்கள் உணரும் நிலையிலுமில்லை.

தலைவர் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் அதிகாரிகளிடம் கேள்விகள், விளக்கங்கள் கேட்பது அவசியமும் ஏற்புடையதுமாகும். ஆனால் அச்சபையில் கேட்கப்படும் கேள்விகளின் பயன் என்ன என்பது முக்கியமானது. அக்கேள்விகளுக்கான விடை பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கும் அடுத்த கட்டத்தை நோக்கி நகர்வதற்கும் துணை நிற்கவேண்டும். ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கும் தனிநபர்களை இழிவுபடுத்துவதற்கான கேள்விகள் தவிர்க்கப்படவேண்டும். அதுமட்டுமன்றி எழுந்தமானமாக கேட்கப்படும் கேள்வியொன்றுக்கு உடனடியாகப் பதிலளிப்பதற்கு அதிகாரிகள் ஒன்றும் கணனிகள் அல்லர். நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் ஒருவர் தான் ஐயுறும் கொடுக்கல் வாங்கல் கணக்குத் தொடர்பிலும் நிலவும் பிரச்சனைகளுக்கான காரணங்கள் தொடர்பிலும் தேவையான தரவுகளை எந்தவொரு அதிகாரிகளிடத்தும் எழுத்துமூலம் கோருவதற்கு உரித்துள்ளது. அதுமட்டுமன்றி அமைச்சு மட்டத்திலும் நாடாளுமன்றத்திலும் அதுபற்றிக் கதைத்து தீர்வுகாண முடியும். குறைந்தது ஒருங்கிணைப்புக்குழுத் தலைவர் மூலமும் அணுகமுடியும். அவ்வாறான பயனுள்ள இலகுவான வழிகள் இருக்கும்போது சபையின் கௌரவத்தையைம் நேரத்தையும் வளத்தையும் விரயஞ் செய்ய சிலர் முனைவதை நிச்சயமாகப் பொதுப்பயன்கருதியதாகக் கொள்ளமுடியாதுள்ளது. அதேவேளை அதிகாரிகளை நோக்கிய இவ்வாறான கேள்விகளையும் சிறுமைப்படுத்தல்களையும் கணிசமான மக்கள் ஏன் வரவேற்கிறார்கள் என்பதையும் அதிகாரிகள் கவனத்தில் கொள்ளவேண்டும். தவறுகளைத் திருத்திக் கொள்ள வேண்டும்.

இவ்வாறு கூட்டங்களிலும் சபைகளிலும் கலந்துகொள்வோரில் சிலரது செயற்பாடுகள் கவலைக்குரியவையாக இருக்கும்போது அவற்றை மேலும் பூதாகாரமாக்கி சந்தி சிரிக்கவைக்கும் சில ஊடகவியலாளர்களின் கைங்கரியத்தைப் பாராட்டியே? ஆகவேண்டும். இன்று ஊடகவியலாளர் பலரிடம் சமூகப் பொறுப்பு அறவேயில்லை. ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாண்டம் என்ற மனநிலையில் சிலர் செயற்படுவது போல் தெரிகிறது. எச்செய்தி அவசியமானது, எதற்கு முக்கியமளிக்க வேண்டும், எதனைத் தவிர்க்க வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் அவர்கள் அக்கறைப்படுவதில்லை. புறநடைகளை வழக்கமானவையாக மாற்றுப் பணியைச் சிறப்பாகவே சிலர் செய்கின்றனர். ஒருவகையில் குழப்பவாதிகளை கதாநாயகர்களாக்கி அவர்களை மேலும் உற்சாகப் படுத்தினால்தான் தமக்கு நல்ல தீனி கிடைக்கும் என்று எண்ணுகிறார்கள் போலும். ஒரு கூட்டத்தில் பத்து நல்ல விடயங்களும் ஒரு விரும்பத்தகாத விடயமும் இடம்பெற்றிருந்தால் செய்திகளில் நல்ல பத்து விடயங்களும் ஒருவரியில் ஒருதரத்துடன் மறைந்து விடுகின்றன. ஆனால் விலக்கவேண்டிய அந்த ஒரு விடயம் மட்டும் தொலைக்காட்சித் திரையிலும் தொடுதிரையிலும் பல்வேறு தலைப்புகள், வியாக்கியானங்களுடன் தொடர்ந்து ஓடிக்கொண்டே இருக்கிறது. அதுமட்டுமன்றி நூற்றியெட்டுப்பேர் அதனைப் பகிர்ந்து தமது சமூகக் கடமையைத் தவறாது நிறைவேற்றிக் கொள்கிறார்கள். நாம் எமது எதிர்காலச் சந்ததியை எந்தப்பாதையில் தள்ள முயற்சிக்கிறோம்?

நாம் பண்பாட்டில் கீழிறங்கி விட்டோமா அல்லது வேண்டுமென்றே கீழிறக்கப்டுகிறோமா? பண்பாடற்ற மக்கள் பிரதிநிதிகள், வினைத்திறனற்ற அதிகாரிகள், ஆளுகை செய்ய வக்கற்றவர்கள் என நாம் மாறி வருகிறோமா அல்லது அவ்வாறானதொரு விம்பம் கட்டி வளர்க்கப்படுகிறதா? எதுவென்றாலும் பலியாகப் போவது நம்மக்களின் எதிர்காலம்தான். இதனை சம்பந்தபட்ட எல்லாத் தரப்பினரும் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும். குறிப்பாக மக்களின் ' கௌரவ' பிரதிநிதிகள் விளங்கிக் கொள்ளவேண்டும். இல்லையெனில் காசு கொடுத்து வாங்கிய கலாநிதிப் பட்டம் போல அந்தக் கௌரவமும் காலியாகிவிடும். இவ்வாறான நிலையிலும் மாநகரசபையில் உறுப்பினர் கபிலன் கழிவுகளை அகற்றுவது தொடர்பாக முன்வைத்த கருத்தும் முறையும் அதேபோல மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் வினைத்திறனான கூட்டத்துக்காக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அதன் தலைவருக்குக் கூறிய கருத்துக்களையும் நினைத்து நாம் ஓரளவு ஆறுதல் பெறமுடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி சபைகள்: குப்பை கொட்டுமா? குப்பை அகற்றுமா?



நிலாந்தன்

1996இல் என்று நினைக்கிறன். அது போர்க் காலம். மல்லாவிச் சந்தைக்கு கனெக்ஸ் என்று அழைக்கப்படும் கனகரட்ணம் மீன் வாங்க வந்திருந்தார். வாய்க்குள் சாப்பிக் கொண்டிருந்த வெற்றிலை எச்சிலை அப்படியே நிலத்தில் துப்பினார். சந்தைக்கு அன்பு மாஸ்டரும் வந்திருந்தார். கனெக்ஸ் வெற்றிலை துப்பியதை அன்பு மாஸ்டர் கண்டுவிட்டார். அவர் கனெக்ஸை நோக்கிப் பாய்ந்தார். "ஒரு பொது இடத்தில் அதுவும் சாப்பாட்டுப் பொருட்கள் விற்குமிடத்தில் எப்படி சுகாதாரக் கேடான விதத்தில் வெற்றிலையைத் துப்புவாய்" என்று கேட்டார். கனக்ஸ் திரும்பிக் கேட்டார் "நான் துப்பியதால் உனக்கு என்ன வந்தது? நான் யாருடைய முகத்திலும் துப்பவில்லையே ? நிலத்தில்தானே துப்பினேன்? ". அன்பு மாஸ்டர் விடவில்லை. "நீ துப்பிய நிலம் சந்தை நிலம். சுற்றி வர மீன்கள், மரக்கறிகள் விற்கப்படும் இடம். உன்னுடைய துப்பலில் மொய்க்கும் இலையான் இங்குள்ள சாப்பாட்டுப் பொருட்களின் மீதும் மொய்க்கும். எவ்வளவு அசுத்தம்? எவ்வளவு ஆரோக்கியக் கெடுதி? - என்று கூறி கனெக்ஸை சண்டைக்கு இழுத்தார்.

இப்படி இரண்டு பேரும் வாக்குவாதப்பட சந்தைக்கு வந்தவர்கள், சந்தை வியாபாரிகள் என்று அனைவரும் இந்த இரண்டு பேர்களையும் சூழ்ந்து விட்டார்கள். இருவருமே ஒரு பொது இடத்தில் எச்சில் துப்புவதில் இருக்கக்கூடிய சுகாதாரக்கேடான விடயங்களை தர்கபூர்வமாக உரையாடத் தொடங்கினார்கள். சூழ்ந்திருந்த மக்கள் இரண்டு பேரையும் விலக்குப் பிடிக்க முயற்சித்தார்கள். அதே சமயம் அந்த உரையாடலில் மக்களும் ஈடுபடத் தொடங்கினார்கள். ஆனால் ஒரு கட்டத்தில் எல்லாருக்கும் தெரிந்தது அது ஒரு நாடகம் என்று. சந்தைக்குள் சுகாதார விழிப்பை ஏற்படுத்தும் நோக்கத்தோடு கனெக்சும் அன்பு மாஸ்டரும் இணைந்து தயாரித்த - நவீன நாடகம் - கட்புலனாகா அரங்கு அது.

அன்பு மாஸ்டர் ஒரு நாடகச் செயற்பாட்டாளரும் அரசியல் செயற்பாட்டாளரும் ஆவார். போர்க் காலத்திலேயே இறந்து விட்டார். கனெக்ஸ் ஒரு நாடகச் செயற்பாட்டாளரும் அரசியல் செயல்பாட்டாளரும் ஆவார். நாலாங் கட்ட ஈழப்போரில் போர்க் களத்தில் உயிர் நீத்தார். இருவரும் இப்பொழுது உயிரோடு இல்லை. ஆனால் அவர்கள் எதற்காக நாடகமாடினார்களோ அந்த விடயம் இப்பொழுதும், கிட்டதட்ட இரண்டு தசாப்தங்களுக்கு பின்னரும் உண்டு. அதுதான் சந்தைக்குள் சுகாதாரச் சீர்கேடுகள்.

யாழ்ப்பாணத்தில் மிகப்பெரிய மரக்கறிச் சந்தை திருநெல்வேலியில் உள்ளது. அதற்குப் பின்புறம் உள்ள சிறிய பாதை சில சமயங்களில் கழிப்பறையாகவும் குப்பைக் கூடையாகவும் காணப்படும். தமது வீட்டுக் கழிவுகளை அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் அந்த வீதியில் கொண்டு வந்து போடுகிறார்கள். இத்தனைக்கும் அந்த வீதி வளைவில் ஒரு பாடசாலை உண்டு. சில சமயங்களில் அந்த வேலியோடு நின்று சிறுநீர் கழிப்பவர்களை நான் பார்த்திருக்கிறேன். அவர்களில் பெரும்பாலானவர்கள் சந்தை வியாபாரத்தோடு தொடர்புடையவர்கள்.

இது சந்தைக்கு வெளியே. சந்தைக்கு உள்ளே போனால், அங்கே மரக்கறிகள் பரப்பப்பட்டிருக்கும் அதே தளத்தில் தான் வியாபாரிகள் தமது கால்களைப் பரப்பிக் கொண்டு அமர்ந்திருப்பார்கள். அதாவது விற்கப்படும் பொருட்களை வைப்பதற்கு உயரமான ஏற்பாடு இல்லை. அதனால் வியாபாரிகள் மரக்கறிகளை பரப்பி வைத்திருக்கும் அதே இடத்தில் சில சமயம் செருப்புக் கால்களோடு இருப்பார்கள். அதே செருப்போடுதான் அவர்கள் கழிப்பறைக்கும் போகிறார்கள். சில வியாபாரிகள் செருப்பைக் கீழே கழட்டி விடுவதுண்டு.

அது மட்டுமல்ல, சந்தையின் மூலை முடுக்குகளில் வெற்றிலைத் துப்பல்களைக் காணலாம். துப்புவது யார் என்றால் வியாபாரிகளும் அவர்களைச் சேர்ந்தவர்களும்தான். சந்தைக்குப் பொருட்கள் வாங்க வருபவர்கள் அவ்வாறு துப்புவது குறைவு. பொதுச் சுகாதாரச் சட்டத்தின்படி பொது இடங்களில் துப்புவது சட்ட விரோதமானது. ஆனால் அதை சட்டத்தால் மட்டும் திருத்த முடியாது. ஏனென்றால் அது ஒரு பண்பாடு. அவ்வாறு துப்பாமல் விடுவதனை ஒரு பண்பாடாக மாற்ற வேண்டும். யார் மாற்றுவது ?



யாழ் நகரப் பகுதியை அண்டியுள்ள சந்தைகளில் கல்வியங்காட்டுச் சந்தை தொடர்பாக முறைப்பாடுகள் அதிகம். அந்த சந்தைக்கு ஒரு சாதிப் பெயர் வேறு வைத்திருக்கிறார்கள். அங்கு வாங்கிய மீனில் ரசாயன வாடை வீசுவதாக திருப்பிக் கொடுத்தவர்கள் உண்டு. பொதுச் சுகாதாரப் பரிசோதர்களிடம் முறைப்பாடு செய்தவர்களும் உண்டு. ஒரு முறை அவ்வாறு முறைப்பாடு செய்த போது பிஎச்ஐ சொன்னார் அந்த ரசாயனத்தை சோதிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் இங்கு யாழ்ப்பாணத்தில் இல்லை. அதனால் அந்த மீனை அனுராதபுரத்துக்கு அனுப்பி எடுக்க வேண்டும். அது வரை அந்த மீனைக் கெடாமல் வைத்திருக்கவும் வேண்டும் என்று. கல்வியங்காட்டுச் சந்தையில் வாங்கிய மீனில் ஃபோமலின் வாடை வீசியதாக முறைப்பாடுகள் உண்டு. ஓர் ஆசிரியர் சொன்னார், அவர் வாங்கிய மீனில் அவ்வாறு ஃபோமலின் வாடை வீசியதாகவும், எனவே அந்த மீனைக் கொண்டு போய் குறிப்பிட்ட வியாபாரியிடம் கொடுத்து "நீ ஏமாற்றி விட்டாய்" என்று ஆத்திரப்பட்ட பொழுது அந்த வியாபாரி சொன்னாராம் இந்த மீனைத்தான் கூலர் வியாபாரிகள் நூற்றுக்கணக்கான கிலோக்கள் வாங்குகிறார்கள். நீங்கள் ஒரு கிலோ வாங்கி விட்டு இப்படிக் கேட்கிறீர்கள் என்று. இதை இவ்வாறு எழுதுவதன் பொருள் யாழ்ப்பாணத்தின் ஏனைய சந்தைகளில் மீன்களில் ரசாயனம் கலக்கப்படுவதில்லை என்பதல்ல. மேலும் கல்வியங்காட்டுச் சந்தையில் உள்ள எல்லாருமே ரசாயனம் கலந்து மீனை விற்கிறார்கள் என்ற பொருளிலும் அல்ல.

இப்படித்தான் இருக்கிறது பொதுச் சந்தைகளில் சுகாதாரம். இப்பொழுது புதிய உள்ளூராட்சி சபைகள் வந்து விட்டன. மேற்சொன்ன விடயங்களில் உள்ளூராட்சி சபைகள் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கப் போகின்றன ?

குப்பை ஒரு தீராப் பிரச்சனை. சந்தைச் சுற்றுச்சூழலில் மட்டுமல்ல பெரும்பாலான வீதிகளில் குப்பை ஒரு பிரச்சினை. குப்பை அள்ளும் வாகனம் வராத நாட்களில் மதில்களில் குப்பைப் பைகள் தொங்கும். ஏனெனில், கீழே வைத்தால் கட்டாக்காலி நாய்கள் பைகளைக் குதறி விடும். சில மறைவான வீதித் திருப்பங்களை அந்த ஊர் மக்களே தற்காலி குப்பைத் தொட்டிகளாகப் பயன்படுத்துகிறார்கள். அ ங்கு குப்பை கொட்ட வேண்டாம் என்ற உத்தியோகபூர்வ அறிவிப்புப் பலகைகள் நடப்பட்டிருக்கும். அல்லது அந்த மதிலுக்கு அல்லது வேலிக்குச் சொந்தமான வீட்டுக்காரர்கள் அவ்வாறான அறிவிப்புககளை ஒட்டியிருப்பார்கள். எனினும், எல்லாவற்றையும் புறக்கணித்துவிட்டு குப்பைகள் கொட்டப்படும்.

இதனால் வெறுப்படைந்த வீட்டுக்காரர்கள் தமது வீட்டு மதிற் சுவரில் அல்லது வேலியில் எழுதி வைத்திருக்கும் வாசகங்கள் அவர்கள் எந்த அளவுக்குக்

**சந்தைகளைச் சுத்தமாக வைத்திருப்பதில் இருந்துதான் ஓர் உள்ளூராட்சி சபையின் வெற்றிகள் அனைத்தும் தொடங்குகின்றன. சந்தைகளைச் சுத்தமாகப் பேணும் ஓர் உள்ளூராட்சி சபை தன் எல்லைக்குட்பட்ட கிராமங்களையும் சுத்தமாகப் பேணும். எனவே சந்தைச் சுகாதாரம் எனப்படுவது ஒரு குறிகாட்டி. புதிய உள்ளூராட்சி சபைகள் இதைக் கவனத்தில் கொள்ளுமா?**

கோபமாக இருக்கிறார்கள் என்பதை நமக்கு உணர்த்துகின்றன. அந்த வாசகங்கள் வருமாறு- "இங்கே குப்பை போடுகிறவன் உன்னுடைய பெண்டாட்டியையும் கொண்டு வந்து போடு" என்று ஒரு வாசகம். 'இங்கே குப்பை போடுகிறவன் ஒரு மன நோயாளி" இது இரண்டாவது வாசகம். 'இங்கே குப்பை கொட்டினால் உன்னைப் பேய் பிடிக்கும்" இது மூன்றாவது வாசகம். 'இங்கே குப்பை கொட்டுகிறவன் ஒழுங்காகப் பிறக்காதவன்"..... என்று ஒரு வாசகம். இவைபோல பல்வேறு விகாரமான விபரீதமான அறிவிப்புகளைப் பார்க்க முடியும்.

ஒரு வீட்டுக்கார் தன்னுடைய வீட்டு வெளி மதிற் சுவரில் சுவாமிப் படங்களை ஒட்டி விட்டார். ஆனால் சுவாமிப் படங்களுக்குக் கீழேயும் குப்பைகள் கொட்டப்பட்டன. குப்பைகளைக் கொட்டுபவர்கள் யார் என்று பார்த்தால் அதில் படித்தவர்கள் உண்டு, விவரம் தெரிந்தவர்கள் உண்டு. யாரும் பார்க்காத ஒரு நேரத்தில், யாரும் பார்க்காத விதமாக அவர்கள் குப்பையை அந்த இடத்தில் தட்டி விட்டுப் போவார்கள். அங்கே கமரா பொருத்தினாலும் அதை மீறிக் குப்பை கொட்டப்படுகிறது. மேலும் கமரா பொருத்துவதற்கும் காசு வேண்டுமே?

இவ்வாறான குப்பை கொட்டும் ஒரு சுகாதாரச் சூழலில் அல்லது தன்னுடைய குப்பையை மற்றவர்களுடைய முற்றத்தில் கொட்டும் ஒரு சீரழிந்த கலாச்சாரச் சூழலில், புதிய உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. இப்பிரதேச சபைகள் சந்தைச் சுகாதாரத்தையும் சந்தையில் விற்கப்படும் உணவுகளின் நுகர்வுத் தரத்தையும் உறுதிப்படுத்துவதற்கு புதிய வினைத்திறன் மிக்க திட்டங்களை வகுக்க வேண்டும். சந்தைகளைச் சுத்தமாக வைத்திருப்பதில் இருந்துதான் ஒரு உள்ளூராட்சி சபையின் வெற்றிகள் அனைத்தும் தொடங்குகின்றன. சந்தைகளைச் சுத்தமாகப் பேணும் ஓர் உள்ளூராட்சி சபை தன் எல்லைக்குட்பட்ட கிராமங்களையும் சுத்தமாகப் பேணும். எனவே சந்தைச் சுகாதாரம் எனப்படுவது ஒரு குறிகாட்டி. புதிய உளளூராட்சி சபைகள் இதைக் கவனத்தில் கொள்ளுமா?

உள்ளூராட்சி சபைகள் உருவாக்கப்பட்ட உடனடுத்த நாட்களிலேயே குப்பைகளைப் பிரித்தெடுத்து எரிக்கும் இடங்களில் முரண்பாடுகள் எழுந்தன. இணுவில், கல்லுண்டாய் வெளி ஆகிய இடங்களில் குப்பைகள் ஏரிக்கப்படுவதால் ஏற்படும் சுகாதாரச் சீர்கேடுகள் குறித்து முறைப்பாடுகள் எழுந்தன.

குப்பைகளை எரிப்பதற்குப் பதிலாக அவற்றை மீள் சுழற்சி செய்வது தொடர்பில் புதிய நவீன சிந்தனைகள் தேவை. உதாரணமாக ஸ்வீடன் நாடானது குப்பைகளை மீள் சுழற்சி செய்வதில் வெற்றியடைந்த நாடாகப் பார்க்கப்படுகிறது. அங்கே ஒரு கட்டத்தில் மீள் சுழற்சி செய்வதற்கு உள்ளூர்க் குப்பைகள் போதிய அளவு இருக்கவில்லை. அதனால் மீள் சுழற்சி மையங்கள் தொடர்ந்தும் இயங்குவதற்காக குப்பைகளை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய வேண்டியிருக்கிறது. எனவே உள்ளூராட்சி சபைகள் இந்த விடயத்தில் நவீனமான, வினைத்திறன் மிக்க முடிவுகளை எடுக்க வேண்டும்.

இது தொடர்பாக நான் உரையாடிய பொழுது ஒரு பொறுப்பு வாய்ந்த அதிகாரி என்னிடம் கேட்டார், 'அரசியலில் குப்பைகொட்டும் இந்தக் கட்சிகளிடம் பிரதேசசபைகளில் குப்பைகளை அகற்றுங்கள் என்று கேட்பது பொருத்தமானதா" என்று? பிரதேச சபைகளைக் கைப்பற்றுவதற்கான போட்டிகள் அவ்வாறான ஒரு தோற்றத்தை உருவாக்கியிருக்கலாம் என்பதனை புதிய பிரதேச சபை உறுப்பினர்கள் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த அபிப்பிராயத்தை மாற்றியமைக்கும் விதத்தில் உள்ளூராட்சிப் பிரதேசங்களை சுத்தமானவைகளாகவும் சுகாதாரமானவைகளாகவும் பசுமைப் பூங்காக்களாகவும் மாற்ற முன்வர வேண்டும். அன்னை தெரேசா கூறுவார் " தொண்டு செய்வது என்பது வீட்டிலிருந்து தொடங்குகின்றது" என்று. அப்படித்தான் சுத்தமும் சுகாதாரமும் உள்ளூராட்சி சபைகளிலிருந்து தொடங்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உச்சகட்ட முறுகலில் ட்ரம்ப் - புட்டின் ! அமெரிக்க ஆயுதங்கள் மீண்டும் உக்ரைனுக்கு?

ஐங்கரன் விக்கினேஸ்வரா

புட்டின் உக்ரேனிய போரை நிறுத்தாவிடின் ரஷ்யாவுக்கு எதிராக 100 வீத "இரண்டாம் நிலை வரிகள்" விதிக்கப்படும் என அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அதிரடியாக அறிவித்து அச்சுறுத்தியுள்ளார்.

ஐம்பது நாட்களுக்குள் உக்ரைன் - ரஷ்யா இடையே அமைதி ஒப்பந்தம் எட்டப்படா விட்டால் இந்த வரிகள் நடைமுறைப்படுத்தப்படும் என மேலும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார். ஜூலை 14இல் நேட்டோ பொதுச் செயலாளர் மார்க் ரூட்டுடனான சந்திப்பில் கருத்து வெளியிட்ட போதே ட்ரம்ப் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைனுக்கும் ரஷ்யாவிற்கும் இடையில் போர் நிறுத்த கலந்துரையாடலை நடத்தும் ட்ரம்பின் முயற்சிகளை ரஷ்ய ஜனாதிபதி இழுத்தடிப்பதால் ட்ரம்ப் அதிருப்தி அடைந்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

ட்ரம்ப்பால் ரஷ்யாவிற்கு ஏற்பட போகும் பாரிய நெருக்கடியை புட்டின் எவ்வாறு எதிர்கொள்ள போகிறார் என்றும், சர்வதேச அளவில் வர்த்தகம் செய்ய முடியாத நிலையில் ரஷ்யா இருக்க வேண்டிய நிலை ஏற்படும் என்றும் கூறப்படுகிறது.

குறிப்பாக ட்ரம்பின் வரிகள், ரஷ்ய மசகு எண்ணெய், இயற்கை எரிவாயு, யுரேனியம் உள்ளிட்ட பொருட்களை வாங்கும் நாடுகளுக்கு எதிராக விதிக்கப்படுகிறது. அத்துடன் அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்ய முடியாது என்றும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்தியா 2024 இல் 35வீத ரஷ்ய எண்ணெயை இறக்குமதி செய்தது. அதேவேளை சீனா 19 வீத எண்ணெயை இறக்குமதி செய்தது. துருக்கி அரசு 2023இல் 58 வீத பதப்படுத்தப்பட்ட பெட்ரோலிய இறக்குமதியை பெற்றுக் கொண்டது. தற்போது வரிகளால் இந்த நாடுகள் பாதிக்கப்படலாம் என்றும் அச்சம் நிலவுகிறது.

உக்ரைனில் மூன்று ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் ஆர்வம் காட்டவில்லை என ட்ரம்ப் குற்றம் சாட்டியுள்ளார்.

புதிய வரியை ரஷ்யாவுக்கு விதிப்பதுடன், உக்ரைனுக்கு பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை அனுப்பும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். அமெரிக்கா இந்த வான் பாதுகாப்பு அமைப்புகளை நேட்டோவிற்கு அனுப்பும் என்றும், பின்னர் அவற்றை உக்ரைனுக்கு வழங்கும் என கூறப்படுகிறது.

புட்டின் மீது கடும் அதிருப்தியில் உள்ள அமெரிக்க ஜனாதிபதி ரஷ்ய படைகளை எதிர்த்து போராட உதவும் வகையில் உக்ரைனுக்கு ஆயுதங்களை மீண்டும் வழங்க உள்ளதாக அறிவித்துள்ளமை ஐரோப்பிய ஒன்றியத்தால் வரவேற்கப்பட்டுள்ளது.

உடனடியாக போரை நிறுத்த கோரும் அமெரிக்கா, போர் நிறுத்தத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகளில் தான், ட்ரம்ப் அரசு அதிகமாக கவனம் செலுத்துகிறது. யுத்த நிறுத்தம் மூலம் அமெரிக்க நிறுவனங்களுக்கு உக்ரேனின் முக்கியமான கனிம வளங்களை பெற வாய்ப்பு அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை ஏற்கனவே உருவாக்கி உள்ளார்.

பல மாதங்கள் நீடித்த பேச்சு வார்த்தைகளுக்குப் பிறகு, உக்ரேனின் கனிம மற்றும் எரிசக்தி இருப்புக்களை விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் கிடைக்கும் லாபத்தைப் பகிர்ந்து கொள்வது தொடர்பான ஒப்பந்தத்தில் உக்ரேனும் அமெரிக்காவும் இணைந்து செயல்பட ஏப்ரல் மாதம் கையொப்பம் இட்டுள்ளன.



இந்தியா 2024 இல் 35வீத ரஷ்ய மசகு எண்ணெயை இறக்குமதி செய்தது. அதேவேளை சீனா 19 வீத மசகு எண்ணெயை இறக்குமதி செய்தது. துருக்கி அரசு 2023இல் 58 வீத பதப்படுத்தப்பட்ட பெட்ரோலிய இறக்குமதியை பெற்றுக் கொண்டது. தற்போது அமெரிக்காவின் புதிய வரிகளால் இந்த நாடுகள் பெரும் பொருளாதார பாதிப்பை சந்திக்க நேரிடும் என அச்சம் நிலவுகிறது.

உக்ரேனின் பாதுகாப்பு மற்றும் மறுகட்டமைப்பில் அமெரிக்கா தொடர்ந்து முதலீடு செய்வதற்கான பொருளாதார ஊக்கத்தை வழங்கும் எனக்கூறி இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உக்ரேனுக்கு ஏற்கனவே தங்கள் நாடு செய்துள்ள உதவியின் அளவு தொடர்பான அமெரிக்காவின் பொருளாதார நலன்களை நிவர்த்தி செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உக்ரேனில் கிராஃபைட், டைட்டானியம், லித்தியம் என பல்வேறு முக்கியமான கனிமங்கள் பெருமளவில் இருப்பதாக கூறப்படுகிறது. இந்தக் கனிமங்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, ராணுவ தொழில்நுட்பம், உட்கட்டமைப்பு உள்பட பல முக்கியமான துறைகளுக்கு பயன்படும் என்பதால் இந்த கனிமங்களுக்கு சர்வதேச அளவில் தேவை அதிக அளவில் உள்ளது.

போரினால் சிதைந்திருக்கும் உக்ரேனின் பொருளாதாரத்தை உத்வேகத்துடன் மேம்படுத்துவதற்காக முதலீட்டு நிதியை உருவாக்குவது தொடர்பாகவும் இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் அமெரிக்கா மற்றும் உக்ரேன் இடையிலான இந்த ஒப்பந்தம் தொடர்பாக ரஷ்யா இதுவரை பதிலளிக்கவில்லை.

தற்போது உக்ரைனுக்கு பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை அனுப்பும் என்று அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளமைக்கு ரஷ்யா கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

எனினும் எத்தனை பேட்ரியாட் வான் பாதுகாப்பு அமைப்புகளை வழங்குவது என அமெரிக்க ஜனாதிபதி அறிவிக்க வில்லை என்றும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ரஷ்யாவின் தாக்குதலில் பெருமளவான இழப்புகள் ஏற்படுவதாகவும், உக்ரைனின் தற்காப்பிற்காகக் கூடுதல் ஆயுதங்கள் தேவை என ட்ரம்ப் தனது நிலையை வலியுறுத்தியுள்ளார்.

**நேட்டோவுடன் ஆயுத ஒப்பந்தம்:**

நேட்டோ அமெரிக்காவிடமிருந்து ஆயுதங்களை வாங்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதாக தெரிவித்துள்ள ட்ரம்ப், அப்படி வாங்கப்படும் பேட்ரியாட் ஏவுகணை தடுப்பு அமைப்புகளை, அந்நாடுகள் உக்ரைனுக்கு கொடுத்து உதவும் என்றும் தெரிவித்துள்ளார்.

பல பில்லியன் கணக்கான மதிப்பில் இந்த ஒப்பந்தங்கள் போடப்படுவதாகவும், அமெரிக்காவிடமிருந்து வாங்கும் ஆயுதங்களை, ரஷ்யாவுடன் யுத்தம் புரியும் உக்ரைனுக்கு விரைவிலேயே வழங்க உள்ளதாகவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இந்த ஒப்பந்தத்தின் மூலம், உக்ரைன் ஏராளமான ஆயுதங்களை பெறும் என்று நேட்டோ தலைவர் மார்க் ருத்தே கூறியுள்ளார்.

**ட்ரம்பின் வாய்ச்சவாடல்:**

அமெரிக்கா அதிபராக ட்ரம்ப் பதவியேற்ற பிறகு முதல் 24 மணி நேரத்துக்குள் உக்ரேன் போரை நிறுத்தி விடுவேன் என்ற பேச்சு தற்போது வெறும் வாய்ச்சவாடலாகவே மாறியுள்ளது.

தற்போது ட்ரம்ப் அதிபராக பதவியேற்று ஏழு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது. உக்ரேனிய போர் இந்த அளவுக்கு கடுமையான மற்றும் சிக்கலான மோதலாக இருக்கும் என்று அவர் எதிர்பார்க்கவில்லை. போரை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை ட்ரம்ப் தற்போது உணரத் தொடங்கியிருக்கலாம்.

இதேவேளை ரஷ்ய அதிபர் உடனடியான போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு அவசரப்பட விரும்பவில்லை. நீண்ட கால தீர்வைப் பற்றி பேசுவதற்கு முன்பு இடைக்கால போர் நிறுத்தத்தை கோரும் அமெரிக்காவின் இரண்டு கட்ட திட்டத்தை தான் உறுதியாக எதிர்ப்பதாக புட்டின் வெளிப்படுத்தி இருந்தார்.

நேட்டோ விரிவாக்கம் மற்றும் உக்ரேன் மேற்குலகு சார்பு கொண்ட நாடாக இருப்பது ஆகியவை ஒரு வகையில் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துவதாக ரஷ்ய அதிபர் வெளிப்பட கூறியுள்ளார்.

எந்தவொரு சமாதான உடன்பாடும் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன்பு, ரஷ்யா முன்வைக்கும் முக்கியமான கேள்விகளுக்கும் நிபந்தனைகளுக்கும் பதிலளிக்க வேண்டுமென்றும் புட்டின் வலியுறுத்தி வருகிறார்.

**புட்டின் மீது அதிருப்தியில் ட்ரம்ப்:**

புட்டின் குறித்து பேசிய ட்ரம்ப், அவர் உண்மையாகவே ஏராளமான மக்களை ஆச்சர்யத்தில் ஆழ்த்தியுள்ளதாக தெரிவித்தார். புட்டின் காலையில் நன்றாகவே பேசிவிட்டு, மாலையில் அனைவர் மீதும் குண்டுகளை வீசுகிறார் என்றும் விமர்சித்திருந்தார்.

இவ்வருட ஜனவரி மாதத்தில், ரஷ்ய அதிபர் புட்டினுடன் இணைந்து பணியாற்றி, போரை முடிவுக்கு கொண்டு வருவேன் என நம்பிக்கையாக ட்ரம்ப் தெரிவித்திருந்தார். அந்நிலையில் ரஷ்யா மீதான பொருளாதார தடைகளை அதிகரிப்பதையும் நிறுத்தி வைத்திருந்தார்.

ஆனால், பல மாதங்களாக பல்வேறு கட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தியும், ரஷ்ய- உக்ரைன் போரை முடிவுக்கு கொண்டுவர முடியவில்லை. இரு நாடுகளும் எதற்குமே ஒத்துவரவில்லை. இதனால், சமீப காலமாக, புட்டின் - ஜெலன்ஸ்கி மீதும் பெரும் அதிருப்தியில் உள்ளார் ட்ரம்ப்.

ட்ரம்ப் கூறியது போல எதுவும் நடக்கவில்லை. அதற்கு புட்டின் ஒரு தடையாக இருப்பதாக அவர் மீது எரிச்சலடைந்துள்ள ட்ரம்ப், தற்போது ரஷ்யா மீது வரிகளை விதித்துள்ளார்.

இதற்கு புட்டின் அடி பணிவாரா அல்லது உக்ரேனுடன் பேச்சுவார்த்தை நடத்த சாத்தியமா என்பதை பொறுத்திருந்து பார்க்கலாம்.


---

# ட்ரம்ப்பின் எச்சரிக்கை-பயமா, பலவீனமா?

அமெரிக்க அதிபராக டொனால்ட் ட்ரம்ப் பதவி யேற்றதில் இருந்தே உலக நாடுகளுடனான வர்த்தகம், கூடுதல் வரி விதிப்பு பற்றி பேசி வருகிறார். அமெரிக்காவுடன் வர்த்தகம் செய்யும் நாடுகள் அமெரிக்கப் பொருள்களுக்கு அதிகம் இறக்குமதி வரி விதிப்பதால் அமெரிக்கப் பொரு ளாதாரம் பாதிக்கப்படுவதாகத் தொடர்ந்து கூறி வரும் அதிபர், அதை சமநிலைப்படுத்த பரஸ்பரம் வரி விதிப் பது என்று தீர்மானித்தார்.

அமெரிக்க அதிபரின் இந்தப் போக்கு உலக நாடுகளிடையே ஆரம்பத்தில் அச்சத்தை ஏற்படுத்தியது என்றாலும், அமெரிக்காவிலேயே அவரின் கருத்துக்கு எதிர் குரல்கள் எழுந்தன. இந்தியா போன்ற நாடுகளோடு முரண்படுவதால் அமெரிக்கா மருந்துப் பொருள்கள் போன்ற அத்தியாவசிய தேவைகளில் சிக்கல்களை சந்திக்கும் என்ற காரணம் ட்ரம்பை சிந்திக்க வைத்தது.

எந்தெந்த நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்கு எவ்வளவு வரி விதிக்கப்படும் என்ற அறிவிப்பை கடந்த ஏப்ரல் இரண்டாம் தேதி வெளியிட்டார். பின்னர், இந்த பரஸ்பர வரி விதிப்பை 90 நாள்களுக்கு



நிறுத்திவைப்பதாகவும் அறிவித்தார். கடந்த ஜூலை 9-ஆம் தேதியுடன் 90 நாள்கள் முடிவடைந்த நிலையில், காலக் கெடு ஆகஸ்ட் ஒன்றாம் தேதி வரை நீட்டிக்கப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

ஏற்கெ னவே இருமுறை நாள்கள் நீட்டிக்கப்பட்ட நிலையில் இந்த முறை வரி விகித உயர்வு ஆகஸ்ட் மாதம் முதல் நாளில் அமலுக்கு வருவது 100 சதவீதம் உறுதியா கிவிட்டதா என்ற வினா எழுப்பப்பட்டதும் உறுதிதான் ஆனாலும், இன்னும் 100 சதவீதம் முழுமையாக முடிவுக்கு வரவில்லை என்று ஊசலாட்டமான பதிலையே அமெரிக்க அதிபர் தந்துள்ளார். ட்ரம்ப்பின் இந்தப் பதில் மற்ற நாடு களை ஆசுவாசப்பட வைத்துள்ளது.

தனது முடிவை நிறுத்திவைப்ப தாகவோ, தான் பின் வாங்குவதா கவோ இருத்தல் கூடாது என்று கருதியவர் 14 நாடுகளின் தலைவர்களுக்கு வரி விதிப்பு உயர்த்தப்படுவதற்கான கடிதங்களை அனுப்பிவிட்டு, அதை தனது சமூக ஊட கப் பக்கங்களில் பதிவிட்டுள்ளார். மேலும், அமெரிக்கா வுடன் இந்த நாடுகளுக்கு இருக்கும் உறவை பொருத்து வரி விகிதங்கள் குறைக்கப்படவோ அல்லது உயர்த்தப்ப டவோ வாய்ப்புள்ளது எனவும் அதில் குறிப்பிட்டுள்ளார். ட்ரம்ப் வர்த்தகப் பேச்சுவார்த்தைகளுக்குத் தயாராக இருப்பதை இந்த அறிவிப்பு உணர்த்துகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் உடனடியாகத் தீர்வை எட்டுவது சாத்தியமில்லை என்பதாலும், பலகட்டப்

(14ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2025 ஆம்...

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரகாரம் மாகாணசபை தேர்தல்கள் இவ்வருட இறுதிக்கு முன்னதாக நடத்தப்பட வேண்டும். அந்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமானால், இந்த தேர்தலை தடுக்கின்ற முட்டுக்கட்டைகளை அகற்றுவதற்கான உடனடி நடவடிக்கைகளை அரசாங்கம் எடுக்க வேண்டும். தீர்மானங்களை மேற்கொள்ளும் செயன்முறைகளில் பங்கேற்கக் கூடியதாக இன, மத சிறுபான்மைச் சமூகங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளுக்கு அதிகாரமளிக்க வேண்டியது அவசியமானதாகும்.

மாகாணசபை முறை என்பது பன்முகப்படுத்தப்பட்ட நிருவாகத்தைப் பற்றியது மாத்திரமல்ல. அது தீர்மானங்களை மேற்கொள்வதற்கான மெய்யான அதிகாரம் மக்களினால் தெரிவு செய்யப்படும் பிரதிநிதிகளிடம் இருக்கக்கூடியதாக அதிகாரம் பரவலாக்கம் செய்யப்பட்ட ஆட்சிமுறை பற்றியதாகும். அரசியல் மற்றும் பொருளாதார அதிகாரங்கள் மட்டுமீறிய முறையில் மத்திய மயப்படுத்தப்பட்டிருப்பது ஆழமான ஏற்றத் தாழ்வுகளையும் நீடித்த சமத்துவமின்மையையும் தோற்றுவித்திருக்கிறது. அதன் விளைவாக, பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்படுவதாக சிறுபான்மைச் சமூகங்கள் ஏற்பட்ட உணர்வே உள்நாட்டுப் போரை மூளவைத்தது.

ஒப்பீட்டு அடிப்படையில் நோக்கும்போது பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சிமுறையின் ஊடாக அதிகாரத்தை பகிர்ந்து கொள்வது பல்கலாசார சமூகங்களில் வழக்கமான அல்லது பொதுவான நடைமுறையாக இருக்கிறது. பெரிய பரப்பளவையும் பெருவாரியான இனங்களையும் கொண்ட இந்தியாவும் மிகவும் சிறிய பரப்பளவை கொண்டதாக இருக்கின்ற சுவிட்சர்லாந்தும் பல்வகைமையை கையாளுவதையும் உள்ளூர் சுயாட்சியை உறுதிசெய்வதிலும் பயனுறுதியுடைய முறையில் செயற்படுகின்ற சமஷ்டி அல்லது அதிகாரங்கள் பரவலாக்கம் செய்யப்பட்ட கட்டமைப்புக்களை கொண்டிருக்கின்றன.

இலங்கையில் சுதந்திரத்துக்கு பின்னரான மத்தியமய ஆட்சிமுறை அரசியல் பிரதிநிதித்துவத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் நிலையான ஏற்றத்தாழ்வை தோற்றுவித்திருக்கிறது. தலைநகர் என்ற வகையில் கொழும்பு துரிதமாக அபிவிருத்தி அடைந்திருக்கின்ற அதேவேளை, பல மாகாணங்கள் பொருளாதார ரீதியில் ஓரங்கட்டப்பட்டவையாகவும் அரசியல் ரீதியில் தேசிய கொள்கை வகுக்கும் செயன்முறைகளில் தொடர்பற்றவையாகவும் இருக்கின்றன. மத்தியமய தீர்மானங்கள் குறிப்பாக, விவசாயம், கல்வி, மற்றும் பொது உட்கட்டமைப்பு துறைகளில் உள்ளூர் யதார்த்தங்களை பெரும்பாலும் பிரதிபலிக்கத் தவறிவிட்டன.

மாகாணசபை முறையை மீண்டும் செயற்படவைத்து அதற்கு நிதி மற்றும் நிருவாக சுயாட்சியை வழங்கினால் மக்களை ஆட்சிமுறைக்கு நெருக்கமாக கொண்டு வரமுடியும். இலங்கை அதன் குடிமக்களிடம் இருந்து முறைமை மாற்றத்துக்கான கோரிக்கையையும் அரசியல் வாழ்வில் பயனுறுதியுடைய முறையில் பங்கேற்புக்கான கோரிக்கையை சிறுபான்மைச் சமூகங்களிடம் இருந்தும் தொடர்ச்சியாக எதிர்நோக்கும் நிலையில், பன்முகப்படுத்தப்பட்ட ஆட்சிமுறை இன்று மிகவும் அவசியமாகிறது. கறுப்பு ஜூலை போன்ற துன்பியல் நிகழ்வுகளில் முடிவடைந்த இனத்துவ துருவமயமாதல் மற்றும் பிரிவினைவாதத்துக்கு எதிரான மிகவும் பயனுறுதியுடைய பாதுகாப்பாக இது அமையும். ●

# யாழ்ப்பாண மனிதப்புதைகுழி,...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து எடுக்கப்படுபவற்றுடன் காணாமல் போனவர்களின் குடும்பங்களைச் சேர்ந்தவர்களின் மாதிரிகளை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கு அவை அவசியமானவை என்று றஹீம் கூறினார்.

காலம் கடந்து கொண்டிருப்பது இன்னொரு சவால். 'காணாமல்போனோரின் பெற்றோர் மற்றும் குடும்ப உறுப்பினர்களில் பலரை நாம் இழந்துவிடும் ஆபத்து இருக்கிறது. தங்களது மரபணுக்களை அல்லது காணாமல் போனார் பற்றிய முக்கியமான தகவல்களை பகிர்ந்து கொள்ளாமல் அவர்கள் காலமாகிப் போய்விடக்கூடும்' என்றும் அவர் குறிப்பிட்டார்.

உதவியை நாடுவதில் அரசாங்கம் திறந்த மனதுடன் இருக்கிறது போன்று தெரிகிறது. 'எம்மிடம் சில வளங்கள் இருக்கின்ற அதேவேளை, தொழில்நுட்ப நிபுணத்துவத்துக்கான தேவை எழுகின்றபோது எமது சர்வதேச நண்பர்கள், பங்காளிகளிடம் இருந்து உதவிகளைப் பெறுவதற்கு நாம் தயங்கப்போவதில்லை. எம்மிடம் நிபுணத்துவம் இல்லை என்று கூறி இந்த விசாரணைகளை நாம் கைவிடப் போவதில்லை. தெற்கைச் சேர்ந்தவரோ அல்லது வடக்கைச் சேர்ந்தவரோ எந்தவொரு குற்றவாளியையும் பாதுகாக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை' என்று அமைச்சர் நாணயக்கார கூறினார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, மனிதப் புதைகுழிகள் தொடர்பிலான நெருக்கடியை இலங்கை மாத்திரம் எதிர் நோக்கவில்லை. தெற்கு உலகு பூராவும் குறிப்பாக லத்தீன் அமெரிக்காவில் தடயவியல் போராட்டத்தை முன்னெடுத்த பல பின்புலங்கள் இருக்கின்றன என்று றஹீம் தெரிவித்தார். 'ஆர்ஜண்டீனா போன்ற நாடுகள் அவற்றின் மனிதபுதைகுழிகள் தொடர்பான விசாரணைகளில் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை கண்டிருக்கவில்லை, ஆனால் பகிர்ந்து கொள்வதற்கு பெருமளவு அறிவும் அனுபவமும் அவர்களிடம் இருக்கிறது. அதனால் இலங்கை அதன் தேசிய ஆற்றலை கட்டியெழுப்புவதற்கு உதவக்கூடிய பல வளங்களைக் கொண்டிருக்கிறது" என்று அவர் கூறுகிறார்.

'காணாமல்போனோர் தொடர்பான பிரச்சினைக்கு முடிவு மக்களுக்கு தேவைப்படுகிறது. மக்களுக்கு நீதி தேவைப்படுகிறது" என்பதை ஏற்றுக் கொள்ளும் றஹீம் குடும்பங்களின் கௌரவம் பாதுகாக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது, பாதிக்கப்பட்டவர்களில் விசேட வகை ஒன்றை அங்கீகரிக்கவும் அவர்களின் வாழ்வுக்கு சில வடிவிலான சமூகப் பாதுகாப்பு வழங்க வேண்டிய தேவையும் இருக்கிறது" என்று விளக்கமளித்தார்.

'30, 40 வருடங்களாக பாகுபாட்டுக்கு உள்ளாக்கப்பட்டு ஓரங்கட்டப்பட்ட மக்கள் தமிழர்கள் சிங்களவர்களை உடனடியாக நம்பப்போவதில்லை. அவர்களது நம்பிக்கையை வென்றெடுத்து மனக்காயங்களை குணப்படுத்துவதற்கு உதவுவதே எமது பணி " என்றும் அவர் கூறினார்.

'குடும்பங்களின் நம்பிக்கையை வென்றெடுப்பது முக்கியானதாக அமையும். அவர்கள் வெறுமனே தகவல்களுக்கான மூலங்கள் அல்ல. என்ன நடக்கிறது என்பதைப் பற்றி தெரிந்திருக்க வேண்டிய தேவை கொண்ட அவர்கள் செயன்முறைகளின் தீவிரமான பங்காளிகள். அதன்ல் அவர்கள் நிலைவரத்தை அவதானித்து எமக்கு உதவமுடியும். அவர்களது வகிபாகம் முக்கியமானது" என்று றஹீம் குறிப்பிட்டார்.

அதிகரித்து வருகின்ற விழிப்புணர்வு காணாமல் போனோரின் குடும்பங்களுடன் ஊடாட்டங்களைச் செய்பவர்கள் செம்மணி புதைகுழிகளைச் சூழவுள்ள இயல்பாயமைந்த சவால்களையும் செயன்முறையையும் அவர்களுக்கு சிறப்பாக விளங்கப்படுத்துவதற்கு வசதியாக அமைகிறது என்கிற அதேவேளை, குடும்பங்களும் கூட செயன்முறையில் துணிச்சலுடன் பங்கு பற்றுகின்றன என்று றனிதா குணராஜா குறிப்பிட்டார்.

'அவர்கள் தங்களது நடந்தவை பற்றிய கதைகளை பகிர்ந்துகொள்கிறார்கள், தங்களது நினைவுகளில் இருந்து பல விபரங்களை கூறுகிறார்கள், அகழ்வுப் பணிகளில் ஈடுபட்டிருக்கும் குழுவினருக்கு உணவு வகைகளையும் பானங்களையும் வங்குகிறார்கள். அதேவேளை பல வருடகால வேதனை மற்றும் அதிர்ச்சிக்கு பிறகு சில பதில்களுக்காகவும் பிரச்சினைக்கு முடிவைக்காணவும் அமைதியாக நம்பிக்கையுடன் காத்திருக்கிறார்கள்' என்று அவர் கூறினார்.

கடந்த மாதம் இலங்கைக்கான தனது விஜயத்தின் போது செம்மணி மனிதப்புதைகுழி பகுதிக்கு சென்று பார்வையிட்ட ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வொல்கர் டேர்க், 'இலங்கையில் பலரின் வாழ்வை கடந்தகாலம் அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது என்பதற்கான ஒரு சான்று செம்மணி " என்று கூறினார். செம்மணியில் அகழ்வுப் பணிகள் கட்டங்கட்டமாக முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் இருவாரங்களாக தற்காலிகமாக நிறுத்தப்பட்டிருந்தன. ஜூலை 21 ஆம் திகதி மீண்டும் அகழ்வுப்பணிகளை தொடங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது.

நம்பகத்தன்மையான செயன்முறையை முன்னெடுப்பதில் அரசாங்கம் பற்றுறுதி கொண்டிருக்கிறது போன்று தெரிகிறது என்று கூறிய குடும்பங்களும் செயற்பாட்டாளர்களும் இதுவரையில் எந்தவிதமான நிவாரணமும் வழங்கப்படாத அனுபவத்தின் அடிப்படையில் விளைவுகள் பற்றி மிகுந்த நிதானத்துடன் எச்சரிக்கையாக இருக்கிறார்கள்.

'விசாரணைகள் நிறைவுபெறாத நிலையில் எங்களால் இப்போதைக்கு எதையும் கூறமுடியாது. கண்டுபிடிப்புக்கள் இந்த தடவையாவது எங்களுக்கு சில வகையான பதில்களைக் கொண்டுவரும் என்று நம்பிக்கையுடன் இருக்க முயற்சிக்கிறேன்" என்று ஆறுமுகசாமி கூறினார். 'எனது சகோதரனுக்காக நான் காத்துக் கொண்டிருக்கிறேன். பல பெண்மணிகள் தங்களது மகன்கள், மகள்களுக்காக காவல் இருக்கிறார்கள். நாம் எவ்வளவோ வேதனைகளை தாங்கிக் கொண்டிருக்கிறோம். எமக்கு பதில்கள் தேவை.'

(தி இந்து)

# ஆதித் தமிழ்க்குடியின்...

(06ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடவுள் ஆனார். தமிழ்ச் சங்கத்தில் அமர்ந்து தமிழ் வளர்த்தவன் முருகன். முருகன் அகத்தியருக்கு தமிழையும், அதன் நுட்பங்களையும் கற்பித்ததாக கந்தபுராணம் சொல்கிறது. பன்னொளி நிலவும் பாரத தேசத்தில் சிவன், திருமால், கொற்றவை என்னும் அம்பிகை முதலான பல கடவுள்களின் வழிபாடு எங்கும் பரவலாகக் காணப்பட்டாலும், முருகன் வழிபாடு சிறப்பாகக் காணப்படுவது தமிழ்நாட்டில்தான்.

இந்தியாவில் மற்ற மாநிலங்களிலும் கார்த்திகேயன் என்றும், சுப்ரமணியன் என்றும் ஆங்காங்கே முருகன் வழிபாடு இருந்தாலும் கந்தன் என்றும், கடம்பன் என்றும், முருகன் என்றும் குன்றுகள் தோறும் இடம்பெற்றிருக்கும் குமரன் என்றும் தமிழர்கள் வாழும் இடங்களிலெல்லாம் பெருமையோடு கொண்டாடி மகிழ்கிற தனித்துவம் முருகனுக்கு மாத்திரம்தான்.

தாய்மொழியாம் தமிழ் மொழி வளர்த்து தமிழர்களால் போற்றப்பட்டு தமிழர்களுக்காகவே தனித்துவம் பெற்ற முருகன் என்பதனால், முருகனை நாம் தமிழ்க் கடவுள் என்கிறோம். இவை மட்டும் அவன் தமிழ்க் கடவுள் என்பதற்கு ஒப்புக்கொள்ள இயலுமா?

முருகன் வள்ளியோடு காதல் வயப்பட்டு திருமணம் முடிப்பது தமிழர் வாழ்க்கையிலும், கலைகளிலும், இலக்கியங்களிலும் ஒன்றோடு ஒன்றாகக் கலந்திட்ட ஒன்று. சங்கத் தமிழர் மரபில் கலந்திட்ட காரணத்தால், தமிழர்களின் வாழ்விலும் பெரும்பங்கு வகிக்கின்றார். பண்டைய தமிழர்களின் முருகன் வழிபாட்டு முறைகளைப் பற்றி தொல்காப்பியம் முருகனை "சேயோன்" என்று குறிப்பிட்டிருக்கிறது.

முருகனின் உடல் சிவப்பு ஒளி போல இருப்பதாகவும், அவரது ஆடைகள், ஆபரணங்கள், மாலைகள், அவர் வைத்திருந்த வேல் அனைத்தும் சிவப்பு வண்ணங்களில் அமைந்திருப்பதாகவும் பண்டைய தமிழ் மக்கள் நம்பினர். அரக்கர்களையும், அசுரர்களையும் அழித்த முருகப்பெருமான் மனிதகுலத்தின் மேம்பாடுகளுக்கு நன்மைகளுக்கானவர் என்று பண்டைய தமிழ்க் குடிமக்கள் நம்பினர்.

முருகனை அருள் திருக்கடவுள், பராக்கிரமச் செயல்களைச் செய்து அவரை யுத்தத்தில் எவராலும் வெல்ல முடியாது என்றும் நம்பினார்கள். பெரும்பாணாற்றுப்படை என்ற நூலில் முருகப்பெருமான் கொற்றவையின் புதல்வன் என்று குறிப்பிட்டிருக்கிறது. சங்க காலக் கவிஞரான கபிலர் வேல்பரம்பு என்னும் மன்னனை முருகனோடு பராக்கிரமசாலியாக ஒப்பிட்டுப் பேசுகிறார்.

மதுரைக்காஞ்சியில் தலையானங்கானத்து செருவென்ற பாண்டிய நெடுஞ்செழியன் முருகனைப் போலவே எதிரிகளை அடக்கி அழித்து கோட்டைகளைக் காத்தவன் என்று பேசுகிறது. மலைபடுகடாம் என்ற மற்றொரு சங்க நூல் முருகக் கடவுளுக்கு இணையான பராக்கிரமசாலியாக கீரனார் விளங்கினார் என்று குறிப்பிடுகிறது. கபிலரின் குறிஞ்சிப்பாட்டிலும், முருகனின் வேல் மின்னலைப் போல் வெளிச்சம் கொண்டது என்கிறார்.

சங்க கால இலக்கியங்களின் வீரர்களும், மன்னர்களும் மட்டுமல்ல, குடும்பத் தலைவர்களையும் முருகனோடு ஒப்பிட்டுப் பார்த்தனர். ஆகவேதான், முருகன் என்றும், முருகேசன் என்றும், கந்தன் என்றும், பாலமுருகன் என்றும், ஆறுமுகம், குமரன், குகன், சரவணன், வேலன், சாமிநாதன், கார்த்திகேயன், சண்முகம், தண்டாயுதபாணி, கதிர்காமன், சுப்ரமணியன், மயில்வாகனன், சேயோன் என்றெல்லாம் முருகனுடைய பெயர்கள் தமிழ்நாட்டில் பெரும்பகுதியாக தங்களுடைய பிள்ளைகளுக்கு வைத்திருக்கிறார்கள். முருகன் என்றால் எளிமை, அழகு, இளமை, ... இவை கடந்து முருகன்.

(தினமணி)

# ட்ரம்ப்பின்...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தைகள் தேவைப்படும் என்பதாலும் வரிவிதிப்புக்கான காலஅவகாசம் இன்னும் கூட நீளலாம். பேச்சு வார்த்தைக்கு ட்ரம்ப் தயாராவது அந்நாட்டு உற்பத்தியா ளர்களுக்கும், முதலீட்டாளர்களுக்கும் நம்பிக்கை அளித் துள்ளது.

அமெரிக்காவின் கூடுதல் வரி விதிப்பு அமெரிக்க நிறுவனங்களை வெளிநாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாத்து உள்நாட்டு உற்பத்தி, வேலைவாய்ப்புகளை அதிகரிக்கும் என்று ட்ரம்ப் கூறினாலும், இந்த வரி விதிப்பு அமெரிக்காவில் விலை உயர்வுக்கு வழிவகுக்கும் என்றும், வர்த்தகத்தைப் பாதிக்கும் எனவும் பொருளாதார வல்லுநர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவின் பொருளாதாரம் தற்போது பலவீனமடைந்துள்ளது. இந்த நிலையில், அமெரிக்க டாலருக்கு மாற்றாக வேறு புதிய நாணயம் உருவாக்கப்படுமோ என்ற அச்சம் அமெரிக்காவுக்கு இருக்கிறது. தனது அதிகாரத்தை நிலைநாட்டிக் கொள்ளவே கூடுதல் வரி விதிப்பு எச்சரிக்கையை அமெரிக்கா கையில் எடுத்திருக்கிறது.

ஒரு மாற்று நாணயத்தை, பொதுவான நாணயத்தை உருவாக்குவது எளிதல்ல பிரிக்ஸ் நாடுகள் இணைந்து அப்படியான நாணயத்தை உருவாக்குவதற்கான சாத்தியங்கள் அண்மையில் இல்லை. ஆனாலும், ட்ரம்ப்பின் வரி விதிப்பு மிரட்டலுக்கு பிரிக்ஸ் நாடுகள் அஞ்சுவதாகவும் இல்லை.

சமமான லாபம் என்ற கொள்கையின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்த பிரிக்ஸ் நாடுகள் முன்வருமேயன்றி அச்சுறுத்தலுக்கும், மிரட்டலுக்கும் பணியாது. அதேநேரத்தில் அமெரிக்காவின் இந்த ஆரவாரம் தனது பலவீனத்தை தானே வெளிப்படுத்தும் வகையில் அமைந்திருக்கிறது என்பதே உண்மை. ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளக...

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் விமர்சித்தமை தொடர்பில் இதன்போது சீ.வீ.கே. சிவஞானம் கருத்துரைத்திருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலத்தின் குற்றச்சாட்டு அபத்தமானது. இலங்கை தமிழரசுக் கட்சி ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் அகழ்வுகள் பற்றியே குறிப்பிடப்பட்டுள்ளது.

தடயவியல் நிபுணர்கள் ஆராய்ச்சி செய்வதற்கு தேவையான ஆதரவு அனுசரணையை அரசாங்கம் வழங்க வேண்டும்.

அது அரசாங்கத்தின் கடமை என்றும் சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட நிபுணர்களை சேர்க்க வேண்டும் என்றும் அந்த கடிதத்தில் வலியுறுத்தியுள்ளதாக சீ.வீ.கே. சிவஞானம் தெரிவித்துள்ளார்.

மாறாக உள்ளக விசாரணை உள்ளிட்ட எவ்வித விசாரணைகள் தொடர்பிலும் தமது கடிதத்தில் சொல்லப்படவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

சர்வதேச விசாரணை வேண்டாம் என்றோ உள்ளக விசாரணையில் திருப்திப்படுகிறோம் என்றோ குறித்த கடிதத்தில் கூறவில்லை என்றும் இலங்கை தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

## தமிழ்த்...

நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச் சுடர் ஏற்றப்பட்டதை தொடர்ந்து, நடராசா தங்கவேல்(தங்கத்துரை), செல்வராசா யோகச்சந்திரன் (குட்டிமணி), கணேசானந்தன் ஜெகநாதன்(ஜெகன்) செல்லத்துரை சிவசுப்பிரமணியம் (தேவன்) ஆகியோ ரின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றி அஞ்சலி செலுத்தப்பட்டது.

நிகழ்வில் தமிழீழ விடுதலை இயக்கத்தின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பதில் தலைவர் சீ.வீ.கே.சிவஞானம், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன், ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் சி.வேந்தன், சமத்தவக் கட்சியின் பொதுச் செயலாளர் முருகேசு சந்திரகுமார், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் பாலச்சந்திரன் கஜதீபன், யாழ். மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராசா, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தவிசாளர் தியாகராஜா நிரோஷ், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், பொதுமக்கள் என பலர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ)

## கறுப்பு ஜூலையை தொடர்ந்து வந்த...

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியும் என்று நாம் நம்புகிறோம். பயனுனுதியுடைய அதிகாரப்பகிர்வு முறை நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். சமாதான உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதில் பல குறைபாடுகள் காணப்படுகின்றன.

'13 வது திருத்தம் கூட முழுமையாக நடைமுறைப்ப டுத்தப்படவில்லை. அந்த திருத்தம் இரு நாடுகளினதும் அரசாங்கங்களும் ஏற்றுக்கொண்ட ஒரு விடயம். 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளில் வெளியிடப்பட்ட கூட்ட றிக்கைகளில் இது பற்றி குறிப்பிடப்பட்டிருக்கிறது. அந்த திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தி அதன் மேல் கட்டியெழுப்பி அர்த்தமுடைய ஒரு அதிகாரப்பகிர்வு உருவாக்கப்படும் என்று அதில் கூறப்பட்டிருக்கி றது. அது இன்னமும் செய்யப்படவில்லை. அதை புதிய அரசியலமைப்பின் ஊடாகவோ அல்லது வேறு விதமா கவோ சமாதான உடன்படிக்கையின் அடிப்படையில் அர்த்தமுடைய அதிகாரப்பகிர்வு உருவாக்கப்பட வேண் டும்.

'தமிழரசு கட்சியை பொறுத்தவரை, சமஷ்டி முறை ஒன்றில்தான் அர்த்தமுடைய அதிகாரப்பகிர்வு இருக்க முடியும் என்று நம்புகிறோம். அந்த இலக்கை அடையும் வரை ஏற்கெனவே நடைமுறையில் இருந்துவரும் மாகா ணசபை முறை செயற்படுத்தப்பட வேண்டும். ஜனாதி பதி திசநாயக்கவுடன் சேர்ந்து நடத்திய செய்தியாளர்கள் மகாநாட்டில் இதைக் கூறியதற்காக பிரதமர் மோடிக்கு நாம் நன்றி கூறுகிறோம். மாகாணசபை தேர்தல்களை பின்போடுவதற்கு அரசாங்கம் எத்தனிக்கிறது என்று நாம் நம்புகிறோம். அந்த தேர்தல்கள் நடத்தப்பட வேண்டும்.

'இந்தியா மாத்திரமே இலங்கை தமிழர் பிரச்சினையில் எத்தகைய தீர்வு காணப்பட வேண்டும் என்பதை இலங்கை அரசாங்கத்துடன் இணங்கி, சர்வதேச உடன்படிக்கை ஒன்றும் இன்று வரையில் நடைமுறையில் இருக்கிறது. அதை முழுமையாக நடைமுறைப்படுத்தும் பொறுப்பு இந்தியாவுக்கு இருக்கிறது. அந்த பொறுப்பை நிறைவேற்ற வேண்டும் என்று இந்தியாவிடம் எதிர்பார்க்கின்றோம் என்று பிரதமர் மோடியிடம் கூறினோம்" என்று சுமந்திரன் கூறியிருந்தார்.

'இந்தியாவுக்கு மாத்திரமே இலங்கையில் தேசிய பாதுகாப்பு நோக்கிலான பார்வை இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். வேறு எந்தவொரு நாட்டுக்கும் தேசிய பாதுகாப்பு கோணத்தில் இலங்கையை அணுகுவதற்கு நியாயம் கிடையாது. இந்தியாவின் பாதுகாப்புக்கு முக்கியமானது என்ற அடிப்படையில் வேறு எந்த நாட்டை விடவும் இலங்கை இந்தியாவுக்கே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதில் நாம் தெளிவாக இருக்கிறோம். குறிப்பாக, வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இந்தியாவுக்கு அந்த உரிமை இருக்கிறது என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம்.

'சமாதான உடன்படிக்கை, இனப் பிரச்சினையை தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசாங்கத்தை மிகவும் அண்மையாகக் கொண்டுவந்த கொள்கை அடிப்படையிலான ஒரு ஆவணம் என்பதை ஏற்றுக்கொள்கிறோம். ஆனால், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கொண்டு வரப்பட்ட 13 வது திருத்தத்தை ஒற்றையாட்சி முறைக்குள் முடக்கியதால், உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு பல தசாப்தங்கள் கடந்த பின்னரும் கூட அந்த திருத்தத்தை நடைமுறைப்படுத்துமாறு இலங்கை அரசாங்கங்களை இந்தியா தொடர்ச்சியாக கேட்டுக் கொண்டிருக்க வேண்டிய அவல நிலையை காண்கிறோம். பாராளுமன்றத்துக்கு 13 வது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது அது ஒற்றையாட்சி முறைக்குள் இருப்பதால் மத்திய அரசாங்கத்துக்கும் மாகாணங்களுக்கும் இடையில் எந்தவொரு காரணத்துக்காகவும் மோதலோ அல்லது போட்டித்தன்மையோ உருவாக முடியாது என்று உயர் நீதிமன்றம் கூறியதே அதற்கு காரணமாகும்.

'சமாதான உடன்படிக்கையில் இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பாக பல விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தாலும் கூட, 13 வது திருத்தத்தை ஒற்றையாட்சிக்குள் முடக்கியதால் தீர்வைக் காண முடியாமல் இருக்கிறது. அதனால், தமிழ்க்கட்சிகளை புதுடில்லிக்கு அழைத்து, சமாதான உடன்படிக்கையை மீறாமல் அதேவேளை ஒற்றையாட்சி முறைக்கு அப்பால் சமஷ்டி ஆட்சி முறையை முழுமையாக அடையக் கூடியதாக - இந்தியாவும் ஏற்றுக் கொள்ளக் கூடிய பொதுநிலைப்பாடு ஒன்றை அடைவதற்கு உதவுமாறு பிரதமர் மோடியிடம் கேட்டுக் கொண்டோம்" என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கூறினார்.

## 82 மருந்தக...

இருப்பினும், 219 மருந்தகங்களின் உரிமங்கள் புதுப்பிக்கப்படுவது தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.

இவற்றில் 137 மருந்தகங்களில் முழுநேர மருந்தாளர்கள் நியமிக்கப்படாததால், அவர்கள் நியமிக்கப்படும் வரை உரிமங்கள் புதுப்பிக்கப்படாது. (அ)

## கிணற்றடியில்...

சடலம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டது. சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-05)

## 11எலும்புக்...

போதே சட்டத்தரணி வி.எஸ்.நிரஞ்சன் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

செம்மணி பகுதியில் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 01" மற்றும் "தடயவியல் அகழ்வாய்வுத்தளம் இல - 02" என நீதிமன்றினால் அடையாளப் படுத்தப்பட்ட மனித புதைகுழிகளில் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதன் போது நேற்று சனிக்கிழமை அகழ்ந்து எடுக்கப்பட்ட 09 எலும்பு கூட்டு தொகுதியுடன் 90 எலும்பு கூட்டு தொகுதிகள் முற்றாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன், இதுவரை 101 எலும்பு கூட்டு தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது-என்றார். (அ)

## இன அழிப்புக்கு...

தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இன அழிப்புக்கு பன்னாட்டுச் சுதந்திர நீதி பொறிமுறை ஊடாக மட்டுமே நீதியை வழங்க முடியும் என்பதை வலியுறுத்தி, வடக்கு, கிழக்கு சமூக இயக்கத்தின் ஏற்பாட்டில் குறித்த போராட்டம் இடம்பெற்றது.

யாழ்ப்பாணத்தில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு அண்மித்த பகுதியான, நல்லூர் வளைவு பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் பதாகைகளை ஏந்தி, இனப்படு கொலைக்கு சர்வதேச நீதி வேண்டி கோஷமிட்டவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் செல்வராஜா கஜேந்திரன், வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், காணாமல் ஆக்கப்பட்டோரது உறவுகள், சமூக மட்ட அமைப்பினர் மற்றும் பொதுமக்கள் பலர் போரட்டத்தில் கலந்துகொண்டனர்.

நீண்ட காலமாக தமிழ் மக்கள் மீது திட்டமிடப்பட்ட வகையில் நடத்தப்பட்டு வரும் இன அழிப்பிற்கு சர்வதேச நீதி கோரிய போராட்டமானது முல்லைத்தீவிலும் இடம்பெற்றுள்ளது.

முல்லைத்தீவில் மாவட்ட செயலகம் முன்பாக போராட்டம் இடம்பெற்றது.

போராட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை தபிசாளர் லோகேஸ்வரன், கரைதுறைப்பற்று

பிரதேச சபை உறுப்பினர் ஜூட்சன், வடக்கு, கிழக்கு சமூக இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் அன்புமணி லவகு சராசா, மீனவ ஒத்துழைப்பு இயக்கத்தின் உறுப்பினர்கள், காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

வடக்கு கிழக்கில் இடம்பெற்ற படுகொலைகள் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கு நீதி கோரியும், சர்வதேச நீதிப்பொறிமுறையை வலியுறுத்தி நேற்று கிளிநொச்சியிலும், கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக கப்பட்டது.

இதில் காணமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அரசியல் பிரமுகர்கள் என பலர் கலந்து கொண்டனர். (அ)

## தையிட்டி...

ஓர் இடத்தில் கட்டப்பட்ட விகாரையை அகற்றக்கோருவது நல்லிணக்கத்துக்குப் பாதகமா என கஜேந்திர குமார் கேள்வியெழுப்பியுள்ளார்.

பேரினவாதம் எப்போதும் தம்முடைய நிகழ்ச்சி நிரலை மாத்திரமே பார்ப்பதாக கஜேந்திரகுமார் குறிப்பிட்டார்.

தென்னிலங்கையில் வீதிகளை நிர்மாணிப்பதற்காகவும் மற்றும் வேறு பல விடயங்களுக்காகவும் சாதாரணமாக விகாரைகள் அகற்றப்பட்டுள்ளதாகவும் எனவே தையிட்டி விகாரையை அகற்றக் கோருவதனை மாத்திரம் ஏன் நல்லிணக்கத்துக்கு குந்தகம் விளைவிக்கும் விடயமாக பார்க்க வேண்டும் என கஜேந்திரகுமார் பொன்னம்பலம் கேள்வியெழுப்பியுள்ளார். (அ)

## மாகாண....

ஆகும். எனவே, வடக்கு, கிழக்கு உட்பட அனைத்து சபைகளுக்கும் அதி காரம் வழங்கப்படவேண்டும். மக்களின் ஜனநாயக உரிமை பாதுகாக்கப்பட வேண்டும்-என்றார். (அ)

## சர்வதேச...

மற்றும் வடக்கு மாகாண பனை தென்னைவள, அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்கள் இணைந்து நடத்திய மாகாண பனை எழுச்சி வாரத்தினை முன்னிட்டு எங்கள் வாழ்வியலில் பனை என்ற தொனிப்பொருளில் நடத்திய பனைசார் உறுப்பினர் பொருட்களின் கண்காட்சியும், விற்பனையும் யாழ்.நல்லூர் சங்கிலியன் பூங்காவில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வன்னி மாவட்டத்தின் கூட்டுறவு பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, யாழ்.மாநகர சபை உறுப்பினர் சு.கபிலன், வடக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் ந.திருலிங்கநாதன் உள்ளிட்ட பலரும் கலந்துக் கொண்டனர்.

இந்நிகழ்வில் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பனை உற்பத்தி துறையிலும் மாற்றமொன்று தேவை. அதற்கான ஆரம்பக் கட்டமாக இந்த கண்காட்சி அமையும் என நம்புகின்றேன். பனை எழுச்சி நிகழ்வை ஏற்பாடு செய்த அனைவருக்கும் நன்றிகள். பனை உற்பத்தி பொருட்களை காட்சிப்படுத்துகின்ற வர்களுக்கு வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பனை சம்பந்தப்பட்ட பொருட்களை நவீன பொருட்களாக மாற்ற வேண்டும். உற்பத்தி அதிகரிப்பு உள்ளிட்ட விடயங்களில் நவீன தொழில்நுட்பம் பற்றியும் அவதானம் செலுத்தப்பட வேண்டும்.

பனை உற்பத்தி பொருட்களை , இலங்கையிலுள்ள சர்வதேச விமான நிலையங்களிலும் காட்சிப்படுத்துவ தற்குரிய திட்டம் உள்ளது. ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர் என்ற வகையில் அதற்குரிய நடவடிக் கையை நான் மேற்கொள்வேன்.

பனை அபிவிருத்தி சபை பெருந்தோட்ட அமைச்சின்கீழ்தான் இருக்கின்றது. எனினும், பனை மரங்களில் யாழில்தான் உள்ளது. எனவே, அது எதிர்காலத்தில் யாழ்ப்பாணத்துக்கு வரக்கூடும்.

ஒரு கோடியே 50 லட்சம் பனை மரங்கள் உள்ளன. இவற்றை நாம் சரியான வகையில் பயன்படுத்கின் றோம்? உலக சந்தைக்கு ஏற்பட உற்பத் திகள் இடம் பெறுகின்றனவா? அதற்கு உற்பத்தியாளர்களுக்கு உரிய பங்களிப்பு கிடைக்கின்றனவா? இவை கேள்விக் குறியாகவே உள்ளது. எனவே, எமது அரசாங்கத்தின் கீழ் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேவேளை, கடலட்டை என்பது கறுப்பு தங்கம். அவற்றை பறிப்பதற்கு சதியும், சூழ்ச்சியும் நடக்கின்றது. எனினும், இந்த சதி வலைகளில் எமது அரசாங்கம் சிக்குவதில்லை. எமது கடல் வளங்கள் நிச்சயம் பாதுகாக்கப்படும் - என்றார். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு

# கடற்படையினரால் 65 மீனவர்கள் கைது!

## சட்டவிரோத மீன்பிடி குற்றச்சாட்டில்

கொழும்பு, ஜுலை 27

**கடந்த ஜுலை 9 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரையான 15 நாட்களில் கடற்பரப்பில் மேற்கொண்ட சோதனை நடவடிக்கைகளில், தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளை பயன்படுத்தி மீன்பிடியில் ஈடுபட்ட 65 நபர்களை கடற்படையினர் கைது செய்துள்ளனர்.**

மேலும் அவர்களால் பயன்படுத்தப்பட்ட 16 டிங்கி படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

அதன்படி, கிழக்கு கடற்படை கட்டளை, வடமேற்கு கடற்படை கட்டளை மற்றும் வடமத்திய கடற்படை கட்டளை ஆகியவற்றால் திருகோணமலை, சல்பேரு, உப்புறல், பொல்மல்குடா, நிலாவெலி, மலைமுந்தால், புத்தளம், இப்பன்தீவு மற்றும் மன்னார் வடக்கு ஆகிய கடலோர மற்றும் கடல் பகுதிகளை உள்ளடக்கிய வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் விளைவாக, தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளைப் பயன்படுத்துதல், மின் விளக்குகளைப் பயன்படுத்துதல் மற்றும் செல்லுபடியாகும் உரிமங்கள் இல்லாமல் கடலட்டைகள் மற்றும் சிப்பிகள் கொண்டு செல்வது போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளுடன் தொடர்புடைய 65 சந்தேக நபர்களையும், 16 டிங்கி படகுகளையும், 5 தடைசெய்யப்பட்ட மீன்பிடி வலைகளையும் கடற்படையினர் கைப்பற்றினர்.

மேலும், கடற்படையால் கைது செய்யப்பட்ட குறித்த சந்தேக நபர்கள், தடைசெய்யப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் மீன்பிடி படகுகளுடன் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக திருகோணமலை, ஈச்சிலம்பட்டு, புத்தளம், குச்சவெளி, கோட்பே, மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய இடங்களில் உள்ள மீன்வள மற்றும் நீர்வளத் துறை அலுவலகங்களில் ஒப்படைக்கப்பட உள்ளனர். (அ)

## முல்லைத்தீவில் மீனவர் மாயம்!

முல்லைத்தீவு, ஜுலை 27

முல்லைத்தீவு கொக்கிளாயில், கடற்றொழிலுக்குச் சென்ற ஒருவர் காணாமல் போன நிலையில், தேடுதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

நேற்று முன் தினம் அதிகாலை 4.30 மணியளவில் கடற்றொழிலுக்கு 5 பேர் சென்ற நிலையில், ஒருவர் காணாமல் போயுள்ளார்.

தொழிலுக்கு போய் கடலில் இறங்கியவருக்கு என்ன நடந்தது என்று தெரியாத நிலையில் கிராம மக்கள் மற்றும் கடற்தொழிலாளர்கள் இணைந்து தேடி வருகின்றனர்.

குறித்த சம்பவத்தில் கொக்குளாய் முகத்துவாரம் பகுதியில் இருந்து தொழிலை மேற்கொண்டு வரும் 23 வயதான பொன்னம்பெருமகே ஜெகான் நதிஅருண் என்னும் இளைஞர் காணாமல் போயுள்ளார்.

இது தொடர்பில், கொக்குளாய் பொலிஸ் நிலையத்தில், நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்டது.

எனினும் நேற்று வரை சம்பவ இடத்திற்கு பொலிஸார் வருகை தரவில்லை என காணாமல் போன இளைஞனின் தந்தை தெரிவித்துள்ளார்.

அத்துடன் காணாமல் போன இளைஞனின் படம் வீட்டில் வைக்கப்பட்டு, மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டுள்ளது. (அ)

## 4ஆயிரம் போலி யுவான் நாணயத்தாள்கள் மீட்பு

இரத்தினபுரி, ஜுலை 27

இரத்தினபுரி, திருவனா கெடிய பகுதியில் 4000 போலி 100 யுவான் நாணயத்தாள்களை வைத்திருந்த சந்தேகநபர் ஒரு வர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் கஹவத்தை பொலிஸ் விசேட அதிரடிப் படை முகாமைச் சேர்ந்த அதி காரிகளால் கைது செய்யப்பட் டுள்ளார்.

28 வயதுடைய சீனப் பிரஜை ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, இரத்தினபுரி, திருவனாகெடிய பகுதியில் 6 கிலோ 32 கிராம் போலி இரத்தினக் கற்களுடன் மற்றொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டார்.

சந்தேக நபரிடமிருந்து ஒரு மடிக்கணினி, ஒரு ஐபாட் மற் றும் ஒரு தொலைபேசி ஆகி யன மீட்கப்பட்டன.

சந்தேக நபர் 52 வயதுடைய சீனப் பிரஜை என பொலிஸார் தெரிவித்தனர். (எ)

## இலஞ்சம் கோரிய கலைஞர் கைது

கொழும்பு, ஜுலை 27

இலஞ்ச ஊழல் குற்ற விசாரணையிலிருந்து விடுவிப்பதற்காக இருவரிடம் 60 ஆயிரம் ரூபாய் பணத்தை இலஞ்சமாக வங்கிக்கணக்கில் வைப்பிலிடுமாறு கோரிய கலைஞர் ஒருவர் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதிபர் ஒருவரும் விமானப்படை சிப்பாய் ஒருவரும் முறைப்பாடளித்திருந்த நிலையில் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

முறைப்பாட்டாளரான அதிபருக்கு எதிராக ஏற்கனவே இலஞ்ச ஊழல் விசாரணை பிரிவில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில், குறித்த விசாரணைகளை நிறுத்துவதாக தெரிவித்து இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் கடிதம் மற்றும் விசாரணைக்காக முன்வைக்கப்பட்ட ஆவணங்களை வழங்குவதாகவும் மேற்படி சந்தேகநபர் தெரிவித்துள்ளார்.

அத்தோடு குறித்த நடவடிக்கைகளுக்காக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு அதிகாரிகளுக்கு வழங்குவதற்காக தனது வங்கிக் கணக்கில் 30 ஆயிரம் ரூபாய் பணத்தை வைப்பில் இடுமாறு சந்தேகநபர் கோரியுள்ளார்.

அதேபோல் விமானப்படை சிப்பாய்க்கு எதிராக முன்னெடுக்கப்பட்டிருந்த ஊழல் குற்றச்சாட்டு தொடர்பில் அவரை கைது செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அச்சுறுத்தி, உடனடியாக கைது நடவடிக்கையை இடைநிறுத்த அதிகாரிகளுக்கு வழங்க 30 ஆயிரம் ரூபாய் பணத்தை வங்கிக் கணக்கில் வைப்பிலிடுமாறு கோரியுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர். (எ)

## மாதா சொரூபத்தை உடைத்து சேதப்படுத்திய 8 பேர் கைது!

யாழ்ப்பாணம், ஜுலை 27

ஊர்காவற்றுறை மெலிஞ்சிமுனை நாரயம்பதி மாதா கோயிலில், மாதா சொரூபத்தை, மதுபோதையில் உடைத்து சேதப்படுத்திய சந்தேகத்தின் பேரில் வேலணையை சேர்ந்த 8 பேர் ஊர்காவற்றுறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அரசியல் கட்சி ஒன்றின் தீவக அமைப்பாளர் உள்ளடங்கலாக 8 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்று முன் தினம் மதுபோதையில் இருந்த 20 பேரடங்கிய குழுவினர் மாதா சொரூபத்தை உடைத்து சேதப்படுத்தியதாக ஆலய நிர்வாகத்தினர் ஊர்காவற் றுறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தனர்.

அதற்கமைய, தற்போது 8 பேர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையோர் தேடப்பட்டு வருகின்றனர்.

இந்தக் குழுவினர் ஆலயப் பகுதியில் இருந்து மது அருந்தியதாகவும், அவ்வாறான சந்தர்ப்பத்தில், சுற்றுலாவுக்காக வருகை தந்த சுற்றுலாப் பயணிகளுடன் முரண்பட்டதாகவும் தெரிய வருகின்றது.

இந்த நிலையில் மதுபோதையில் இருந்த குழுவினர் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்ட சுமார் 50 இலட்சம் பெறுமதியான மாதா சொரூபத்தை உடைத்து சேதமாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

அந்தவகையில், துரிதமாக செயற்பட்ட பொலிஸார் தற்போது 8 பேரை கைது செய்துள்ளனர். (அ-3-5)

## வெளிநாடுகளில் மறைந்திருக்கும் 67 இலங்கையர் மீது நடவடிக்கை

கொழும்பு, ஜுலை 27

நாடு கடந்த குற்றவியல் வலையமைப்புகளுக்கு எதிரான தீவிர நடவடிக்கையின் ஒரு பகுதியாக, வெளிநாடுகளில் மறைந்திருக்கும் 67 இலங்கையர்க ளுக்கு சர்வதேச காவல்துறையின் சிவப்பு அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளதாக பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

இந்த நபர்களில் சிலர் போலி கடவுச்சீட்டுக்களைப் பயன்படுத்தி கண்டறிதலைத் தவிர்க்க முயற்சிப்பதாகவும், இதனால் அவர்களின் சரியான இருப்பிடத்தைக் கண்டுபிடிப்பது கடினமாக இருப்பதாகவும் அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இருப்பினும் அவர்களில் பலர் தற்போது எந்தெந்த நாடுகளில் பதுங்கியிருக்கிறார்கள் என்பதை புலனாய்வுத்துறை வெளிப்படுத்தியுள்ளது.

அவர்களைக் கைது செய்து நாடு கடத்துவதை எளிதாக்குவதற்காக இலங்கை அரசாங்கம் தற்போது அந்த நாடுகளின் வெளியுறவு அமைச்சுகளுடன் நெருக்கமாகப் பணியாற்றி வருவதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (அ)

## 4 வயது சிறுமி உயிரிழப்பு

கொழும்பு, ஜுலை 27

கொட்டகலை கிராம உத்தியோகத்தர் பிரிவுக்குட்பட்ட ரொசிட்டா தோட்டத்தில் நேற்று பிற்பகல் 04 வயதுடைய சிறுமி நீரில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்துள்ள சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

தனது வீட்டிலிருந்து நிகழ்வொன்றுக்குச் செல்லும் பகுதியில் டெவன் நீர்வீழ்ச்சியுடன் இணையும் ஆற்றில் விழுந்து அடித்துச் செல்லப்பட்டுள்ளார். சுமார் 200 மீற்றளவில் அடித்துச்செல்லும் போதே அயலவர்கள் அவதானித்து சிறுமியை மீட்டு கொட்டக்கலை வைத்தியசாலைக்குச் கொண்டுச்சென்றபோது சிறுமியை காப்பாற்ற முடியவில்லை.

குடும்பத்தில் இரண்டாவது பிள்ளையான முன்பள்ளி செல்லும் கிறிஸ்ஸிகா நெகோமி என்ற சிறுமியே உயிரிழந்துள்ளார்.

தற்போது பிரேத பரிசோதனைக்காக சிறுமியின் உடல் கிளங்கன் மாவட்ட ஆதார வைத்தியசாலைக்குச் கொண்டு செல்லப்பட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திம்புள்ள பத்தனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

மழையுடனான காலநிலையினாலே ஆற்று நீர் மட்டம் அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (அ)

## வத்திராயன் பிரதேசத்தில் பெருந்தொகை கஞ்சா மீட்பு!

வடமராட்சி கிழக்கு வத்திராயன் உதயசூரியன் மைதானத்தின் அருகாமையில் நேற்று முன்தினம் இரவு 10 மணியளவில் பெருந்தொகையான கேரளா கஞ்சா மீட்கப்பட்டுள்ளது .

புலனாய்வு துறையினருக்கும் கடற்படையினருக்கும் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் நேற்றைய தினம் மருதங்கேணி பொலிசாரால் மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கையின்போது வத்திராயன் பகுதியில் வைத்து கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இச் சுற்றி வளைப்பில் சந்தேக நபர் ஒருவரும் 34 பொதிகள் அடங்கிய 60.256 கிலோ கேரளா கஞ்சாவும் மீட்கப்பட்டுள்ளதுடன் ஏனய சந்தேக நபர்கள் தப்பி சென்றுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மருதங்கேணி பொலிசார் மேற்கொண்டு வருவதுடன் கைப்பற்ற பட்ட போதைப்பொருளினையும் சந்தேக நபரையும் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தியுள்ளனர். (அ)

## 3,296 பேர் கைது!

கொழும்பு, ஜுலை 27

கடந்த 11 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை நாடு முழுவதும் பொலிஸார் நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போது போதைப்பொருட்களை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 3,296 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதன்படி கடந்த 7 நாட்களில் நாடு முழுவதும் 3,300 சுற்றிவளைப்புகள் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதன்போது ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 998 பேரும், ஐஸ் ரக போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் 1,128 பேரும், கஞ்சா போதைப்பொருளை வைத்திருந்த குற்றச்சாட்டில் 1,039 பேரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.07.2025 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org